68

Regd. No. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

HIFAZATH - UL - ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 3. | ஹிஜ்ரி 1350 துல்கஅதா 1932 ஏப்ரல்மீ | இதழ் 4

உள்ளடக்கம் — பக்கம்

	உள்ளடக்கம்	பக்கம்
1.	ஸூரத்துல் லைல்	145
2.	நாயக வாக்கியம் ...	150
3.	பரிசுத்த வேதங்கள் ...	152
4.	இதர மார்க்கங்களைப் பார்க்கினும் இஸ்லாம் சிறந்திருப்பதின் காரணம் ...	155
5.	முஸ்தபா கமாலின் விபரீதத் தலையீடு ...	159
6.	கிறிஸ்தவப் பிரசாரத்தின் போக்கு ...	162
7.	இஸ்லாமிய ஷரீஅத்தில் தொழிலின் மேன்மை ...	164
8.	ஏகத்துவ வாதிகளின் பெருநாள் ...	168
9.	எங்கனம் ஒற்றுமை ஏற்படப்போகிறது? ...	171
10.	சீன முஸ்லிம்களின் நிலைமை ...	177
11.	இஸ்லாத்தின் மேன்மை ...	179
12.	முஸ்லிம்களது வீழ்ச்சிக்குக் காரணம் ...	181
13.	இருபதாமாண்டு பூர்த்திவிழா ...	184
14.	ஆராய்ச்சிமேடை ...	185
15.	ஈதுல்அல்ஹா ...	187
16.	உலுஹிய்யா ...	189
17.	ஆசிரியர் குறிப்பு ...	191

8 APR 1932

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	...	ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு	...	,,	4 0 0
தனிப் பிரதி	...	,,	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரர்ராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரேபக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

48, அங்கப்ப நாய்க்கன் தெரு,

G. T. மதராஸ்.

حفاظة الإسلام مدراس

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவீ)

மலர் 3	ஹிஜ்ரி 1930 துல்கஅதா மீ 1932ஞு எப்ரல் மீ	இதழ் 4

ஸூரத்துல் லைல்.

1. இருளுடைய தாகும்போது இரவின்மீது பிரமாணமாக,

2. மேலும் வெளிச்சமாகும்போது பகலின் மீது பிரமாணமாக,

3. இன்னும் ஆணையும் பெண்ணையும் படைத்தவன்மீதும் பிரமாணமாக,

4. நிச்சயமாக (மானிடர்களே) உங்களுடைய முயற்சியானது பல்வேறு வகைகளாக இருக்கின்றது.

5. ஆதலின் எவனொருவன் அல்லாஹ்வின் பாதையில் கொடுத்து அச்சப்பாட்டை மேற்கொள்கின்றானோ,

6. மேலும் நல்ல விஷயத்தை உண்மை காண்கின்றானோ

7. நாம் அவனுக்குப் பாதையை இலேசாக்கி விடுவோம்.

8. இன்னும் எவனொருவன் உலோபித்தனமாக யிருந்து மறுமையை லக்ஷியம் செய்யாதவனாக இருக்கின்றானோ,

9. மேலும் நல்ல விஷயத்தைப் போய்யாக்கிவைக்கின்றானோ

10. நாம் அவனுக்கு (பாதையை) கஷ்டமாக்கி வைப்போம்.

11. மேலும் (மரணத்திற்குப் பின்) அவனுடைய பொருள் அவனுக்குப் பிரயோசனப் படமாட்டாது.

12. நிச்சயமாகவே வழி காண்பிப்பது நம் மீதாயிருக்கும்.

13. மேலும் திட்டமாக இம்மை, மறுமை (இவ்விரண்டும்) நம்முடையதாகவே இருக்கின்றன.

14. ஆதலின் ஜ்வாலை விட்டெரிகின்ற நெருப்பைக் கொண்டு உங்களுக்கு அச்சமூட்டுகின்றேன்.

15. அதில் கொடியவன்தான் புகுவான்.

16. அவன் (உண்மை மார்க்கத்தை)போய்யாக்கி வைத்து முகத்தைத் திருப்பிக்கொள்பவன்,

17. மேலும் மிகப் பேணுதலுடையோர் அதை (நெருப்பை) விட்டு விலகியிருப்பார்.

18. அவர் (தன் பாக்கியங்களை) தூய்மை படுத்துவதற்காக பொருளைக் கொடுப்பவர் ;

19. மேலும் எந்த மனிதனுக்கும் அவர் மீது பகரமளிக்கும்படியான யாதொரு நன்றியுமில்லை.

20. அவரோ உயர்த்தியாகிய தன் நாயனின் திருப்திக்காகச் செய்து விடுகின்றார்.

21. மேலும் அவர் சடுதியில் சந்தோஷமாய்விடுவோர்.

[அதாவது இருளுடையதாய இரவின் மீதும், வெளிச்சத்தைக் கொடுக்கக்கூடிய பகலின்மீதும் பிரமாணமாக; இன்னும் ஆண் பெண் இவ்விரண்டினங்களையும் படைத்தவனாகிய அல்லாஹ்வின்மீதும் பிரமாணமாக, ஏ! மானிடர்களே! உங்களுடைய கருமம், பராக்கு முதலிய யாவும் பலவாறாக இருக்கின்றன; ஆதலின் எவனொருவன் தன் ஐஸ்வரியங்களை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்தும், தன் மனோ இச்சைகளை விட்டுத் தவிழ்ந்தும் நடக்கின்றானோ, இன்னும் நபிமார்கள் கொண்டுவந்த வேதங்களை ஒப்புக்கொண்டு நன்மை புரிவதற்குள்ள நற்கூலி மறுமையில் கிடைக்குமென்னும் ஆதரவோடிருக்கின்றானோ, அவனுக்கு இம்மை மறுமை இவ்விரண்டினுடைய காரியாதிகளை பலவாறு சுலுவாக்கி வைத்து விடுவோம்; எவனொருவன் தன் ஐஸ்வரியங்களை ஆண்டவன் பாதையில் செலவு செய்யாமலிருப்பதுடன் மறுமையின் காருண்யங்களையும் அலக்ஷியமாக நினைக்கின்றானோ, இன்னும் நபிமார்கள் கொண்டுவந்த மார்க்கங்களைப் பொய்யாக்கி வைக்கின்றானோ அவனுக்கு கஷ்டத்தின் பாதையைக் காண்பிப்போம்; அதனால் அவன் பெரும் கஷ்டமடைய நேரிடும்; மரணத்திற்குப் பின் அவனுடைய ஐஸ்வரியம் யாவும் எவ்வகையான பிரயோசனப்படவு மாட்டாது. வழி காண்பிப்பதும், நன்மை தீமை இவைகளை அறிவிப்பதும் நம் மீதுள்ளதாகும். இம்மை மறுமை இவ்விரண்டின் அதிகாரமும் நம் கைவசமிருக்கின்றது. இவ்விரண்டில் எதை நாடுகின்றானோ அன்னோனுக்கு அதை அளிப்பேன். மேலும் ஜ்வாலையுடைய நெருப்பைக் கொண்டு அச்சமூட்டுகின்றேன்; ஆண்டவனுடைய கட்டளையை பொய்யாக்கி வைத்து அதற்கு மாறு செய்பவன் அதில் அவஸ்தைப் படுவான்; ஆண்டவனுக்குப் பயந்து நடப்பதின் அறிகுறியாகத் தன் ஐஸ்வரியங்களை ஆண்டவன் பாதையில் செலவு செய்பவர் அதிசீக்கிரம் அந்நெருப்பை விட்டுத் தவிழ்ந்துக் கொள்வார். அவர் அவ்வாறு தன்முதலைக் கொடுப்பதற்கு யாருடைய உபகாரமும் அவர் மீது உண்டாயிருக்கவில்லை. ஆனால் ஆண்டவனின் பொருத்தம் விருப்பம் இவைகளை உத்தேசித்தே அவ்வாறு செலவு செய்கின்றார். இவ்வாறு இப்பூவுலகின்கண் செலவு செய்ததற்குப் பகரமாய் மறுமை நாளில் அளவற்ற மாபெரும் காருண்யங்களை ஆண்டவன் அளிப்பான்; அவர் அதை சந்தோஷத்தோடு ஏற்று மகிழ்வெய்துவார் என்பதே.]

இவ்வத்தியாயம் மக்கீயோம். இதன் ஆரம்பத்தில் 'லைல்' எனக் கூறப்பட்டிருக்கிறது. லைல் என்பது இரவுக்குச் சொல்லப்படும். இவ்வத்தியாயத்தில் மானிடர்கள் செய்யும் நன்மை தீமைகளை பாகுபடுத்தி குறிப்பிட வேண்டுவது நோக்கமாதலின் வணக்கம் புரிந்து புண்ணியத்தைத் தேடவேண்டியதும், திருட்டு, களவு, கெடுதி முதலாய துர்கிர்த்தியங்கள் நடை பெறுவதும் மிகுதமாக இரவில் ஏற்படுவதால் அவ்விரவின் மீது பிரமாணஞ் செய்யப்பட்டிருக்கிறது. ஆதலால் இவ் வத்தியாயம் "ஸூரத்துல் லைல்" என்னும் திருநாமத்தோடு வழங்கப் பெறுகின்றது.

இவ்வத்தியாயம் அருளப்பட்டதின் காரணமாவது:—சிறப்புத் தங்கிய மக்கமா நகரின்கண் வதிந்துள்ள தலைவர்களில் இரண்டிபேர் பெரும் ஐஸ்வரியவான்களாக இருந்தனர். (1) ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி), (2) உமைய்யாபின் கல்ப். இவர்களில் ஒவ்வொருவரும் பல்வேறு வழிகளில் தங்கள் ஐஸ்வரியங்களை செலவிட்டுக் கொண்டிருந்தனர். உமைய்யா என்பவர் தன் ஐஸ்வரியம் முதலிவைகளின் பராமரிப்புக்கென்று 12ஏஜெண்டுகளை ஏற்பாடு செய்து, வேளாமை புரிவது, கனிவர்க்கங்களை மேன்பார்ப்பது, வர்த்தகம் புரிவதில் கொள்முதல் வித்து முதல் செய்வது, முதலாய காரியங்களில் ஈடுபட்டிருக்கச் செய்தல், தொலை தூரங்களுக் கனுப்பிவைத்தல் முதலாய தனித்தனியான இலாக்காக்களாக வகுத்து ஒவ்வொருவரிடமும் ஒப்புவித்திருந்தார். இதனால் அளவற்ற ஐஸ்வரியங்கள் அவரிடமிருந்தும் அதில் ஒரு பைசா கூட ஏழைகளுக்கு தர்மஞ் செய்யாத லோபியாக விருந்தார். அவரின் வேலைக்காரர்களில் ஒருவன் ஏதோ சந்தப்பிர்த்தில் ஏழை

களுக்கு ஒரு பை கொடுத்து விடுவதைப் பார்ப்பாராயின் அவனைக் கடிந்து பேசி அவ் வேலையை விட்டு நீக்கி விடுவார். இவ்வாறு னுத்தனுக இருப்பதைப் பார்த்து "எழைக ளுக்கு அவர்களின் தேவைகளைக் கொடுத்து மறுமைக்காக வேண்டி புண்ணியந் தேடிக் கொள்ளலாகாதா" வெனஅவரிடம் கேட் டால், முதலாவது மறுமை என்பதுஎங்கிருக் கின்றது? அப்படி இருப்பதாக வைத்துக் கொண்டபோதிலும் நான் அளவற்ற ஐஸ் வரியங்களைசம்பாத்தியஞ் செய்துவைத்திருப் பதே எனக்குக் போதுமாகும்; சுவர்க்கமும் அதிலுள்ள காருண்யங்களும் எனக்குத் தே வை இல்லை; எழைகட்கும் வகையற்றோருக் கும் தம்மீதுஆசையை உண்டுபண்ணி முஹம் மது (ஸல்) தன் பக்கல் சேர்த்துக் கொள்கின் றூர்;ஆதலின் அதைப் பற்றி எனக்கு எவ்வித லெக்ஷியமும் இல்லை என தைரியமாகக் கூறு வான். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களும் அவ னுடைய ஏஜென்டுகளில் ஒருவராக இருந்தார் கள்; அவர்கள் மறைமுகமாக இஸ்லாத்தைத் தழுவி இருந்தார்கள்; இது செய்தி அவனு குத் தெரிந்தவுடன் அவர்களைப் பதவியிலிருந் து நீக்கி அவர்களுடைய பொறுப்பிலிருந்த பொக்கிஷம், விக்கிரகாலயத்தின் அதிகாரம் முதலியவைகளை வேறொருவரிடம் ஒப்புவித்து விட்டு, தன்னருகாமையி லழைத்து நீர் யாரை வணங்குகின்றீர் எனக்கேட்டதற்கு, முஹம்மது (ஸல்) அவர்களின் ஆண்டவனை வணங்குவதாக பிலால் (ரலி) பதில் கூறினூர் கள். இது கேட்டு அம்மூடன் சினங்கொண்டு அம்மார்க்கத்தை விடாதிருப்பாயாகில் உன் னைக் கொன்று விடுவேன் எனப் பயமுறுத் தினுன். "நான் அந்த தூய்மையான மார்க் கத்தைவிட்டுத் திரும்ப முடியாது; நான் உன் அடிமையாக இருப்பதால் தாம் நாடியதை செய்து கொள்ளலாம் எனத்தைரியமாகக் கூறினூர்கள்.இதைக்கேட்டு அப்பாவி கோப மேலிட்டவனுக பிலால் (ரலி) அவர்களுக்கு அளவற்றகஷ்டசங்கடம் கொடுக்கும்படி தன் வேலையாட்களுக்குக் கட்டளை பிறப்பித்தான். அவ்வாறே பகல் முழுவதும் வெயிலில் போ ட்டுஅளவற்றதுன்புறுத்தியும் இரவானவுடன் கைகால்களைக் கட்டி இருட்டறையில் அடைத் துத் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக் கும்படிசெய்தான். இத்தகைய கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு என் எஜமான் "ஆண்ட வன் ஒருவனே" எனக் கூறிக்கொண்டிருப்பார் கள். இந்நிலைமையில் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித் தீக் (ரலி) அவர்கள்ஒரு இரவில் அவ்வழியே சென்றூர்கள். அதுபொழுது அம் மூதேவி யின் வீட்டிலிருந்துஅழும் சப்தம் வருவதைக் கேட்டு இவ்வீட்டில் யாது சம்பவம் நிகழ்ந் துள்ளன; இது யாருடைய குரலோசை யாகு மெனக் கேட்டார்கள். பிலால் என்னும் ஒரு அடிமையின் சப்தமாகும்; அவர் ஹிம்சிக்கப் படுவதுகொண்டு ஏற்படும் அழுகை சப்தமா கும் எனக் கூறினூர்கள். அதனுல் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அளவற்ற மன வருத்தம் ஏற்பட்டது; அதிகாலையில் அவன் வீட்டிற்குச் சென்று ஆண்டவனுக்குப் பய ந்து நடந்துக்கொள்; உம்மால் ஹிம்சிக்கப் படுபவர் சன்மார்க்கத்தைப் பின்பற்றி நடக் கும் ஓர் உண்மை முஸ்லிமாக இருக்கின்றூர்; அவர் அல்லாஹ்வின் பொருத்தம் விருப்பம் இவைகளை தெரிந்துக்கொண் டிருக்கின்றூர்; ஆதலின் அவர் உம்மிடம் இருப்பதைப் பெரும் பாக்கியமெனக் கருதி ஒழுங்கான முறையில் நடந்துக்கொள்வீராகில் மறுமை யில் அஃது உமக்குப் பெரும் பிரயோசனமளி க்கும் எனக் கூறினூர்கள். அதற்கு அவன் பரிகாசமாகப் பலவாறு பதில் கூறினுன். மேலும் ஹஸ்ரத் அவர்கள், "என் வார்த் தையைக் கேள்; சக்தியற்ற அன்னவர்மீது அநியாயம் புரியாதே" எனக் கூறியதைக் கேட்டு, உங்களுக்கு பரிதாபம் ஏற்பட்டிருக் கின் தாங்களும் ஐஸ்வரியவானுக இருப்ப துடன் மறுமையின்மீதும் உறுதிகொண்ட வர்களா யிருப்பதால் அவ்விடத்திலுள்ள அளவற்ற புண்ணியத்தைப் பெற்றுக்கொள் வான் வேண்டி இந்த அடிமையை என்னிட மிருந்து கிரயத்திற்கு வாங்கிக் கொள்ளுங் கள் எனக் கூறினுன். இதையே ஹஸ்ரத் அவர்களும் எதிர்பார்த்துக் கொண்டிருந் தார்களாதலின் மிக மிக சந்தோஷமடைந்து இதற்குப் பகரமாக நீர் என்ன கேட்டாலும் கொடுக்கத் தயாராக இருக்கின்றேன் எனக் கூறினூர்கள். அம்மடையனே ஹஸ்ரத் அவர் களை இவ்விஷயத்தில் ஏலாதவர்களாகச் செய்துவிட வேண்டுமென எண்ணங்கொண்டு "இந்த அடிமையை வாங்கிக்கொள்ள இஷ்ட மிருப்பின் உங்களிடம் வியாபாரத்தில் தேர் ச்சி பெற்றிருப்பவனும்; ரூ. 2000 வைத்திருக் கக் கூடியவனுமாகிய ரூம் தேசவாசியாகிய

நஸ்தாஸ் என்பவனைப் பகரமாகக் கொடுத்துப் பிலாலை வாங்கிக் கொள்ளுங்கள்' எனக் கூறினன். ஹஸ்ரத் அவர்கள் ஆண்டவனது விருப்பத்திற்காகத் தங்கள் உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்ததினல் அம் மூதேவி கேட்டதை அன்போடு ஒப்புக்கொண்டு 40. எடை தங்கத்தை மேலதிகமாகவும் நஸ்தாஸுடன் கொடுத்து ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களைச் சிறைச்சாலையிலிருந்துவெளியாக்கிக் கொண்டு வந்தார்கள். அம்மடையனே ஹஸ்ரத் ஸித்தீக் (ரலி) அவர்களைப் பார்த்து "இவருக்கு அளவற்ற புத்தி சாதுர்ய மிருந்தும் இவ்விஷயத்தில் மிக ஏமாந்துபோய் தனக்கு பெரும் நஷ்டத்தை விளைவித்துக் கொண்டுவிட்டார்; இவ்வாருள்ள அடிமையை யாதொருப் பிரதி பிரயோசனமின்றி எனக்களிக்கப்பட்டாலும் நான் ஒருக்காலும் ஒப்புக்கொள்ளமாட்டேன்; இந்நிலைமையில் மகா புத்திசாலியாயும் பெரும் பணம் வைத்திருப்பவருமாகிய ஒருவருடன் நாணயங்களையும் கொடுத்து வாங்கிக்கொண்டது எவ்வளவு தூரம் புத்திசாலித்தனமாகயிருக்கிறது" என தன் அருகாமையிலிருப்பவர்களிடம் கூறினன். இதுகேட்டு "இதைவிட பதின்மடங்கு அதிகமாகக் கேட்டபோதிலும் நான் கொடுத்துவாங்கியே தீர்வேன்" என ஹஸ்ரத் அவர்கள் கூறினர்கள். கடைசியாக பிலாலை நாயகம் (ஸல்.) அவர்கள் சமூகம் கொண்டு சேர்த்து நடைபெற்ற சம்பவங்களைக் குறிப்பிட்டு ஆண்டவனுக்காக உரிமை விட்டுவிட்டேன் என ஸித்தீக் அக்பர் (ரலி) அவர்கள் கூறினர்கள். இதுகேட்டு நாயகம் (ஸல்.) சந்தோஷமடைந்தார்கள். (சுப்ஹானல்லாஹ்) இஸ்லாத்தின் ஆரம்பத்தில் முஸ்லிம்கள் ஏலாத்தவர்களாகவும் சக்தியற்றவர்களாகவுமிருந்தக்கால் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்கள் தங்கள் ஐஸ்வரியங்களை ஆண்டவனுடைய பொருத்தத்திற்காக நாயகம் (ஸல்.) அவர்களது தேள்வைக்காகவும், குப்பார்களின் கையிலிருந்து முஸ்லிம்களை விடுதலை செய்வதற்காகவும் இதர காரியங்களுக்காகவும் செலவிட்டு மறுமையில் கிடைக்கும்படியான அளவற்ற பாக்கியங்களை சேமித்தார்கள். இதே விதமாக இஸ்லாம் மதத்தைத் தழுவியதற்காக தங்கள் எஜமான்களிடம் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ஏழு அடிமை அடியாட்களையும் கிரயம் கொடுத்து வாங்கி விடுதலை செய்தார்கள். அதில் பனூ ஜத்ஆன் கூட்டத்தாரின் அடிமையாகிய 'புஹைரா' என்பவரை ஒரு ராத்தல் தங்கம் கொடுத்து வாங்கி உரிமை யாக்கியது குறிப்பிடத் தக்கதாகும். இவ்வாறு பலரை உரிமையாக்குவதிலும் நற்கருமங்களில் செலவு செய்வதிலும் அவர்களிடமிருந்த 40 ஆயிர திர்ஹத்தில் 13 ஆண்டிற்குள் செலவானது போக 6000 திர்ஹம் மட்டும் மிஞ்சி இருந்தது. அதையும் மதீன யாத்திரையிலும் மஸ்ஜித நபவீ கட்டுவதற்கு பூமி வாங்குவதிலும் மற்றும் நற்காரியங்களிலும் செலவு செய்து விட்டார்கள். முடிவாக ஹஸ்ரத் ஸித்தீக் (ரலி) அவர்களின் ஐஸ்வரியங்கள் யாவற்றும் அல்லாஹ்வின் பாதையில் செலவிடப் பட்டுப் போய் அவர்கள் ஏழையாக ஆய்விட்டார்கள். இந்நிலைமையில் ஓர் கம்பளியை சட்டையைப் போன்று கழுத்தில் போட்டு ஈச்ச முள்ளால் கோர்த்து ஒன்று சேர்த்து வைத்தவர்களாக நாயகம் (ஸல்) அவர்கள் சமுக மெய்தினர்கள். அது சமயம் ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை) இறங்கி அபூபக்ர் (ரலி) பெரும் ஐஸ்வரியவானகவும் ஸ்ரீமானகவும் இருந்தவர்கள் எக்காரணத்தினல் ஏழைகளைப் போல் ஆடை அணிந்து உட்கார்ந்திருக்கின்றூர்களெனக் கேட்டமைக்கு, அவர்கள் தங்களிட மிருந்த யாவற்று தனங்களையும் தமக்காக யாதொன்றையும் வைத்துக் கொள்ளாமல் எனக்காக செலவிட்டு விட்டார்கள் என நாயகம் (ஸல்) அவர்கள் கூறினர்கள். "ஆண்டவன் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களுக்கு சலாம் சொல்லும்படி செய்து இக்கஷ்ட நிலைமையிலும் ஆண்டவன் மீது சந்தோஷமாக இருக்கின்றூரா அன்றி மனச் சஞ்சல மடைகின்றூரா எனக் கேட்கின்றுன்" என்பதாக ஜிப்ரயீல் (அலை) அறிவித்ததைக் கேட்டவுடன் ஸித்தீக் (ரலி) அவர்கள் ஆச்சரியமடைந்து என்னுடைய நாயன் மீது நான் எப்படி வெறுப்புக் கொள்ளப் போகிறேன்; அவனல் ஏற்பட்டவைகள் யாவற்றின் மீதும் நான் மிகமிக பொருத்தமுடையவனக இருக்கின்றேன் எனக் கூறினர்கள். ஆதலின் அல்லாஹ் (ஜல்.) இவ் வத்தியாயத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.), உமைய்யா பின் கல்ப், இவர்களின் செய்தியை அறிவிப்பான் வேண்டி இவ்வத்தியாயத்தை இறக்கிவைத்தான்.

இதன் ஆரம்பத்தில் அல்லாஹ் தஆலா மானிடர்களின் முயற்சிகள் பல்வேறு வகைகளாக இருக்கின்றதென பிரமாணஞ் செய்து குறிப்பிட்ட பின் அதன் விவரத்தை நான்காவது வாக்கிய மூலமாகக் கூறுகின்றான். அதாவது எவனொருவன் அல்லாஹ்வின் பாதையில் தன்னால் இயன்றவரை செலவு செய்தும், அநியாம் புரிவது, பொய் சொல்வது, படுதூறு செய்வது, களவு செய்வது, தாய் தந்தையர்களுக்கு விரோதஞ் செய்வது முதலிய துர்க்கிர்த்தியங்களை விட்டு தவிழ்ந்தும் நடக்கின்றானோ, இன்னும் அல்லாஹ்வின் (ஜல்.) அளவற்ற தத்துவங்களையும், சிறப்புத் தங்கிய அன்பியாக்கள், வேதங்கள் முதலியவைகளையும் உண்மையாக்கி வைத்து நன்மை புரிவதற்குள்ள நற்கூலி மறுமையில் கிடைக்குமென்னும் ஆதரவோடு தன் ஐஸ்வரியங்களை ஆண்டவன் பாதையில் செலவிடுகின்றானோ கூடிய சீக்கிரம் அன்னவனுக்கு சுளிவான பாதையைக் காண்பிப்போம். அதாவது உலகின்கண் சகல நற்காரியங்களையும் புரிவதற்கு உதவி செய்வதோடு மறுமையில் பிரயோசனமளிக்கக்கூடிய நற்கருமங்கள் புரிவதற்கும் சௌகரியமளித்திடுவோம்; எவனொருவன் தன் ஐஸ்வரியங்களை சன்மார்க்கத்தில் செலவு செய்யாது உலோபித்தனம் புரிந்து மறுமையில் கிடைக்கக் கூடிய அளவற்ற நற்பாக்கியங்களை பொருட்படுத்தாதிருப்பதுடன், நபிமார்களால் கொண்டு வரப்பட்ட மார்க்கங்களையும், மறுமையில் கிடைக்கக் கூடிய நற்பாக்கியங்களையும் பொய்யாக்கி வைக்கின்றானோ, அவனுக்கு கூடிய சீக்கிரம் கஷ்டத்தின் பாதையைக் காண்பிப்போம். அவன் அதில் பலவாறு கஷ்டமடைவான். அவன் மரணமடைந்து புதைக் குழிக்குப் போகும்போது அவனுடன் எந்த வஸ்துவும் செல்லமாட்டாது என்பதே.

இதன் பன்னிரண்டாவது வாக்கியத்தில் நிச்சயமாக வழிகாண்பித்துக் கொடுப்பது நம்மீதாயிருக்கும் எனக்கூறப்பட்டிருக்கிறது. மானிடர்களுக்கு வழிகாண்பிப்பது நம்மீது கடமையாக யிருப்பதால் ஆரம்பமாகவே பகிரங்கமான ஐயறிவாகிய கேழ்ப்பது, பார்ப்பது, சுவைப்பது, முகர்வது, தொடுவது முதலியவைகளையும் அந்தரங்க ஐயறிவையும் கொடுத்தோம். பிறகு ரசூல்மார்களையும் அனுப்பி வைத்து வேதங்களைக் கொடுத்து உண்மை சன்மார்க்கத்தை வெளியாக்கிக் காண்பித்தோம். பிறகு நபிமார்களின் அனந்தரக் காரர்களாகிய உலமாக்களின் மூலம் தூய்மையான நந்தீனுல் இஸ்லாத்தை நன்கு அறிந்துக்கொள்ளும்படி கிருபை செய்துள்ளோம். அதனால் மானிடர்கள் தன்னறிவு கொண்டு கெடுதியை விட்டுத் தவிழ்ந்து நடப்பதற்கு ஹேதுவாக ஆய்விட்டது. அவ்வாறன்றி மானிடனது இஷ்டத்திற்கு விரோதமாக அவன் ஒரு காரியத்தைப் புரியும்படி செய்து விடுவது நம்முடைய வேலையல்ல. நன்மையையோ கெடுதியையோ செய்வதை அவன் இஷ்டத்திற்கே விட்டிருக்கின்றோம். நாம் அவ்வாறு செய்ய வில்லையாகில் வழிப்பட்டு நடப்பவன், கட்டளையை மீறுபவன், நல்லவன், கெட்டவன் இவர்களுக் கிடையில் யாதொரு வித்தியாசமு மிருக்கமாட்டாது. மானிடன் கற்களைப்போன்று ஒன்றுமேஏலாத்தவனாக ஆய்விடுவதுடன், அவனுக்கு சகல அறிவுசுதந்திரங்களைக் கொடுத்து இவ்வுலகின்கண் அனுப்பி வைத்ததின் நோக்கமே வீணாகி விடுகின்றது.

இதன் பதின்மூன்றாவது வாக்கியத்தில் இம்மை மறுமை இரண்டும் நம்முடைய அதிகாரத்திலேயே இருக்கிறதெனக் கூறுகின்றான். அதாவது:—நாம் இம்மை மறுமை இவ்விரண்டையும் படைத்து அதற்கு எஜமானாக இருக்கின்றோம்; நம் அபிப்பிராயத்திற்கு மாற்றமாக சற்றேனும் விரோதமாக உலகத்தில் யாதொன்றும் ஏற்பட்டு விடமாட்டாது; அடியானும் அவனது காரியாதிகள் யாவற்றும், சுக துக்கம் முதலிய யாவும் நம் நாட்டத்தைக் கொண்டே ஏற்படுகின்றன. தவிர மறுமையில் கிடைக்கக் கூடிய இன்பம் துன்பம் யாவற்றும் நம் கைவசமே இருக்கிறது. ஆதலின் உலகத்தை ஒழுங்கான முறையிலோ அன்றி தப்பான வழியிலோ பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றவனுக்கு அவன் முயற்சியின் பிரகாரம் அளித்துவிடுவோம். மறுமையின் சுகண்டிகளைத் தேடி அதன்மீது முயற்சிக்கின்றவனுக்கு அதையும் அளித்து விடுவோம். மானிடர்களின் முயற்சிகள் இவ்வாறு பலவிதமாய் இருக்கிறதென்பதை அவனே சுட்டிக் காண்பித்துள்ளான்.

இதன் பதினேழாவது வாக்கியத்தில் 'அத்கா' பேணுதலுடையவர் எனக் குறிப்பிடப்

பட்டிருக்கிறது. அதாவது:—ஆண்டவனுக்கு இணைவைப்பது, பெரும்பாவம் சிறு பாவம் செய்வது முதலிய துர்க்குணங்களை விட்டுத் தவிழ்ந்து நடப்பதுடன் ஏதாகிலுமொருக்கால் தவறுதலாக பாவம் நிகழ்ந்து விடுமாயின் அதே நேரத்தில் வெட்கத்தால் தலை குனிந்து பாவமன்னிப்புத்தேடி அந்தப் பாவத்தின் சம்பந்தமே மனதிலில்லாது அகற்றி மனதில் இடங் கொடுக்காது செய்து விடுவதற்கு 'தக்வா' எனச் சொல்லப்படும். 'அத்கா' என்பது இதற்கு மேலுள்ளதாகும். அதாவது மார்க்க வரம்பு மீறுது நடப்பதுடன் பாவங்களின் ஊசாட்டம் மனதில் ஏற்படாது உள்ளும் புறமும் ஒன்று போலாக இருக்க வேண்டும் என்பதாகும். இச் சற்குணம் ஏற்படுவது மிகமிக அரிதாகும். ஆண்டவன் தன் கிருபையினால் இம்மேலான பாக்கியத்தை அருள் செய்தவர்கட்குக் கிடைக்கும். குர் ஆன் ஷரீபின் விரித்துரை கர்த்தாக்கள் யாவரும் 'அத்கா' வென்பது இத்தியாதி சற்குணங்களையும் ஒருங்கே அமையப் பெற்ற ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களையே குறிப்பிடுவதாகக் கூறுகின்றனர்.

(வல்லாஹ் அஃலம்.)

நாயக வாக்கியம்.

மானிடர்கள் சீப்பின் பற்களைப்போ லிருக்கின்றனர்.

சோதரீர்! முஸ்லிம்கள் ஒன்றுசேர்ந்து ஒற்றுமையாக வாழவேண்டுமென்பதாகவும், ஒருவருக்கொருவர் விதர்ப்பம் பாராட்டி வேறுபட்டிருக்கலாகாதெனவும் மேலே கூறப்பட்ட நாயக வாக்கிய மூலம் அறிவிக்கப்பட்டிருப்பது காணலாம். அவ்வாறு வேற்றுமை பட்டிருப்பார்களாயின் பலவித சங்கடத்திற்காளாகும்படி நேரிடுமென்பது வெள்ளிடை.

சீப்பினுடைய பற்களிலொன்று ஒடிந்து விடுமாயின் மெள்ள மெள்ள மற்ற பற்களும் ஒடிந்துபோவதற்கு ஆரம்பமாகி முடிவில் சகல பற்களும் ஒடிந்துவிடுகிறது. அதுதவிர ஏதாகிலும் ஒரு பல் ஒடிந்து விடுமாகில் அச் சீப்பானது தலைமுடியில் கஷ்டத்தை உண்டு பண்ணி வைக்கிறது. எப்பல்லானது ஒடிந்து அப்புறப்பட்டு விடுகிறதோ அஃது வீணாகி ஆய் யாதொரு வகையான பிரயோசனத்திற்கும் உதவாமலாய் விடுகிறது. அஃது அநேக காலம் பிரயோசனஞ் செய்து வந்திருப்பினும் பல் ஒடிய ஆரம்பித்ததுமுதல் அதன் பிரயோசனமும் கம்மியாக ஆய்க் கொண்டே வந்து கடைசியாக யாதொன்றுக்கும் உதவாமல் போகின்றது. முடிவாக கவனித்துப் பார்க்கின் முதற்பல் ஒடிய ஆரம்பித்தது முதல் பிரயோசனம் இழந்ததாகவே ஆய்விடுகிறதென்பது திண்ணம். இத்தன்மை போல் மானிடர்கள் யாவரும் ஒரே கூட்டமாகவும் ஒரே மனதினையுடையவர்களாகவும் ஒற்றுமையாகவும் கூடி வாழும் வரை சகல காரியாதிகளும் சுளிவாகவும் நிறைபூர்ணமாகவும் முடிவு பெறும். ஆனால் ஒருவன் கூட்டத்தை விட்டுப் பிரிந்து விடுவதால் யாவருக்கும் நஷ்டமே ஏற்படுகிறது. அதாவது தனியாகப் பிரிந்தவனுக்கும் கூட்டமாய் இருப்பவர்களுக்கும் கஷ்ட சங்கடங்கள் ஏற்பட்டு விடுகிறது. ஒரு மனிதன் கூட்டத்தை விட்டுப் பிரிந்து போவதினால் ஒற்றுமைக் குறைவு, விதர்ப்பம் இவைகள் ஏற்படுவதற்கு வழி திறக்கப்பட்டுபோய் விடுகிறது; அடுத்த மனிதனுடைய மனதிலும் ஊசாட்டத்தை உண்டுபண்ணுவதற்கு ஹேது உண்டாய் விடுகிறது. இவ்வாறு ஒவ்வொருவராகப் பிரிந்து போவது கொண்டு ஒற்றுமைக்கே ஹானி ஏற்பட்டு அதனால் பெரும் கூட்டமான ஜமாஅத்திற்கே பங்கம் விளைந்து விகற்பங்கள் ஏற்பட்டு யாதொரு பிரயோசனமுமில்லாமலாய் விடுகிறது.

ஆதலின் முஸ்லிம்கள் தங்களுக்குள் ஒற்றுமையாகவும் சகோதர வாஞ்சையாகவுமிருந்து வாழவேண்டுவது மிக மிக அத்தியாவசியமாகும். தனிமையான ஒரு மனிதன் யாதொரு காரியத்தையும் சாதித்து முடித்து விடமுடியாது. அவனால் தன் சமூகத்திற்

கோ மார்க்கத்திற்கோ யாதொரு நன்மையை யும் செய்து விட முடியாத காரியமாக ஆய் விடுகிற தென்பது வெள்ளிடை.

மேலே கூறப்பெற்ற நாயக வாக்கி யத்தில் சிறியதோர் வாக்கிய மூலமாக மா பெரும் கருத்துக்கள் முஸ்லிம் களுக்கு அறிவிக்கப் பட்டிருப்பதும், ஒற்று மைக் குறைவால் அநேக கெடுதிகள் உண்டாய்விடுகிற தென விளக்கப்பட்டிருப்ப தும் நன்கு புலனுகின்றன. ஆதலின் முஸ லிம் நேயர்கள், தங்களது காலப் போக்கை உன்னிப்பார்த்து சீர்திருத்தம் செய்ய வேண் டியது அவசியமெனப் புலனுகுமாயின் அதில் முயற்சித்தல் அவசியமாகும். இக்காலத்தில் முஸ்லிம்கள் தங்களுக்குள் ஐக்கியம் சகோதர வாஞ்சை, அன்பு அன்னியோன்யம் முதலிய சற்கருமங்கள் ஏற்படுவதற்கு முயற்சித்தும், ஒற்றுமைக் குறைவு பிரிவு முதலாயவை களை விலக்கி வைப்பதற்கு இயன்ற மட்டில் பிரயாசை எடுத்தும் காரியாதிகளை ஒழுங் கிற்கு கொண்டுவர வேண்டும். இவ்வுத்தம கைங்கரியத்தில் ஈடுபடாதிருப்போ மாயின் பெரும் பெரும் கஷ்டங்களைச் சமாளித்து காலத்தின் சகல கஷ்டங்களிலும் ஈடுபடும் படி நேரிட்டு விடும். ஆதலின் நம் முஸ்லிம் சோதரர்களுக் கிடையில் ஒற்றுமை சகோதர வாஞ்சை அன்பு பிரீதி முதலியவைகளை அளித்தருள் புரிவானுக.

சினேகிதர்களுக் கிடையில் பிரிவினை உண்டாக்கி விடாதீர்கள்

மேலே கூறப்பெற்ற நாயக வாக்கியத்தில் முஸ்லிம்கள் ஒருவருக் கொருவர் அன்னி யோன்யமாக வாழவேண்டுவது அவசிய மெனவும், பிரிவினையை உண்டுபண்ணுவது கூடாத காரிய மெனவும் விளக்கிக் கூறப் பட்டிருக்கிறது, "ஒரு நாள் என் தந் தை அவர்கள் மஸ்ஜிதில் நின்றுகொண் டிருக்குஞ் சமயம் ஒருவர் ஆங்குற்று, ஆலி ம்பின்ஷுரைக் என்பவர் பனூ ஆக்கிப், பனூ ஸஅத் இவ்விரண்டு கூட்டத்தார்களின் தலை வர்களுக் கிடையில் சண்டையை மூட்டிவிட்டு விரிவினை உண்டு பண்ணிக் கொண்டிருக்கின்றார் எனக் கூறியதைக் கேட்டு என் தந்தை அவர் கட்கு அளவற்ற மட்டிலடங்கா மனவருத்தம் ஏற்பட்டு இப் புத்திசாலிகள் ஆண்டவனுடை யவும் அவனது ரஸூலுடையவும் கட்டளைக் குக் கீழ்படியாமலிருப்பதன் காரணந்தான் புலனுகவில்லை. "முஸ்லிம்கள் யாவரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமை என்னும் அல் லாஹ்வின் கயற்றைப் பிடித்துக் கொள்ளுங்க ளென" ஆண்டவன் கூறி இருப்பதும், முஸ் லிம்கள் ஒருவருக் கொருவர் சகோதராவர் என நாயகம் (ஸல்.) திருவாய் மலர்ந்தருளி இருப்பதும் இன்னேருக்குத் தெரியாது போ னதேனே? 2 மனிதர்களுக் கிடையில் வேற் றுமையை உண்டுபண்ணி வைப்பவர்கள் மிக மிக கெட்டவர்களாய் இருக்கும் எனக் கூறி ஞர்களென ஹஸ்ரத் முஹம்மத் பின் ஹன பிய்யா (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாய த்துச் செய்யப் பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களது உபதேசம்

ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர் கள் கூறுவதாவது:—ஒரு நாள் தாயிப்வாசி ஒருவர் என் தந்தை அவர்களிடம் வந்து ஹஸ்ரத் அவர்களே! நான் யாரிடம் சினே கிதம் வைப்பது, யாரிடம் வைக்கக் கூடா தென்பதைத் தெரிவியுங்களென வினவிய மைக்கு, மானிடன் சினேகிதர்களின் செய் கைகளையே பின் தயருடம்படி நேரிடுகிறது ஆதலின் சினேகிதங் கொள்ளுமுன் அவனின் நடவடிக்கைகள் எவ்வாறிருக்கிறது என்ப தை கவனிப்பது ஆவசியமாகும். துர் நடத் தையுடையோர்களிடம் சினேகம் வைப்ப தைப் பார்க்கினும் தனித்திருப்பது மேலா கும். ஆனல் நல்லோர்களிடம் சினேகங் கொண்டு கூடிப்பழகுவது தனித்திருப்ப தைப் பார்க்கினும் மேலானதாக யிருக்கிற தென கூறினர்கள்.

விதவைப் பெண்களுக்காகவும், ஏழைகளுக்காகவும் முயற்சி செய்பவன் ஆண்டவனது பாதையில் யுத்தம் செய்பவனைப்போலவும், இரவு முழுதும் நின்று வணங்குபவனைப்போலவும் பகலெல்லாம் நோன்பு வைப்பவனைப்போலவு மிருக்கின்றான்.

786

تحفة الإسلام مدراس

பரிசுத்த வேதங்கள்.

மானிடர்கள் நேர்வழி பெறுவதற்கு ஆண்டவனால் வேதங்கள், ஆகமங்கள் அனுப்பப்படுவது மிக மிக அவசியமானதாகயிருக்கின்றது; அதைக் கொண்டுதான் அவர்கள் நல்லது கெட்டதுகளை அறிந்தொழுகவேண்டியிருக்கின்றது; வேதங்கள் அனுப்பப்படாதிருப்பின் மிருகங்களே போன்று காலங்கழித்திருப்பரென்பது திண்ணம். அதற்கேற்ப நமதிறைவன் வேதங்களையும், ஆகமங்களையும் அருள்செய் திருக்கின்றான். தவ்ருத் வேதத்தை மூஸா (அலை) அவர்கள் மீதும், ஜபூர் வேதத்தை தாவூத் (அலை) அவர்கள் மீதும், குர்ஆன் ஷரீபை எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் மீதும் இறக்கிவைத்திருக்கின்றான். இவ்வேதங்களில் அவ்வப்பொழுது அவசியமான சகல விஷயங்களையும் தெரியப்படுத்தியிருக்கின்றான்; சமயோசிதமாக பற்பல விபரங்களடங்கிய "சுஹ்ப்" களென்னும் 100 ஆகமங்களை மற்ற நபிமார்கள் மீதும் இறக்கிவைத்தான். அநேக நபிமார்கள் தங்களுக்கு முன்னுண்டான வேதங்கள் ஆகமங்களைக்கொண்டே தங்களைப் பின்பற்றியவர்களை சீர்திருத்தஞ் செய்ய கட்டளையிடப்பட் டிருந்தனர். திருக் குர்ஆனுக்கு முன் அனுப்பப்பட்ட வேதங்கள், ஆகமங்கள் யாவும் ஜனங்களால் கூட்டியும் குறைத்தும் திரித்தும் புறப்பட்டியும் பலவாறான மாறுதல்கள் செய்யப்பட்டுப் போயிற்று. மார்க்கக் கிரியைகளை அவர்கள் தங்களது இஷ்டம்போல் திரித்து அமைத்துவிட்டனர். அதனால் அவைகள் திரு வேதத்தின் தன்மையை விட்டும் வெகுதூரம் மாறுதலடையும்படி நேரிட்டுவிட்டது. திருவேதமென்றால் எவ்வாறு இறைவனால் அருளப்பட்டதோ அவ்வண்ணமே அவைகளிருக்கவேண்டும்; ஏதேனுமொரு அச்சரம் மனிதரின் கையால் மாற்றப்பட்டோ, குறைக்கப்பட்டோ போமாயின் அஃதொரு அசூசையாக மதிக்கப்படுகிறது. இதனால்தான் திருக் குர்ஆனுக்கு "ஸுஹுபன் முதஹ்ஹரா" துப்பரவான ஆகமங்கள் என்று அருளப்பட்டிருக்கிறது. முந்திய வேதங்கள் யாவும் இம்திரியான அசூசையால் பீடிக்கப்பட்டுப் போய் விட்டது. அதனாலேயே அவ்வேதங்கள் ஏகதேசத்தில் மாற்றப்பட வேண்டிய அவசியமேற் பட்டு விட்டது. கடாசி வேதமாய திருக் குர்ஆனில் முந்திய சகல வேதங்கள் ஆகமங்களின் கருத்துக்கள் ஒருங்கே அமைக்கப் பெற்றிருக்கின்றது. முன் சென்றவர்களின் சரித்திரங்களையும் பின்னால் நிகழவிருக்கும் விஷயங்களையும் கூறப் பெற்றிருக்கின்றது. சகல நாகரீகத்தின் உறைவிடமாக அது காணப்படுகின்றது. மேனாட்டு நிபுணர்கள் தங்கள் ஆராய்ச்சியின் பயனைப் இற்றைக்குக் கண்டு பிடிக்கும் சீர்திருத்தங்களை 1400 வருஷங்களுக்கு முன்னமே திருக் குர்ஆன் அவைகளை அறைந்திருக்கின்றது; மானிடர்கள் பின்பற்றி நடக்க வேண்டிய சகல அம்சங்களையும் விளக்கி யிருக்கின்றது; அதனை உலக சமாதான நீதி மன்றத்தின் பிரதான சட்டதிட்டங்கடங்கிய மாபெரும் புத்தகமென்று கூறுவது மிகையாகாது. ஒரு சமயத்தில் உலகம் ஏகதேசத்தில் திருக் குர்ஆனைப் பின்பற்றப் போகிற தென்பது நிச்சயம்; அப்பொழுதுதான் இயற்கைக் கொத்த அருள் கட்டளைகளை யாவரும் கடைபிடிக்கப் போகின்றனர்.

இதுவரை ஆண்டவனால் அருளப் பெற்று மாற்றப்பட்டுப் போன வேதங்களின் நிலைமைகளை விவரித்துள்ளோம். ஈதிங்ஙனமிருக்க ஹிந்துக்களாலும் மற்றவர்களாலும் வேதமென்று கூறப்படும் கிரந்தங்களையும் இங்கு கவனிக்கவேண்டியிருக்கிறது. அருள் வேதங்கள் இயற்கைக்கொத்ததாகவும் மானிடர்களின் முன்னேற்றத்திற்குரியதாகவும் வாழ்க்கைக்கு முட்டுக்கட்டை போடாததாகவுமிருக்கவேண்டும். ஹிந்துக்களின் வேதங்

கள் அவ்வாறு இல்லை என்பதை எளிதில் தெரிந்து கொள்வதற்குள்ள ஒரு உதாஹரணத்தை இங்கு குறிப்பிட நாடுகின்றோம். அவ்வேதங்கள் விதவா விவாகத்தை மறுத்து பால்ய விவாகத்தை வற்புறுத்தியிருக்கின்றன; ஒரு பெண் சிறு வயதிலோ அன்றி பால்யத்திலோ விவாகஞ் செய்யப் பட்டுப் போய் விடுவாளாயின் அவள் புருஷானுபவத்தை அனுபவிக்கு முன் புருஷன் இறந்து விடுவானாயின் அவளை மற்றெவரும் விவாகஞ்செய்து கொள்ள முடியாது; அதனால் அவளுடைய வாழ்க்கையில் எத்தனையோ தொந்தரை உண்டாவதற்கு இவ்வேதங்கள் காரணமாய் விடுகின்றது. இதனால் அவளுடைய வாழ்க்கையே பிரயோசன மற்றதாய் விடுகின்றது. இதைப்போன்றுள்ள எத்தனையோ உதாஹரணங்களை எடுத்துறைக்கலாம். அதனால் இவைகள் அருள் வேதமல்ல வென்பதைத் தெரிந்துக்கொள்கிறோம்.

குர்ஆன் மஜீதாகிய வேதம் அருளப்பட்ட சமயத்து "குப்பார்கள்" இவ்வேதத்தின் மீது சந்தேகங் கொண்டனர்; அவ்வேதம் இறைவனால் அருளப்பட்டதல்ல வென்று கூறித் திரிந்தனர்; நபிகள் திலகம் (ஸல்.) அவர்களோ எழுதப்படிக்கத் தெரியாத உம்மியாக யிருந்தார்கள்; எந்த போதகாசிரியரிடமும் கால்மடிந்து உட்காரவே யில்லை; படிப்பாளிகளின் சாகவாசத்திலு மிருந்ததில்லை; தன்னந்தனியே இருப்பதிலும், சிந்தனைகள் செய்வதிலும், ஆடுகள் மேய்ப்பதிலும் காலங் கழித்து வந்தவர்கள். எதிரிகளாகிய குப்பார்கள் இவ்விஷயங்களை நன்கறிந்திருந்தும் திருவேதத்தை அவர்கள் பால் ஓதிக் காண்பித்த பொழுது "இது ஆண்டவனால் அருளப் பட்டதல்ல" வென்று கூறினார்கள். இதற்கு விடையாக திருமறை கர்த்தாவே பற்பல திருவஸனங்களைக் கூறியிருக்கின்றான். எமதடியார் மீது இறக்கப்பட்ட இவ்வேதத்தின்மீது சந்தேகங் கொள்வீர்களேல் இதைப் போலொத்த ஒரு அத்தியாயத்தை யேனும் கொண்டு வாருங்கள் பார்க்கலா மென்று அறை கூவி அழைத்தான். அவர்களால் அவ்வாறு கொண்டு வரமுடியாதென்றும் திருவேதத்திலேயே கூறியும் முடித்தான். அதற்கேற்ப அவர்களால் கொண்டுவரவும் முடியவில்லை. அக்காலத்தில் கல்வித்திறமையிலும், காவியம் எழுதும் தன்மையிலும், வஸனங்கள் கூறும் வன்மையிலும் தேர்ச்சி பெற்றவர் பலரிருந்தனர்; இம்மா பெரும் பிரச்சினையில் பலரும் ஈடுபட்டனர்; முழுமுயற்சி செய்து ஒரு சிறு அத்தியாயத்தை யேனும் எழுதி விடவேண்டுமென்று பிரயாசை எடுத்தனர்; எழுதி, எழுதி பற்பல ஏடுகளையும் பாழாக்கினர்; முடிவாக ஒன்று மியலாது சோர்வுற்றுப்போயினர்; எத்தனையோ காவியங்கள் எழுதிப் பழக்கமுற்ற இவர்கள் தங்களுக்கெவரும் நிகரில்லை என அறை கூவி அழைத்துக் கொண்டிருந்த இவர்கள் தங்கள் முயற்சியும் சபதமும் திருமறையின் முன் பாழாகி விட்டதைப் பார்த்து துக்கித்தனர். திருகுர்ஆனின் அறைகூவல் (சாலெஞ்சு) இன்றளவும் அப்படியே நிற்கின்றது; நாளிது வரை எவராலும் ஒருசிறு அத்தியாயத்தை யேனும் கொண்டு வரமுடியாமல் பரிசுத்த வேதம் நாளொரு மேனியும் பொழுதொரு வன்னமுமாக இலங்கா நிற்கின்றது.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கட்கு பற்பல அற்புதங்கள் நிகழ்வுற்றன; சந்திரன் இரண்டாகப் பிளந்தது; பாரான் கல்லும் அவர்களுடன் வஸனம் புரிந்தது; இவைகளெல்லாம் எம்பிரான் (ஸல்.) அவர்கள் காலத்தே தோன்றி மறைந்தனவாகும். நம்மவர் அவைகளைக் கண்காணிக்க முடியாது போயின. நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் உண்மை நபீ என்பதற்கு எமது திருமறை திரு குர்ஆன் ஒன்றே அன்றைக்கும் இன்றைக்கும் இறுதி நாள் வரைக்கும் மாபெரும் சான்றாக நின்றிலங்குகின்றது. அரபிப் பாஷையில் நிபுணத்துவம் பெற்றவர்களெல்லாம் இதைப்போன்று ஒரு சிறு அத்தியாயத்தையும் கொண்டு வரமுடியாமல் போய் விட்டமையால் மனித இயற்கைக்கே இவ்வாறு கொண்டுவரும் சக்தியில்லை என்பது ருஜுவாய் விட்டது. நபிகள் நாயகம்(ஸல்.) அவர்கள் எழுதப்படிக்கத் தெரியாத உம்மியாக யிருந்தார்களென்பதில் சந்தேகங்கொள்ள இடமே கிடையாது. ஆதலின் திருக்குர்ஆன் இவர்களால் கற்பனை செய்யப் பட்டதென குப்பார்கள் பறைசாற்றி வந்தது தவறென்று நிக்ஷயமாய்த் தெரிந்து கொள்கிறோம். இம் மகத்தான வேதம் இறைவனால் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் மூல்யம் அருளப்பட்டதென்பதில்கிஞ்சிற்றும் சந்தேகங் கிடையாது. யார்மூலம் திருவேதம் அருளப்படுகின்றதோ அவர்களைத்தான் நபீ

என்றும், ரஸூலென்றும், திருத்தூதரென்றும் சொல்லப்படும். ஆதலால் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் உண்மை நபீ என்பதாக திருக்குர்ஆனே எண்பித்துக் கொண்டிருக்கிறது.

இம் மகத்தான வேதத்தை நாமே காப்பாற்றுவோமென்று அல்லாஹ் தஆலா கூறியிருக்கின்ருன். அதற்கேற்ப நாளிதுவரை ஒரு அக்ஷரமேனும் மாற்றப்படாமல் அருள் செய்யப்பட்ட வண்ணமே இருந்து வருகின்றது. அதனை மன்னஞ்செய்யும்படியும் அதன் கருத்துக்களை உணரும்படியும் முஸ்லிம்கள் கட்டளையிடப் பட்டிருக்கின்ருர்கள். அதன் கருத்துக்கள் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களால் அநேகமாகக் கூறப்பட்டிருக்கின்றது. அவைகளை அனுசரித்தே விரித்துரைகளும் பாரவான்களான இமாம்களால் வறையப் பெற்றிருக்கின்றது. ஒரு சிலர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் விரித்துரையை கவனிக்காமலோ அன்றி கவனித்து அதற்கு மாற்றமாகவோ வியாக்கியானஞ்செய்திருக்கின்ருர்கள்; அவைகள் அவ்வப்போது மறுக்கப்பட்டுப் போயிருக்கிறது. இதனல்தான் "ஒருவர் தமது கொள்கைக்கு நேராக திருக்குர்ஆனுக்கு வியாக்கியானஞ் செய்வாராயின் அவர் காபிராய் விடுவ"ரென்று நபிகள் திலகம் (ஸல்.) திருவுளம் பற்றியிருக்கின்ருர்கள். தற்கால காதியானிகள் திருக்குர்ஆனுக்குச் செய்து வரும் வியாக்கியானங்கள் திருக்குர்ஆனுக்கும் ஹதீதுக்குமே முற்ற முற்ற மாற்றமாயிருக்கிறதென்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் நம் பரிசுத்த வேதம் தப்பர்த்தஞ் செய்யப்படாமல் காப்பாற்றப் படுவதற்கு வேண்டியனவற்றை முஸ்லிம்கள் செய்ய வேண்டியதோடு அவர்களும் திருமறையின் திருக்கட்டளைகளைச் செவ்வனே தெரிந்து கொள்வதற்கு அரும் பெரும்பாடு படவேண்டியது மிகமிக அவசியமானதாகும்.

முஸ்லிம்கள் தொழுகையிலும் ஏனைய நேரங்களிலும் திருக்குர்ஆனை ஓதிவருகிருர்களென்பது வெளிப்படை. தற்சமயம் துருக்கி தேசத்தின் அதிபதி முஸ்தபா கமால்பாஷா என்பார் குர்ஆனை துருக்கி பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டதைத் தமது தேசத்தில் தொழுகையிலும் ஓதும்படி கட்டளை பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது. இவர் அத்தேசத்தில் இதற்கு முன் இதே போன்று மார்க்கத்திற்கு விரோதமான அநேகக் கட்டளைகளைப் பிறப்பித்திருக்கின்ருரென்பது நேயர்களறிந்தவையே. அதைப் போன்றே இது பொழுதும் திருக்குர்ஆன் விஷயத்திலும் தலையிட்டிருக்கின்ருரென்பது வெளிப்படை. இப்போக்கானது திருக்குர்ஆனின் மகத்துவத்தையே குறைக்கக் கூடியதாகயிருக்கிறது. தர்ஜுமாக்கள் கைகொள்ளப்படின் நாளடைவில் அசலை மறந்துவிட நேரிடும் (அல்லாஹ் காப்பாற்றுவானுக) அதனல் பழைய வேதங்களுக்கு ஏற்பட்ட கெதியே இதற்கும் நேரிட்டுவிடும். திருக்குர்ஆனின் திருவஸனங்கள் ஆச்சரியமான மணிக்கோர்வையாக அமைந்திருக்கின்றன; ஒரு வாக்கியம் பல கருத்துக்களை விளக்கக் கூடியதாக யிருக்கின்றது. உதாரணமாக "அல்லாஹுஸ்ஸமத்" என்னும் திருவஸனத்தை எடுத்துக்கொள்வோம் அதன் கருத்தாவது அல்லாஹ் தஆலா சகல வஸ்துக்களை விட்டும் தேள்வை அற்றவன்; எல்லா வஸ்துக்களும் அவனளவில் தேள்வையுடையசாக யிருக்கின்றன வென்னும் மகத்தான கருத்தை அஸ்ஸமத் என்ற சிறுவஸனமே விளக்குகின்றது. இதனை மொழிபெயர்க்கப்படின் இதர பாஷைகளில் இம்மாதிரியான வாக்கியங்கள் கிடைப்பது மிகமிக அபூர்வமென்பது யாவருமறிந்ததே. இதனுல் குர்ஆனின் கருத்துக்கள் சிதருண்டுபோக நேரிடும். ஆகையால் முஸ்லிம்கள் வேண்டிய அளவு திருக்குர்ஆனின் கருத்துக்களை அறிந்து கொண்டு மூல மொழிகளையே தொழுகையில் ஓதிவரவேண்டியது அவசியமாகும். முஸ்தபா கமால் பாஷாவின் இவ்விபரீத நடத்தைகளை எத்தேசமும் பின்பற்றி நடக்காதென திண்ணமாய் நம்புகின்ருேம்.

நம் அரும் மாசிகையின் இரண்டாம் வால்யூம் பைண்டு செய்யப்பட்டு தயாராக இருக்கிறது. சொற்பப் பிரதிகளே கைவசமிருப்பதால் உடனே பெற்றுக் கொள்வதற்கு முந்துங்கள்.

காலிக்கோ பைண்டு ரூ. 3—10—0 வி. பி. வேறு.

இதர மார்க்கங்களைப் பார்க்கினும், இஸ்லாம் சிறந்திருப்பதின் காரணம்.

தொண்டு புரிதல்

ஒருவர் தம்முடைய சகோதரர் ஒருவரின் கஷ்ட நிஷ்டூரங்களை ஒழிப்பதற்கும், துன்பம் வருத்தம் முதலியவைகளை மாற்றுவதற்கும், அவர் செய்யும் வேலைகளில் சிரமம் ஏற்படாதிருக்க உதவி ஒத்தாசை செய்வதற்குமே "தொண்டு செய்தல்" எனப்படும். எந்த வேலையாயினும் எக்காரியமாயினும் அதன் முடிவு மேற்கூறிய வாறிருப்பின் அது "தொண்டு" எனப்படும் புண்ணிய கைங்கரியத்திலேயே சாரும். ஒருவருக்கு சேவை செய்வதற்குள்ள பிரதிப்பிரயோசனம் ஒரு சமயம் பணமாகவும், சில சமயம் ஆசீர்வாதமாகவும் புகழாகவும் மற்றொரு சமயம் ஆத்ம சாந்தியாகவும் அடையப் பெறுவோம்.

"எவரொருவர் தமது சகோதரரின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முனைந்து நிற்கின்றனரோ அவரது விருப்பங்கள் யாவற்றையும் அல்லாஹ் நிறைவேற்றி வைப்பதற்கு ஆசிக்கின்றான்". என்பது நாயக வாக்கியம். "எவர் தொண்டு செய்கின்றாரோ அவர் தலைவராகின்றார்". என்பது ஒரு பாரசீகக் கவியின் பொருள். இக்கவி தொண்டு செய்வதினால் விளையும் பயனையே காட்டுகின்றது. அதாவது சேவகனாக இருப்பவன் தான் செய்யும் அழகிய பணிவிடைகளினால் தனக்கு மற்றையோர் தொண்டாற்றி வரும்படியான பெரும் பதவியில் ஒரு சமயம் வந்து சேர்ந்து விடுகிறான். இவ்விஷயத்தை எண்பிக்க சரித்திரங்களிலிருந்து அநேக உதாஹரணங்களை எடுத்துக் காட்டலாம். "பிஸ்தகீன்" என்பவர் படிப்படியாக தொண்டு செய்தே அரசரானார். இவரின் கீழ் தொண்டராக விருந்த 'சுபுக்தகீன்' என்பவரும் முறையே சிரிய பணிவிடைகள் செய்தே அரசப்பதவிக்காளாயினர். 'குதுப்புத்தீன் எபக்' என்பார், தம்முடைய எஜமானராகிய "ஷஹாபுத்தீன் கோரி" என்பவரின் வேலைக் காரராகவே இருந்தார். ஆனால் அவரது அருமை வாய்ந்த சேவைகளானது அவரை முடிவில் ஹிந்துஸ்தானின் முதல் மன்னராகவிளங்கச்செய்தது.

மேற்கூறிய ஹதீன் பொருளுக்கும் கவியின் பொருளுக்கும் வானம் பூமிக்குள்ள வித்தியாசம் காணப்படுகிறது. தொண்டு செய்வதின் விசேஷத்தைக் குறித்து கவிவாணருக்கு 'தொண்டு செய்பவன் தலைவனாகின்றான்.'' என்பதற்கு மேல் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஆனால் நாயக வாக்கியத்தில் மிகவும் உன்னதமானபொருள் அமைந்திருக்கிறது. அதாவது "நீங்கள் உங்கள் சகோதரர்களின் வேலையில் உதவி செய்யுங்கள்; இறைவன் உங்கள் வேலையினை நிறைவேற்றுவான்" என்பது மிக நுட்பமான கருத்துடையதாகும்.

பிறருடைய காரியங்களை அவர்களின் மனோ இஷ்டம் விருப்பம் இவைகளின் பிரகாரம் கடைசிவரையில் திருப்திகரமாய் நம்மால் செய்ய முடியாமலிருக்கலாம்; அன்றி நாம் நல்லெண்ணத்தோடு வஞ்சகமில்லாது ஒழுங்கான முறையில் வேலை செய்துக் கொண்டு போகும்போது அவ்வேலை சற்றேனும் பிரயோசன மில்லாது போகலாம்; இவ்வாருள்ள சில அசந்தர்ப்பங்கள் நேரிடலாம். ஆனால் இறைவனே ஒரு மனிதனுடைய காரியாதிகளுக்கு தக்க பலன் அளிக்க விருப்பமுள்ளவனாக இருக்கும்போது அம் மனிதனது அவசியங்களெல்லாம் எங்கு நிறைவேறாதிருக்கப் போகிறது: அவனது கட்டளைகள் எவ்வாறு நிறைவேராதிருக்கும்; அவனது விருப்பமென்னும் விருக்ஷம் எங்ஙனம் நிறை பூரணமென்னும் கனிகளை பயக்காமலிருக்க முடியும்? முடிவாக எவனுடைய அனுஷ்டானம் இந்த ஹதீதின் பிரகாரம் இருக்கிறதோ அவனே புண்ணியவானாவான். இந்த நல்லறிக்கை எவனிடத்தில் குணஞ் செய்கின்றதோ அவனே பாக்கியசாலியாகும்.

அன்பர்காள்! முஸ்லிம்என்னும் பதத்தின் அர்த்தம் பரிசுத்த ஹதீதில் மாத்திரமன்றி

குர்ஆன் மஜீதிலும் விளக்கப்பட்டிருக்கிறது. "எவருடைய கையினாலும் நாவினாலும் பிற முஸ்லிம்களுக்கு தீங்கு நேரிடாமலிருக்கிறதோ அவரே 'முஸ்லிம்' எனப்படுவராவர்" என்பது நாயக வாக்கியம்.

மேற்கூறிய ஹதீதில் "முஸ்லிம்" என்னும் பதத்திற்கு ஒரு முஸ்லிமுக்குப் பிற முஸ்லிம்கள் பால் இருக்கவேண்டிய சம்பந்தங்கள் விஷயமாகவே சிலாகித்துக் கூறப்பட்டிருக்கிறது. அதனால் ஒரு முஸ்லிம் பிற முஸ்லிம்களை வைதல் கூடாது; கெடுதியும் நிந்தனையும் செய்யக்கூடாது; அவர்கள் விஷயமாக பொய்யான செய்திகளை உண்டு பண்ணுதிருக்கவேண்டும்; குற்றங் குறைகளை எடுத்துக் கூறுதிருக்கவேண்டும்; புறம்பேசித் திரிவது மிகக் கொடிய வழக்கம்; ஒரு முஸ்லிம் ஏனைய முஸ்லிம்களை எதிர்த்து தாவி விழுதல் கூடாது; முடிவாக சொல் செயல் முதலியவைகளில் அவர்களின் கண்ணியத்திற்கு பங்கம் வராதிருக்கச்செய்யவேண்டும்.

திருமறையில் ஆண்டவன் கூறி இருப்பதாவது:—"நல்லது எவன் தனது முகத்தை முற்றிலும் இறைவன் பக்கல் திருப்புகின்றானோ அவனே கலப்பற்றவனாகி யிருக்கும் நிலைமையில்," இவ்வாக்கியத்தில் முஸ்லிம்களுக்கு இருக்கவேண்டிய இலட்சணங்களில் முக்கியமான இரண்டைக் குறித்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது முஸ்லிம்கள் தாங்கள் வணக்கம் புரியுங்கால் அதிலேயே கண்ணுங் கருத்துமாக இருப்பதுடனே தங்கள் முகத்தை இறைவன் பக்கமே திருப்பிக் கொண்டிருக்கவேண்டும். இரண்டாவது தங்கள் எண்ணத்தையும் நோக்கத்தையும் அவ்விறைவனுக்காக வேண்டியே மிகத் தூய்மையாக்கவேண்டும் என்பதே.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் தங்களுடைய பரிசுத்த படுக்கையில் சாய்ந்துக் கொண்டு அடியில் வருமாறு ஸ்தோத்திரஞ் செய்வது வழக்கமாயிருந்தது. "ஏ! உலக இரட்சகா! எனது உயிரை உன்னிடமே ஒப்பிக்கின்றேன்; என் முகத்தை உன்னை நோக்கியே நேராகத் திருப்புகின்றேன்; எனது காரியாதிகளை எல்லாம் உன் சந்நிதானத்திலேயே விட்டுவிடுகின்றேன்; உன்மீதுள்ள முழு நம்பிக்கையின் பேரிலேயே என் எண்ணம் முழுதும் சார்ந்திருக்கிறது; எனக்கு உன்மீது விருப்பமும் இருக்கிறது; அச்சமும் இருக்கிறது. உன்னைத்தவிர எனக்கு ஒதுங்குமிடம் எங்கே கிடைக்கப்போகிறது? எனக்கு உதவி செய்பவர் வேறு யார் உளர்? நீ அனுப்பிய வேதத்தின்மீதும் நீ அனுப்பி வைத்த நபிகளின்மீதும் எனக்கு உறுதியான நம்பிக்கை உண்டு." என்பதே.

நேயர்காள்! மேலே கூறப்பெற்றுள்ள சிறு வாக்கியத்தில் குறிப்பிட்டுள்ள "இஹ்ஸான்" உபகாரம் புரிதல் என்னும் வாக்கியம் சாதாரண வாக்கியமாகமாட்டாது. அதற்கு அரபி அகராதியிலும் தக்க கருத்துக் கண்டுகொள்ள முடியாது. ஆனால் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் நாயகம் (ஸல்) அவர்களிடம் "இஹ்ஸான்" என்பதின் பொருள் யாதென கேட்டதற்கு "அல்லாஹ் தஆலாவைநேரில் பார்த்தால் அவனுக்கு எவ்வாறு வணக்கம் புரிவீரோ அவ்வாறே வணக்கம் புரியவேண்டும்; நீவீர் அவனைப் பார்க்காவிட்டாலும் அவன் உம்மைப் பார்த்துக்கொண்டிருக்கின்றான்." என்பது பொருளெனக்கூறினார்கள். தவிரவும், முஸ்லிம் என்னும் பதத்தின் கருத்தை அறிந்து கொள்வதற்காக கீழே குறிப்பிடப்படும் ஆயத்தின் கருத்தையும் கவனியுங்கள்.

(ஓ, முஹம்மதே!) கூறுவீராக: என் தொழுகை, என் தியாகம், என் பணிவிடை, என் வாழ்க்கை, என் மரணம் ஆகிய யாவும் அல்லாஹ்வுக்காகவே யாயிருக்கும், அவனே சர்வ உலகங்களையும் சிருஷ்டித்தவன்; அவனது இயல்புக்கும் லெட்சணத்திற்கும் யாரையும் ஒப்பு கூறமுடியாது; எனக்கு இவ்வாறு கட்டளை பிறந்திருக்கிறது; நானே முதன்மையான முஸ்லிமாகும்."

முஸ்லிம்காள்! "நான் முஸ்லிமாக இருக்கின்றேன்" என்னும் வாக்கியம் அவ்வசனங்களினிறுதியில் கூறப்பட்டிருப்பதைக் கூர்ந்து கவனியுங்கள். இவ்வாயத்திலுள்ள இறுதி விஷயத்தினை தெரிவிப்பதற்கு முன்னர் நம் வேலைகளும், செயல்களும் எவ்வாறு பரிசுத்தமாக இருக்கவேண்டும்; வாழ்கையும் மரணமும் எவ்வாறு சத்தியத்தை அடிப்படையாக கொண்டிருக்கவேண்டும்; அந்நிலைமையினை அடைவதற்கு எவ்வாறு நம் காரியாதிகள் நேர்மையாக இருக்கவேண்டும் என்பதைக் குறித்து தெரிவிக்கப்பட்டிருக்

கிறது. எனவே இவ்வாயத்தின் கருத்து யாதாகுமென ஆராய்ச்சி செய்யின், ஒருவர் தம்மை முஸ்லிம் என்று வெளிப்படுத்திக் கொள்ளவேண்டு மாகில், அவர் தம்முடைய வாழ்க்கையைத் தொண்டு புரிவதிலேயே தத்தஞ் செய்யவேண்டும்; பரிசுத்த நற்குண நல்லொழுக்கத்தைத் தமக்குதவியாகக் கொண்டொழுகவேண்டும்; சத்தியந்தான் சன்மார்க்கத் தீபம் என்றறிய வேண்டும் என்னும் முடிவிற்கே வந்து சேருவோம்.

நேயர்காள்! தொண்டு செய்யுங்கள்; நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் காண்பித்தருளிய நெறியினைப் பின்பற்றி நடவுங்கள்; ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவிடுதல் நம் வேலையன்று. துரோகமும் சூழ்ச்சியும் நாம் செய்யக்கூடிய காரியமல்ல. ஆனல் ஆண்டவனல் அளிக்கப்பட்டிருக்கும் சகல பாக்கியங்களையும் மானிடராகப் பிறந்தோர் யாவரும் அனுபவித்து இன்புறுமாறு செய்ய வேண்டியதே நம் கடமையாகும்.

இஸ்லாம் மதஸ்தாபகர் எவ்வாறு இஸ்லாத்தை அறிவித்துக் கொடுத்தனரோ அதே வடிவத்திலும் அதே வர்ணத்திலும் அதனை வெளிப்படுத்துவதே, மிகவும் உத்தமமாகும். இதன்றி எஞ்சியிருக்கும் சில சட்ட திட்டங்களை மட்டும் அனுஷ்டிப்பதற்கு மட்டுந்தான் மதமென்று சொல்வது வெறும் வேடிக்கைகளென்றே இது காலை அறிஞர்கள் நிச்சயித்து விட்டனர்.

இஸ்லாம்மதமானது சட்ட திட்டங்களால் மிகஉயர்ந்ததாக இருக்கின்றது. சந்தேகம், இடையூறு முதலியவைகளுக்கு இடமில்லாத உயரிய மதமாகவும் இருக்கின்றது. உலகத்திலுள்ள யாவரும் தெரிந்துக் கொள்ளும் பொருட்டு இஸ்லாம் கொண்டுவந்திருக்கும் அரிய செய்தியாவது:—இறைவன் உங்கள் சடலங்களைப் பார்க்கவில்லை; ஆனல் உங்கள் ஹிருதயத்தின் மீதே கண்ணுயிருக்கின்ருன்.'' தவிர குர்பான் செய்யப்பட்டதின் இரத்தமாவது தசையாவது ஆண்டவன் சமுகம் சேர்வதில்லை, ஆனல் உங்கள் வணக்க ஒழுக்கங்களே சேர்கின்றன என்பதே.

இஸ்லாம், தப்லீக் இவ்விரண்டும் வெவ்வேறு பதங்களாக இருந்த போதிலும் அவற்றின் பொருள் ஒன்றேயாகும். இஸ்லாம் ஒன்றே உலகமுழுதும் பரத்தப்படுவதற்குத் தகுதியான மதமாகும். இஸ்லாத்திலுள்ள மக்கள் யாவர்களையும் மார்க்கப் பிரசாரத்தை வகித்து நடத்துவதற்கு வற்புறுத்துவது இஸ்லாம் மதம் ஒன்றே.

“தப்லீக்'' செய்ய ஆரம்பித்தக்கால் முதலில் உங்களுக்கே “தப்லீக்'' உபதேசித்துக் கொள் வீரர்களாக. அறிவுச் சுடரைக் கொண்டு தங்களைப் பேணிக் கொள்வீர்களாக. இறைவனது ஏவல் விலக்குகள் மீது கூடிய வரை ஊன்றுதலாக இருந்துக் கொள்வீர்களாக. இவ்வாருன உறுதி வாக்கியங்களை உங்கள் மனையாள், பிள்ளைகள், பெரியோர் கிளையார் முதலிய யாவர் விஷயத்திலும் அனுசரித்து நடக்க முயற்சி யெய்வதே சிறந்த மார்க்கச் சேவையாகும். அண்டை அயலார்க்குச் செய்யவேண்டிய கடமைகள் இன்னவை என்று நன்குஅறிந்து நடவுங்கள். உங்கள் விஷயத்திலும் கடமையிலும், இஸ்லாமிய ஞானம் பெற வேண்டியது அநாவசியம் என அறவே எண்ணுதீர்கள்.

ஏக நாயகன், நம் நாயகம் (ஸல்.) அவர்களை மிக்க பிரகாசமான ஞான சூரியனை அனுப்பி இருக்கின்ருன். உலக மடங்கலுக்கும் ஒருங்கே ஒளிவைக் கொடுக்கும் அச்சூரிய ஒளியை எப்பகுதியிலும் ஒளிரச் செய்யுங்கள். சில வீடுகளை இன்னும் இருள்மூடிக் கொண்டிருப்பதைத் தெரிந்துக் கொள்வீர்கள். அவ் வீடுகளினுள்ளே வெளிச்சம் செல்வதற்கு சாளரங்களோ வாசல்களோ ஒன்றுமில்லாதிருக்கிறது அதனல் ஆங்கு ஆத்ம ஞான முன்னேற்றமென்னும் கதிரவன் சுடர் பிரவேசியாமல் இருக்கின்றது. அங்கு அஞ்ஞானம் மூட நம்பிக்கை என்னும் சிதல்களின் ஆபத்து அளவு கடந்திருக்கிறது. ஆங்கு மனித சமூகம் மடமையிலும், மறதியிலும் அதோ கதியாக மூழ்கிப் போயிருக்கின்றது.

நாயகம் (ஸல்.) அவர்களின் தோழர்களும் இமாம்களும் போதனை செய்த கருத்துக்கிணங்கவும், அவர்கள் காண்பித்த முறையிலுமே இஸ்லாம் மதப் பிரசாரம் செய்யவேண்டியது நியாயமாகும். அவ்வாறு பிரசாரம் புரிபவர் முற்காலத்தினுடையவோ தற்காலத்தினுடையவோ நவீன நாகரீகங்களான விஞ்ஞானங்களை அறியாதவரா யிருக்கின்ருர்; அல்லது தன்னுடைய இயற்கையைக்

கொண்டே உதாரணங்களேயும் உவமானங்களேயும் தக்க முறையில் எடுத்துக் காட்டுவதற்கு இயலாதவராயிருக்கின்ரார் அவ்வாறிருந்து அவருடைய பிரசாரம், இஸ்லாத்தை அதன் நேரான தன்மையில் எடுத்துக் காட்டிப் பிரசாரஞ் செய்யக்கூடிய சக்தி உடையதாகக் காணப்பட்டால், அவ்வியக்கமும் இஸ்லாமியப் பிரசாரம் என்றே அழைக்கப்படும்.

இஸ்லாத்தில் முதன்மையானதும் எல்லாவற்றைவிட மிகச்சிரேஷ்டமுள்ளதுமான சித்தாந்தம் "ஏகத்துவம்" என்பதாகும். பதினன்கு நூற்ருண்டுகளாக முஸ்லிம்கள் செய்துள்ள இடைவிடாத ஊக்கம் முயற்சியினுங் காரணமாக இது சமயம் அச்சிந்தாந்தத்தின் தன்மையும் உண்மையும் மிக விசாலமடைந்திருக்கிறதைக் காண மிக்க சந்தோஷம் உண்டாகின்றது. கடவுளும் ஷைத்தானும் சமம் என்று கருதுகின்றவர்களும், பிதா, பரிசுத்த ஆவி, குமாரன் இம்மூன்றும் சேர்ந்தது "கர்த்தர்" என்றும் அதில் ஒவ்வொன்றும் தனித்தனியே கர்த்தரின் ஸ்தானத்தில் இருக்கிறதென்றும் நம்புகின்றவர்களும், கோடானுகோடி விக்கிரகங்களினுள்ளே பரமேஸ்வரரின் சக்தி இருக்கிறதென்று அவைகளை பூஜிப்பவர்களும் இன்று தௌஹீதுக்கு எதிரிகளாக இருக்கவில்லே. இக்காலத்தில் அன்னேர் யாவரும் "ஒன்றில் பலதையும் பலதில் ஒன்றையும் ஸ்தாபிக்க, தக்க அத்தாட்சிகளுடன் ஆராய்ச்சி செய்ய முயற்சிக்கின்றனர்.

இஸ்லாமியப் பிரசாரத்தின் இரண்டாவது காரியமாவது:—செய்யிதுனு வ மௌலானு முஹம்மத் முஸ்தபா (ஸல்.) அவர்கள் மீது முஹப்பத்தை (அன்பை) நிலே நிறுத்துவதாகும். முஹம்மது (ஸல்.) அவர்களேப் பின்பற்றி நடக்கவேண்டியது கடமை என நீங்கள் யாவரும் நன்கறிவீர்கள். ஆத்மபரிபக்குவத்திற்கு வேண்டிய வழிப்பாடுகளும் பின்பற்றுதலும் செவ்வனே நடந்தேறுவதற்கு அன்பே பேருதவியாக இருக்கின்றது. சகல விதமான பேறுகள், சம்பத்துகள், அற்புத சக்தி, தெய்வப் புலமை ஆகியவைகளால் நிறைந்த பொக்கிஷத்தைத் திறப்பதற்குரிய திறவுகோல் இம்முஹப்பத்தேயாகும். இத்திறவுகோல் உங்களிடம் இல்லையானல் அதனைத் திறந்துக் கொள்வது மிகப்பிரயாசையாகவே முடியும்.

ஒருவர் தம்முடைய தகப்பன் பிள்ளே மற்றுமுள்ளோர்கள் மீது வைக்கும் அன்பை விட அதிகமாக முஹம்மது (ஸல்.) அவர்கள் மீது அன்பு வைக்காத வரை அவர் மூமினுக மாட்டார் என்பது இஸ்லாத்தின் வேத வாக்கிய மாகும்.

நாம் எந்த முஸ்லிம்களிடத்திலும் சென்று நீங்கள் பிரார்த்திக்கும் துஆவுடனே சுவர்க்கத்தில் நபிகள் நாதர் (ஸல்.) அவர்களே தெரிசிக்க வேண்டும் என்ற வாக்கியத்தையும் சேர்த்துக் கொள்கின்றீர்களா?" என்று வினவினுல் ஒவ்வொருவரும் 'ஆம், ஆம்!" என்றே பகர்வார்கள். ஆகவே உங்கள் துஆ இவ்விதமாகவே இருந்தால், உங்கள் ஆசையும் இவ்விதமாகவே இருந்தால், உங்களது எண்ணமும் நோக்கமும் இப்படியே இருந்தால், அக்காரியத்தில் வெற்றியடைவதற்கு அவர்கள் காண்பித்த நெறியை சற்றேனும் தாமதியாமல் பின்பற்றி நடப்பதற்கு முனைந்து வாருங்கள்.

ஹதீது ஷரீபில் ஒரு சம்பவம் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அது வருமாறு:—

ஒரு சஹாபியானவர் நாயகம் (ஸல்.) அவர்களது சமுகம் வருவதும் அவர்களின் ஒளி பொருந்திய முகத்தின் மீது பார்வையை செலுத்தி அப்படியே யோசனையில் ஆழ்ந்து போவதுமாக இருந்தார். மூடிய கண்ணே மறுபடி திறக்கமுடியாத அத்துணே உயரிய தியானத்தில் மூழ்கிப் போவார்; அவரது பார்வை மனக்கலக்கத்துக் குறிய தன்று. ஆனல் அவர்களது முகஒளியின் அழகைத் தெரிசித்து இன்புறும் பார்வையாகவே இருந்தது. அவ்வழகில் அடங்கியிருக்கும் இரகசியத்தை விளங்கிக் கொள்ளும் யோசனே யுடையதாகவே இருந்தது. அப்பார்வையானது அகக்கண்ணிற்கு ஒளியினே அளிக்கக் கூடிய பேரொளியாகவே இருந்தது. ஒரு பொழுது நாயகம் (ஸல்.) அவர்கள் அவரை சந்தித்து அவரது நிலேமை என்ன வென விசாரித்தபோது அவர் கொடுத்த விடையின் கருத்தாவது "தாங்கள் விண்ணுலகில் 'ஜன்னத்துல் பிர்தவ்ஸ்' என்னும் உன்னதஸ்தானத்தில் வீற்றிருக்கும் போது என்னேப் போன்ற அற்பர்கள் எல்லோரும் தங்க

ளுடைய ஒளிபொருந்திய தெரிசனையைச் கண்டானந்திக்க இடமில்லாது போய்விடும் என்னும் ஞாபகம் வருஞ்சமயத்தில் யான் எனது மனதுக்கும் கண்ணுக்கும் "சம்பூர்ண மாகிய அழகின் தெரிசனையை இவ்வையகத்தி லேயே பார்க்கக் கூடிய சக்தியை உண்டு பண்ணிக் கொள்கின்றேன். இவ்வுலகத்தில் தவறினுல் பிறகு எனக்கு எங்கு சந்தர்ப்பம் வாய்க்கப் போகிறது? எனக்கூறினர். இதனை செவியுற்ற நாயகம் (ஸல்.) அவர்கள் "நீர் வழிதவறி நடக்கின்றீர்; நான் உமக்கு ஒரு இரகசியம் கற்பிக்கின்றேன் அதாவது:— ஒருவரிடத்தில் எம்மனிதன் அன்புவைக்கின் ருனே அவன் அம் மனிதனுடனேயே இருப் பான்" என அருமொழி கூறினர்கள்.

மேற்படி போதனையைக் கேட்ட அந்த ஸஹாபியானவர் புத்துப்பிரால் வளம்பெற் றவராக தர்பாரிலிருந்து அப்போதனையை நாவினல் சொல்லிக்கொண்டே நடந்தார். மற்ற ஸஹாபாக்களும் இதனைக் கேட்டு மிக மகிழ்ச்சி யடைந்தனர். இவ்வாறு சற்குணங் கள் ஒருங்கேஅமையப்பெற்ற இஸ்லாம் மார்க் கமானது, சகல மார்க்கங்களைப் பார்க்கினும் மேலானதாகத்திகழ்வதற்கு இன்னும் அநேக உதாரணங்கள் திருமறை திருவாக்கியங்களி லும், நாயக திருவாக்கியங்களிலும் திகழ்ந்து கொண்டிருப்பது தெற்றென புலனுகும். இதனல் இஸ்லாத்தின் மேன்மை உயர்வு முதலியவைகளை நன்கு தெரிந்து கொள் ளலாம்.

முஸ்தபா கமாலின் விபரீதத் தலையீடு.

காஜீ முஸ்தபா கமால் பாஷா ஒரு நூதன முறையை கையாண்டு வருவதாக ராய்ட்டர் செய்தியிலிருந்து அறிகின்றேம். அதாவது குஸ்தந்துனியாவின் ஜாமிஃ மஸ் ஜிதில் வெள்ளிக்கிழமையன்று அரபிப் பாஷைக்குப் பகரம் துர்க்கிப்பாஷையில் தொழுகையை நிறைவேற்றப்பட்டதாம். பார்லிமெண்ட் மெம்பர்களும் அதுசமயம் விஜயஞ் செய்திருந் தனராம். இச்செய்தி உண்மையாக இருந்து காஜீமுஸ்தபா கமால் பாஷா எடுத்துக்கொண்ட இம்முயற்சிகள் வெற்றிகரமாக முடிந்திருக்கு மாகில், பிற்கா லத்தில்சில வருடங்களுக்குள் தேச முழுதும் அரபிக்குப் பகரம் துர்க்கிப் பாஷையிலேயே தொழுகையினை நிறைவேற்றும் வழக்கம் வேரூன்றிவிடும் என எண்ண இடமேற்படு கிறது.

கமாலின் நோக்கம்

காஜீ முஸ்தபா கமால் பாஷா இதுவரை சில மாற்றங்கள் செய்து வந்திருக்கின்றூர். துர்க்கிகளின் உடைகளை வேறு முறையில் அமைத்தார்; ஹேட், (தொப்பி) அணியச் செய்தார்; கோஷா வழக்கத்தை ஒழித்தார்; கிலாபத் ஸ்தாபனம் கிள்ளி எறியப்பட்டது; அரபி எழுத்துக்களால் எழுதப்பட்டு வந்த துர்க்கி மொழியை லத்தீன் எழுத்துக்களால் எழுத ஆரம்பிக்கப்பட்டது. இத்தகைய சீர் திருத்தங்களால் துர்க்கிகளின் தேசாபி மானத்தை வளரச் செய்யவேண்டுமென்பது தான் அவரது நோக்கமாகும். அவர் தற் போது புதிய தோர் விஷயத்தில் தலையிட் டிருப்பதும் அந்நோக்கத்தின் ஒரு கூருக இருக்கலாம். உடை, பாஷை, அரசியல் இவைகளைப் போன்று இப்போது மதத்தினை யும் தேசாபிமான உடையால் அலங்கரிக்க அவர்எண்ணங்கொண்டிருக்கின்றூர்போலும்.

பின்னல் விளையப்போகும் கேடுதி.

"அரபியல்லாத ஒருவர் தமது சொந்த மொழியில் தொழுகையினை நிறைவேற்றக் கூடுமா, கூடாதா?" என்னும் கேள்வி முஸ் தபாகமால் பாஷாவால் மட்டும் ஆலோசனைக் கெடுத்துக் கொள்ளப்பட்டதென்று எண்ணி விடவேண்டாம். நம் பண்டைய மார்க்க நிபுணர்களுக்கு முன்னல் இப்பிரச்சினை பன் முறையும் கொண்டுவரப்பட்டு முடிவு கூறப் பட்டிருக்கிறது. ஆனல் காஜீ பாஷாவின் சென்ற நடவடிக்கைகளை கவனிக்குங்கால் அவர் இது வரைசெய்துள்ள மாற்றங்க ளோடு திருப்தியுறுவார் என்று சொல்லிவிட முடியாது. தொழுகை நிறை வேற்றும் விதத் திலும் சீர்திருத்தங்கள் செய்வரோ?; தொழு

கை வேளைகளை மாற்றியமைப்பரோ? தொழுகையின் எண்ணிக்கையினை குறைப்பரோ? தொழவேண்டிய முறைகளை நூதனமாக அமைப்பரோ? ரக்அத்துக்களின் எண்ணிக்கையினையும் துஆக்களின் நடை முறைகளையும் கூடுதல் குறைவாகச் செய்வரோ என்னுமுள்ள பலவாறான சந்தேகங் கொள்ள வேண்டியதாகயிருக்கிறது. அல்லாஹ் தஆலா இவ்விதமான சோதனைகளில் நின்றும் முஸ்லிம்களைக் கரையேற்றுவானாக.

அவருக்குள்ள ஆதாரம்

காஜீ பாஷாவின் இத்தகைய நவீன சீர்திருத்தங்களை சில பத்திரிகைகள் ஆராய்ந்து கொண்டிருக்கின்றன. அவருடைய இன் நூதன அனுஷ்டானத்திற்கு கீழ்வரும் காரணங்கள் குறிப்பிடப்படுகின்றன. அதாவது:- அரபிப்பாஷையைஅறவே அறியாதவர்களும் தொழுகை இன்னதென விளங்கிக் கொள்ளாமல் ஐந்து நேறத் தொழுகையையும் தொழுகின்றனர்; அத் தொழுகையினால் அவர்களுக்கு என்ன பிரயோசனம் உண்டாகும். தொழுகை என்பது வெரும் கிறியை அன்று; ஆனால் அது தன்னுள் மகாமேலான ஒரு நோக்கத்தினையும் உள்ளடக்கிக்கொண்டிருக்கிறது. எவனொருவன் தொழுகையின் கருத்தை விளங்கிக் கொள்ளவில்லையோ, தொழுகையிலுள்ள வார்த்தைகளின் பொருளைத் தெரிந்துக் கொள்ள வில்லையோ, இறைவனுடன் ஐக்கியப்பட்டு நிற்கும் அதே சமயத்தில் தன் நாயனோடு என்ன செய்கின்றான் என்னும் தன்மையினை அறிந்துக்கொள்ளவில்லையோ அவன் எவ்வாறு தொழுகையின் உண்மையளவில் சேரமுடியும் என்பதே.

தொழுகையின் நோக்கம்

முதன் முதலில் நாம் தொழுகையின் தாத்பரியம் என்னவென ஆராய்ந்து பார்க்க வேண்டியவர்களாகின்றோம். சர்வரே ஆலம் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் சிறந்த அறிக்கையாவது:— "தொழுகையானது தீனின் ஸ்தூபியாகும்; எவன் தொழுகையினை நிலை நிறுத்தினானோ அவன் தீனை நிலை நிறுத்தினவனாவான்; எவன் தொழுகையினை அலட்சியம் செய்தானோ அவன் மார்க்கமிழந்தவனாவான் என்றும்; காபிர்களை விட்டு மூமினானவர்களை வேறுபடுத்தி வைப்பது தொழுகையே என்பதே. இவ்வாக்கியங்களினால், தொழுகையானது முஸ்லிம்களின் வாழ்கையின் அம்சமென்றும், அவர்களின் மார்க்கத்தை நிலை நிறுத்தவல்ல தூணென்றும், தெளிவாக புலனாகின்றது. ஆகவே தொழுகையினைக் கடைப்பிடித்தலானது தீனை பாதுகாத்தது போலவேயாம்.

நான்கு பிரிவுகளும் அவற்றின் தன்மைகளும்

தொழுகையினை, தொழுபவனது நிலைமையை அனுசரித்து நான்கு விதமாகப் பாகுபாடு செய்யலாம்.

(1) சகல முஸ்லிம்களும் அரபிப்பதங்களை உபயோகித்துத் தொழுது வருவதும், அப்பதங்களின் பொருளை நன்கு அறிந்திருப்பதுமாகும். இம்முறை தான் மிக்க மேலானதாகும். இதில் வெளிரங்கமான ஒற்றுமை ஏற்பட்டு விடுவதுடன் தொழுகையின் பிரதான நோக்கமும் ஆத்ம பரிபக்குவமும் ஒருங்கே காணப்பட்டுப்போகிறது. இவ்வாறு அனுஷ்டித்து நடப்பது கொண்டு இஸ்லாமிய உலகத்தினர் யாவருடைய வாழ்க்கையும்ஒரே விதமான அனுஷ்டான முறையிலிருப்பதைக் காணலாம். இதனால் எல்லோரும் ஆண்டவனது கட்டளைகளை நன்கு தெரிந்துகொண்டு அவனை வணங்குவதினின்று மறதியுடையவராகா திருப்பதைக் காணலாம்.

(2) சகல முஸ்லிம்களும் அரபிப்பதங்களை உபயோகித்து தொழுது வருவதும், ஒரு சிலருக்கே அவ்வார்த்தைகளின் பொருள் தெரிந்திருப்பதுமாகும். இதில் தொழுகையின் வெளிக்கோலத்தில் மட்டும் ஒரே தன்மை காணப்படினும், அதன் பொருள் தெரியாதவர்கள் ரூஹினுடையவும் காரிய சித்தியினுடையவும் ஒரே தன்மையில் மிக குறைந்த பங்கினை உடைபவர்களாவார்கள்.

(3) முஸ்லிம்கள் தங்கள் சுயபாஷைகளில் தொழுவது:—இவ்வண்ணம் தொழுவதில் உண்மை பக்தர்கள் இறைவனது திருநாமங்களுடைய புண்ணியம், வரிசை பெருமை, இனிமை, விசாலம் முதலியவைகளில் நின்றும் பேறு கெட்டவர்களாய்விடுவர்; தொழுகையின் வெளியமைப்பும் பல கோலமாய் விடுகிறது. ஒரு தேசத்திலுள்ள முஸ்லிம்கள் மற்றொரு தேசத்திலுள்ள இமாமின் பின் நின்று தொழுதுக்கொள்வதால் எந்த

விதமான மனோ உற்சாகமும் திருப்தியும் அடையப் பெறமாட்டாதவர்களாய் விடுகின்றனர். சகல முஸ்லிம்களும் ஒன்றுசேர்கின்ற ஹஜ்ஜில் அரபித் தொழுகை அனைவருக்கும் நூதனமாகவும், இயற்கைக்கு மாற்றமாகவும் தோன்றும். இதில் ஒவ்வொரு தேசத்தவரும் அவரவரின் தேச பாஷையில் தொழுகையினை நிறைவேற்றும் விஷயத்தில் அத் தொழுகையினை அவரவரும் நன்கு அறியக் கூடும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால் எந்த வியாக்கியானமும் ஆண்டவனாலருளப்பெற்ற அரபிப் பதங்களின் கருத்தைக் கொடுக்கமாட்டாதென்பது திண்ணம். இறைவன் உபயோகித்திருக்கும் வஸனங்களின் விளக்கம் மிக்க விசாலமுடையதாகும்; அவைகளால் ஒவ்வொருவரும் தத்தம் சக்திக் கேற்ப சுவை அனுபவிப்பர். ஆனால் அதனை மொழிபெயர்த்து விடுவதால் அதன் இன்பமும் நிலையற்று விடுகிறது. அன்றியும் மொழிபெயர்ப்பில் பலவித விகர்ப்பங்களும் முரண்பாடுகளும் உற்பத்தியாகும். ஒரே தேசத்திலேயே ஒரு வார்த்தையின் மொழிபெயர்ப்புக்கள் ஒரே தன்மையாக இருப்பதில்லை. காலம் செல்லச் செல்ல முஸ்லிம்களின் ஏகமான யோசனா சக்தியும், ஏகமான கிரியாம்சங்களும் அழிந்துபோகும்; அரபிப் பாஷையின் மூலாதாரத்திற்கே ஹானி நேரிட்டு விடும்; அதனால் அரபிப் பாஷையானது இஸ்லாமிய உலகத்தினரின் பொதுப்பாஷைஎன்பது எடுபட்டுப்போகும். ஆதலின் இஃது மிக தீமையில் தலையிடுவது போலாகும்.

இக்காலத்தில் தொழுகையில் ஓதி வரப்படும் வார்த்தைகள் அரபிப் பதங்களாக இருக்கின்றன; அப்பதங்களில் அமைந்திருக்கும் தெய்வீக சக்தியின் காரணமாகவே ஒவ்வொரு முஸ்லிமும் அப்பாஷையின் மீது அளவுகடந்த அபிமானம் வைத்திருக்கின்றனர்; இவ்வபிமானம் குறைந்து விடுமாகில் மானிடர்களை குர்ஆன், ஹதீது ஷரீப் இவைகளுடன் இணைத்து வைத்திருக்கும் சங்கிலியானது துண்டிக்கப்பட்டுப் போம். அதனால் மார்க்கப் பற்றும் அகன்று போய்விடும்.

இக்காலத்தில் திருகுர்ஆன் வாக்கியங்களை மொழி பெயர்ப்பதிலும் அதற்கு பொருள் கூறுவதிலும் பற்பல வித்தியாசங்கள் காணப்படுகின்றன. எனினும் அரபிப் பாஷையின் மூலப்பொருளானது அவற்றை விரிவாகப் பரத்தி தப்புந்தவறுமாக விளங்கவிடாமல் பாதுகாத்துக் கொள்கிறது. ஆகவே ஒரு நாளைக்கு ஐந்துவேளை அவசியமாயும் முக்கியமான கடமையாயும் உள்ள தொழுகையானது, அரபிமொழியினை இழந்துவிடுமாயின், முஸ்லிம்களின் பொது வாழ்வும் தானாகவே அரபிப் பாஷையின் மீதுள்ள விருப்பத்தைக் குறைத்துவிடும். பிறகு மதக் கல்வி, இஸ்லாத்தின் ஒற்றுமை, ஏக அபிப்பிராயம், ஏக அனுஷ்டானம், முதலியவைகளில் தீங்கு நேரிடும். முடிவாக இவ்விஷயத்தை நாம் எவ்வளவு தூரம் ஆராய்ந்து பார்த்தபோதிலும் காஜீமுஸ்தபா கமால் பாஷா மதத்தில் தலையிடுவதிலும், நாம்அவரைப் பின்பற்றிச் செல்வதிலும் ஆயிரக்கணக்கான கெடுதிகளும் விபரீதங்களும் விளையக்கூடும் என்ற இரகசியத்தைத் தவிர வேறொன்றையும் கண்டுக் கொள்ளமாட்டோம்.

(4) சிலர் அரபி வாக்கியங்களை உபயோகித்துத்தொழுவதும், சிலர் தங்கள் தேச பாஷையால் தொழுவதும் :—இவ்விதமான நிலைமைகளினால் விளையும் கேடுகள் எல்லோருக்கும் தெரிந்தவையே.

உண்மைத் தவறு எங்கிருக்கிறது ?

நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் காலத்திலும், குலபாயே ராஷிதீன்களது காலத்திலும் அறபிகளல்லாதாரில் பலர் முஸ்லிமாயினர்; அவர்கள் எல்லோரும் அரபிப் பாஷையிலேயே தொழுகையை நடத்திவந்தனர்; அக்காதில் பாஷையினை அறிந்து தொழவேண்டுமென்ற கேள்வி எழவில்லை. ஏனெனில் இஸ்லாத்தைத் தழுவிய பின் இஸ்லாம் மதமானது, தம்முடைய ஒவ்வொரு மக்களும் அரபியைக் கற்றுக்கொள்வர் என எதிர்பார்த்திருந்தது. இஸ்லாம் உலக மதமென்பது முஸ்லிம்களின் பிரதான நோக்கமாகும்; அம்மதம் இடைவிடாது உழைத்து வருவதின் முழு நோக்கமெல்லாம் மனித சமூகத்தை தேசம், நிறம், வம்சம் இவைகளில் வித்தியாசம் பாராட்டுவதில் நின்றும் விடுதலை செய்து, ஒரு ஏகமான ஜாதியாராகத் திகழச் செய்யவேண்டுமென்பதே யாகும். ஆனால் மனிதவர்க்கத்தார் யாவருக்கும் பொதுவாக ஒரு பாஷை இருக்காத வரை அவர்கள் ஒரே ஜாதியாராக கட்டுப்பட்டி

ருக்க முடியாதென்னும் உண்மை பலருக்கு விளங்குவதில்லை. முஸ்லிம்கள் எல்லோருக்கும் பொதுவாக இருக்கத்தக்க பாஷை குர்ஆன் எப்பாஷையில் இறக்கப்பட்டதோ, அப்பாஷையே யாகும். எவ்வகையில் பார்த்த போதிலும் முஸ்லிம்கள் அறபிப் பாஷையை விட்டு மறதியாளர்களாகவும் அரபியைத் திரும்பிப் பார்க்காதவர்களாகவும் இருக்கும்படி செய்வது பல்வகை கெடுதிகளுக்கு அடிகோல்வது போலாகும். கல்வி கற்க வேண்டியதும், குர்ஆன் ஓதுவதும், அதன் பிரகாரம் நடக்கவேண்டியதும் ஆண் பெண் இருபாலருக்கும் கடமையாக இருப்பதால், அரபிப்பாஷையை முஸ்லிம்கள் நிரந்தரமாக கற்கவேண்டியது மிகமிக அவசியமாய் விடுகின்றது. இதை நாம் நன்கு கவனித்துப் பார்ப்போமாயின், தொழுகையினை அரபிப்பாஷையில் நிறைவேற்றுவதா? அல்லது இதர பாஷைகளில் நிறைவேற்றுவதா? என்ற கேள்வியே பிறக்க முடியாது. எப்படியேனும் தொழுகையை அரபிப் பாஷையிலேயே நிறைவேற்றுவதே சரியான முறையாகுமென நன்கு தெரிந்து கொள்வோம். நாம் அரபிப் பாஷையினை அறியாது போனல் நம்முடைய கடமைகளில் ஒன்றை கைநழுவ விட்டவர்களாவோம் என்பது திண்ணம்.

உண்மைப் பரிகாரம்

நாம் அரபிப் பாஷையினை கற்காமலிருப்பது ஒரு குற்றம்; அரபிப் பதங்களின் பொருளை அறிந்துதான் தொழவேண்டுமென்னும் சாக்கின் பேரில் அரபிப் பதங்களை விலக்கி இருப்பதும் மற்றோர் குற்றமாகும். தொழுகையை நன்கு அறிந்துதான் தொழவேண்டும் என்று நாம் எல்லோரும் ஒரே மனதாக ஒப்புக்கொள்கின்றோம். தவிர தொழுகையில் ஏற்படும் வார்த்தைகளின் அர்த்தம் நன்கு விளங்காமலும், அதில் நன்கு சிந்தனை செய்யாமலும் தொழுவது அத்தொழுகையின் உண்மைக்கும் பெருமைக்கும் முற்றும்முரண்பாடுடையது என எல்லோரும் எற்றுக்கொள்ள கூடியதுதான். ஆனால் அவ்வறியாமைக்குத்தக்க மருந்தாகிய அறபிக் கல்வி கற்பதை விட்டு வேறொரு நோயை விருத்திபண்ணுவதுதான் மிக மதியீனமான செய்கையாகும். தொழுகையில் உபயோகிக்கும் வார்த்தைகளின் பொருளை விளங்கிக்கொள்ள முடியாமல் போகின்ற அவ்வறியாமையை நீக்குவதற்கு மிகப் பொருத்தமான வழியானது, அரபிப் பாஷையினை கற்பதேயாம். அதுவன்றி அரபியைத் தவிர்த்து இதர பாஷைகளைத் தெரிந்து கொள்வது அக்குறையை நிவர்த்தி செய்வதற்குள்ள வழியாக மாட்டாதென்பது திண்ணம்.

காஜீ முஸ்தபா கமால் பாஷா அரபி அட்சரங்களுக்குப் பகரம் லத்தீன் எழுத்துக்களை உபயோகித்து அதில் அவர் வெற்றி பெற நினைக்கும்போது, அரபிப் பாஷையினை உபயோகித்து தொழுகையில் ஓதப்படுபவைகளின் பொருளைக் கற்றுக்கொள்ளும்படி செய்வது அவருக்கு ஒரு பிரதான காரியமாக மாட்டாது. அவ்வாறு செய்யாது மாற்றம் செய்ய முற்பட்டிருப்பது மார்க்கத்தின் மகிமையைக் குறைக்க முற்பட்டிருப்பது போலிருக்கின்றது. இதன் உண்மையினை முஸ்லிம்கள் நன்குணர்ந்து நடந்து கொள்வார்களென மிக மிக எதிர்பார்த்தவர்களாகவே யிருக்கின்றோம்.

கிறிஸ்தவப் பிரசாரத்தின் போக்கு

இது காலை நமது நாட்டில் கிறிஸ்தவப் பாதிரிகள் தங்கள் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவான் வேண்டி எல்லை கூறமுடியாத அவ்வளவு பெரும் முயற்சி செய்து வருகின்றனர். அன்னோரின் பிரசார வலையினுள் பாமர மக்கள் சிக்குண்டு உலக, மத வாழ்க்கையினை இழந்து உட்காரப்போகின்றன ரென்னும் ஐயம் ஏற்படுகிறது. ஆதலின் இச்சிறு கட்டுரையினை வரையலுற்றோம். எனவே ஒவ்வொரு முஸ்லிம் சோதர சோதரிகளும் இதனை நன்கு ஞாபகத்தில் வைத்து கற்றிலார்க்கு மற்றையோர் வாசித்துணரும்படி செய்வார்களேல் அல்லாஹ்வினருளால் அவர்கள் சன்மார்க்கத்தை விட்டு சற்றேனும்

பிசகி விடுவாரென்ற அச்சம் சிறிதேனும் இல்லாது போகும். எந்த மிஷ்னரி பிரசாரகராவது மதத்தின் பக்கல் அழைக்கவோ அல்லது தர்க்க வாதம் புரியவோ ஆரம்பிக்குஞ் சமயத்தில் திடமாக அவர் முன்னின்று கீழ் காணும் வினக்களை விடுத்து விடைபகரத் தேடுவீர்களேல் நிச்சயமாக அவர் நாணமுற்று அத்தகைய பிரசாரத்தினின்றும் பின்னடைந்து விடுவதுடன் அதற்குப் பின் அவ் வேலையிலீடு படவுமாட்டாரென்பது திண்ணம்.

1. இஸ்ரவேலரல்லாத மற்றையோரை கிறிஸ்தவ மதத்தின் பக்கல் அழைப்பதற்கு இன்ஜீல்வேதம் அனுமதி கொடுத்திருக்கின்றதா? அன்றி இல்லையா? இல்லை எனின் எம்மனோரை நீவிர் அழைப்பது வீணேயன்றோ?

"இஸ்ரவேலர்க்கு மாத்திரமன்றி வேறு எச்சாதியாருச்கும் நான் நபியாக அனுப்பப்படவில்லை" (மத்தேயு அத்தியாயம் 24, பாடம் 15) என மஸீஹ் (அலை.) அவர்கள் மிகத் தெளிவாக அறிவித்துச் சென்றிருக்கிறார்கள். மேலும் தமது ஹவாரிய்யீன்களான தோழர்களை நோக்கி "நீங்கள் பொதுவாக யாவரிடத்தும் போகக் கூடாது; ஸாமிரீன்கள் வசிக்கின்ற எந்தப் பட்டணத்திற்கும் செல்லலாகாது; இஸ்ரவேலர் எங்கு இருக்கின்றனரோ அங்கேயே செல்லவேண்டும்." என்று தாக்கீதாகக் கூறி இருக்கின்றார்கள். இவற்றால் இஸ்ரவேலர்களல்லாத மற்றையோரை கிறிஸ்தவ மதத்தில் அழைப்பது ஈஸா (அலை.) அவர்கள் கட்டளைக்கு முற்றும் முரணானதென தெற்றெனப் புலனாகின்றது. ஆகவே பாதிரிகள் இஸ்ரவேலரல்லாத நம்மவர்களை எதற்காக தம்மார்க்கதின்பக்கல் அழைக்கின்றனர்? அதிலும் இஸ்ரவேலரல்லாத ஒரு பாதிரியானவர் கிறிஸ்தவ மார்க்கத்தை அவரேபின்பற்றுவது நியாயமற்றதாக இருக்க, ஏனையோர்களை அதன் பக்கல் அழைப்பது எங்ஙனம் நியதியாகும்? கிறிஸ்தவ மார்க்கம் இஸ்ரவேல் கூட்டத்தாருக்கு மாத்திரம் சொந்தமான தாகும். இந்நிலைமையில் பாதிரியானவர் இஸ்ரவேலரல்லாத ஒரு வகுப்பைச் சேர்ந்தவராகயிருப்பின் இப்பொழுதே அவர் பின்பற்றியிருக்கும் மார்க்கத்தை விட்டகன்று இஸ்லாம் மதத்தைத் தாமும் தழுவுவதுடன் இஸ்ரவேலரல்லாத மற்ற கிறிஸ்தவர்களையும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்யக் கடமைப்பட்டவராகின்றார். ஏனெனின் நிச்சயமாகவே நமது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அகில மனுத்திற்குமே நபியாக அனுப்பப்பட்டிருக்கின்றார்களாதலின் யாவரும் நந்தீனுல் இஸ்லாத்தில் வந்து சேர்ந்து கொள்ளலாம். அதற்கு தீனுல் இஸ்லாம் முழுதும் அனுமதி அளிக்கின்றது.

"மனித சமூகத்தார் அனைவர்க்கும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவேயன்றி உம்மை யாம் அனுப்பவில்லை"; என்று நாயகம் (ஸல்.) அவர்கள் விஷயத்தில் ஆண்டவன் கூறியிருக்கின்றான்.

II. "மனிதர்கள் பாவஞ் செய்தனர்; இவர்களின் பாவ விமோசனத்திற்காக ஈஸா (அலை) சிலுவையில் தூக்கப் பட்டார்கள்" என்று பைபிள் கூறுகின்றது. (அத்தியாயம் 14 பாடம் 14).

எனவே ஈஸா (அலை) சிலுவையில் அகப்பட்டு, பாபத்தால் வரும் சாபக் கேட்டை நம்மை விட்டு அகற்றி ஆண்டவனின் முனிவுக்கு ஆளாகிவிட்டார்களென இதனால் நன்கு புலனாகின்றது. ஏனெனில் "சிலுவையில் போடப்பட்டவன் முனியப்பட்டவன்," என்று கூறப் பட்டிருக்கிறது. (இவ்வித தீய கொள்கையை விட்டும் ஆண்டவன் நம்மை காத்தருள்வானாக.)

ஆகவே ஏசு சிலுவையி லறைபட்டு விட்டதால் யாவருடைய பாவமும் அவரால் நிவர்த்தியாய் விடுகிறது; பெயருக்கு மட்டில் மார்க்கத்தைப் பின்பற்றியிருப்பதாகச் சொல்லிக்கொள்ளுதல் போதுமானதாகும் என்பதை கேள்விபட்ட கட்டுப்பாடுள்ள மதங்களைப் பின்பற்றி இருந்த அநேகர் புழுக்கமுற்று வரம்பற்ற கிறிஸ்தவ மார்க்கத்தில் சேர ஆரம்பித்தனர். இதுதான் கிறிஸ்தவ மதப் பிரசாரத்தின் உண்மை இரகசியமாகும்.

முஸ்லிம்கள் ஞாபகத்தில் வைக்கத் தகுதியான விஷயம் ஒன்றுண்டு. அதாவது ஒருவன் செய்த குற்றத்திற்காக வேறொருவன் தண்டனை அடையவேண்டுமென்பது எந்த கிரிமினல் கோர்ட்டின் சட்டமாகும்? என்பதுதான் விளங்கவில்லை. ஒருவர் மற்றவரின் பாவத்தை ஏற்றுகொள்ள மாட்டார் என நமது திருமறை கூறுகின்றது. ஒருவன்

திருட அதற்காக வேறொருவன் சிறைக்குப் போகவேண்டுமென்று சொல்வதை எந்த அறிவுதான் ஏற்றுக்கொள்ளும்? இஃது யுக்திக்கும் சுருதிக்கும் ஒவ்வாத காரியமாகவே இருக்கின்றது. இம்மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள் எந்த கெட்ட கருமத்தைத்தான் விட்டு விடுவார்கள் என்று எண்ணுகின்றீர்கள்? அவர்கள் ஒன்றையுமே விடப்போவதில்லை. ஏனெனின் இவர்களின் பாதகச் செயல்கள் அனைத்திற்கும் பழியாகவேதான் ஈஸா (அலை.) சிலுவையி லறைபட்டிருப்பதால் இவர்களுக்கு விமோசனம் கிடைத்து விடுமாம்; இவர்கள் பாவங்கள் யாவற்றும் பொருக்கப் பட்டுப் போய்விடுமாம்? அந்தோ! என்ன விபரீதம்!

அம்மதத்தில் கொலைத் தொழில் புரிவதும் திருடுவதும் வியபிசாரஞ் செய்வதும் ஒரு பயங்கரமான விஷயமாகயிருக்க வில்லை. ஏனெனில் இம்மதத் தில் சகல பாவங்களும் பொருக்கப்பட்டுப் போயிருக்கின்றது. இவ்வாறு மானிடர்களை பாவத்தை விட்டு விலக்காத ஒரு மதமானது எப்படி உண்மையான மதமாகயிருக்க முடியும். மதம் என்பது மக்களை தீமையினின்று காப்பாற்றக் கூடியதாகவே இருக்கவேண்டும். ஆனால் கிறிஸ்தவ மதமோ கெடுதிகளைத் தடுப்பதில்லை; ஈஸா (அலை.) அவர்களின் பழியை ஜனங்களுக்கு எடுத்தோதி அவர்களைப் பின்பற்றுகிறவர்களின் பாவமனைத்தும் பொறுக்கப் பட்டு போகும் என்று பறைசாற்றி பாவத்தினுடைய அச்சத்தையே மனதை விட்டு அகற்றி விடுவதுடன் மனிதனை பாவஞ் செய்ய ஆர்வமுடையவனாகவும் ஆக்கி விடுகின்றது. அதனால் ஒவ்வொரு சமயத்தவரும் கிறிஸ்தவர்களுக்கு பயப்படும்படி நேரிடுகின்றது. ஏனென்றால் அவர்கள் பாவம் பொறுக்கப்படுவதாக இருப்பதால், வெட்டவோ திருடவோ நினைத்த நிமிஷத்தில் அவர்கள் செய்து முடித்து விடலாம். அரசாங்க சட்டம் தான் ஒருக்கால் அன்னோர்களை தீய காரியங்கள் புரியாது தடுத்து வைத்திருக்கும் போலும். அதுவன்றி அவர்கட்கு மார்க்க சம்பந்தமான யாதொரு கட்டுப்பாடு மில்லாது போகின்றது.

ஹா! இவ்விதமான விஷயங்களை ஆண்டவனுடைய ரசூலாகிய ஈஸா (அலை.) சொல்லியிருப்பார்களென்று நினைக்கின்றீர்கள்? ஒருக்காலு மில்லை என்பது திண்ணம். ஆனால் வேறு உண்மைக் காரணம் என்ன? இடைக்காலத்து சுயநலப்பிரியர்கள் இன்ஜீல் வேதத்தை மாற்றி இவ்வாறு ஆக்கி விட்டிருக்கின்றனர். ஆகவே இக்காலத்தில் இருக்கின்ற பைபிள் நம்பத்தக்கதல்ல வென்பதும், இத்தகைய உண்மையற்ற இன்ஜீல் வேதத்தைப் பின் பற்றி நடக்க அழைப்பது தவறு என்பதும் தெள்ளத் தெளியப் புலனாகி விட்டது.

நம் கிறிஸ்தவ சகோதரர்கள் இதனை நன்கு சிந்திப்பார்களாயின் மிக உத்தமமாயிருக்கும் அதற்கு ஆண்டவன் உதவி செய்வானாகவும்.

அன்பர்காள்! கிறிஸ்தவர்கள் எதுவரை தங்கள் மூட நம்பிக்கைகளை விட்டு பாவமன்னிப்பைத் தேடிக்கொள்ள வில்லையோ அதுவரை இவ்வாட்சேபனைகளுக்குத் தாறுமாறான பதிலையன்றி புத்திக்குப் பொருத்தமான சமாதானத்தையளிக்க ஒரு பொழுதும் அவர்கள் முன்வர மாட்டார்களென்பது திண்ணம்.

இஸ்லாமிய ஷரீ அத்தில் தொழிலின் மேன்மை

ஆண்டவனது மகாத்மியங்களை அறிந்து அவனை வணங்குவதற்காகவே மானிடர்கள் இப்பூவுலகின்கண் படைக்கப்பட்டிருக்கின்றனர். ஆண்டவன் மீது அன்புகொள்வதே அவனை அறிந்ததற் கடையாளமாகும். தான் உகப்புக்கொண்டவருக்கு வழிப்பட்டு நடப்பதே பிரீதிகொண்டதற்குள்ள உண்மை அடையாளமாகும். ஆதலின் ஆண்டவனது கட்டளையை நிறைவேற்றுவதுடன், மார்க்கத்தில் விலக்கப்பட்டவைகளிலிருந்து தவிழ்ந்து நடப்பதற்கு வழிப்படுவதெனச் சொல்லப்படும்.

வழிப்பட்டு நடப்பதற்குரிய கருவிகள் இருவகைத்து. அதிலொன்று மனமாகும்.

ஆண்டவனால் அனுப்பப்பட்டவைகள் மீது உண்மை கொள்வது மட்டுமே இத்துடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. மற்றொன்று அவயவங்களாகும். நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களும் அத்துடன் சம்மந்தம் வைத்திருக்கின்றன. ஆகவே இறைவனுக்கு வழிப்பட்டு நடப்பதற்காக நம்முடைய உறுப்புக்களை தயார் செய்வதும், அவைகளை பலப்படுத்துவதும் வணக்கத்திற்குரிய கருவிகளை சீர்படுத்துவது போலவேயாம். அவ்வவங்கங்களுக்கு வேண்டிய சக்தியும் வலிமையும் உண்ணல் உடுத்தல் முதலியவைகளையே சார்ந்திருக்கின்றன. ஆதலின் ஹலாலான தொழில் புரிந்து அதனால் அவைகள் யாவும் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றின் மூலம் நம் உருப்புகளின் விருப்பங்களெல்லாம் நிறைவேற்றப்படுமாயின், நிச்சயமாக நாம் அவயவங்களினால் புரியும் வணக்கங்களெல்லாம் ஒப்புக்கொள்ளத் தக்கனவாய்விடும். அல்லாஹ் மிக பரிசுத்தவானாகயிருப்பதால் அவன் மிக பரிசுத்தத்தையே நாடுகின்றான். சந்தேகிப்பட்ட அல்லது ஹராமான உண்ணல், குடித்தல் உடுத்தல் ஆகியவைகளால் அவயவங்களில் சக்தி ஏற்பட்டு விடுகிறது; அதன் காரணமாக, நல்லொழுக்கம், சாலிஹான அமல் முதலியவைகட்கு போதிய உதவியும் வசதியும் உண்டாகமாட்டாது.

"உலகத்தில் பெரும்பாலோர் அலங்கோலமான தோற்றத்தில் இறைவன்பால் கையேந்தி உதவி தேடுகின்றவர்களாக இருக்கின்றனர்; ஆனால் அவர்களின் ஊண், உடை முதலிய பலவும் ஹராமான வழியில் சம்பாத்தியஞ் செய்யப் பட்டதாகயிருக்கின்றது" என ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாறிருந்தால் அவர்களின் கோரிக்கைகள் எவ்வாறு ஆண்டவனிடம் நிறைவேறும்? ஆதலின் மானிடன் ஊண்தீண் முதலியவற்றை ஹலாலான, நியாயமான வழியில் தேடுவதற்கு முயற்சித்தல் மிகமிக அவசியமாகும்.

வீணனாகயிருப்பதின் கெடுதி

கஷ்டப்பட்டு சம்பாத்தியஞ் செய்யாது சாப்பாடு கிடைக்குமென எதிர் பார்த்துக் கொண்டிருப்பதும், எல்லாம் விதிப்படி தான் நடக்குமாதலின், தான் விதிக்குக் கீழ் படிந்து நடப்பதாகக் கூறுவதும் மார்க்காபி மானிகளின் வேலையன்று. ஒரு காலத்தில் வாழ்கைக்கு வேண்டிய சாதனங்களைத் தேடியடைவதற்கு முயற்சியாமல் ஒரே தன்மையிலேயே காலங்கடத்திய ஒரு கூட்டத்தவர் இருந்தனரென்பது உண்மையே. அவர்கள் மிகச்சிலரேயாவர். இக்காலத்திலும் அப்படிப் பட்டவர்கள் இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால் அவர்களது நிலைமையானது நாம் பின்பற்றக் கூடியதும் விரும்பக் கூடியதுமாக யிருக்கவில்லை. அதற்கு இருகாரணங்கள் கூறலாம். முதலாவது:—உயிர் போய் விடுவதற்குள்ள நிலைமை ஏற்பட்டு விட்ட போதிலும் சாப்பாட்டுக்கு ஒன்றும் தேடாமல் ஆண்டவன் மீது(தவக்கல்) கலப்பற்ற ஆதரவு வைத்திருப்பது இக்காலத்தில் எங்கிருக்கின்றது? அதிலும் உலகத்தவர்கள் மெச்சுவதற்காக இல்லாது தன் நாயனின் கிருபை மீதே நம்பிக்கை பூண்டொழுகுவது மிகமிக அரிதாகவே இருக்கிறது. இரண்டாவது:—தொழில் செய்து ஹலாலான ஜீவனத்தால் தன் குடும்பத்தைப் பரிபாலித்தும், ஆண்டவனுக்குச் செய்ய வேண்டிய வந்தனை வழிப்பாடுகளை எப்பொழுதும் மறக்காமல் சன்மார்க்கத்திலீடு பட்டு உழைத்தும்வரும் ஒரு உத்தமனின் வாழ்க்கையை விட அன்னோரின் நடத்தையானது அவ்வளவு சிறந்ததாக யிருக்கவில்லை என உறுதியாகக் கூறலாம். உலக விவகாரத்தில் ஈடுபட்டிருப்பதுடனே ஆண்டவனது ஞாபகத்தையும் மனதில் வைத்திருப்பவர்களே எல்லாம் இருந்தும் ஒன்று மில்லாததுபோன்ற தன்மையாகிய விசேஷ பதவிக்கு ஆளாவார்கள். அவர்களே ஆண்டவனுக்கு மிக்க உகப்பானவர்கள். "வர்த்தகம் முதலிய தொழில்கள் சிலரை அல்லாஹ்வின் தியானத்தை விட்டும் பராக்காக்குவதில்லை".

உலக ஆசை என்பதென்ன?

தன் வயிற்றுப் பசியைத் தணிப்பதற்காக வேண்டியோ அல்லது மனைவி மக்களை போஷிப்பதற்காக வேண்டியோ எவன் வர்த்தகம், கைத்தொழில் இவைகளில் யீடுபடுகின்றானோ அவன் உலகப் பற்றுடைய வனுகின்றான் என பெரும் பான்மையினர் தவறாக எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இங்ஙனம் கருதுவது முற்றும் பொருத்தமற்றதேயாம். உலக ஆசை என்பது இறை

வனை முற்றும் மறந்திருக்கும் படியான தன்மையினையே குறித்து நிற்கும். ஆதலின் ஒருவனுடைய நிலைமையானது ஏராளமான செல்வத்தின் காரணமாக அல்லாஹ்வை மறந்திருக்கும்படி செய்யுமானால், அல்லது உலகத்தவரின் புகழுக்காக வேண்டி தொழுகை நோன்பு முதலியவைகளை அனுஷ்டிக்கும்படி செய்யுமானால் அந்நிலைமையினையே நாம் "உலகப் பற்று" என்றுரைக்க வேண்டுமே தவிர, தனக்காகவும் பெண்டு பிள்ளைகளுக்காகவும் சம்பாத்தியஞ் செய்வதற்கு துன்யா (உலகப்பற்று) என்று கூறுவது தகாது.

"துன்யாவென்பது ஆண்டவனை மறப்பது தான்
சொத்தும்செல்வமும் மனைவிமக்களுமன்று."

முஸ்லிம்களின் ஒவ்வொரு செயலும் வீண் போகாதென்று கூறப்பட்டிருக்கிறது. அதாவது எல்லாம் வணக்கத்தை சேர்ந்தவைகளே யாகுமென்று ஹதீது ஷரீபில் விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம். தவிர ஒருவன் தன் மனைவியுடன் இன்பநுகர்ச்சியினை அனுபவிக்கின், அஃதும் ஓர் வணக்கமே யாம். ஆகவே ஹலாலானவைகளைத்தேடுவதற்காக நியாய யுக்தமான தொழில்கள் புரிவது ஏன் வணக்கத்தில் சேர்ந்தவைகளாகாது? ஆதலின் தொழில் செய்து ஜீவனம் பண்ணுபவனை எவ்வாறு உலகப் பக்தன் என்று சொல்வது.

நியாயத்தொழிலும் குர்ஆனும்

இல்லற வாழ்க்கையினை நன்கு நிறை வேற்றும் பொருட்டு தொழில் புரியும்படி மானிடன் எச்சரிக்கப் பட்டிருக்கின்றான். குர்ஆன் மஜீதில் இறைவன் கூறி இருப்பதாவது:

1. "அல்லாஹ்வின் அனுக்கிரகத்தைத் தேடிக்கொள்ளுங்கள்." வேத வியாக்கியான கர்த்தாக்கள் இவ்வாயத்தின் தாத்பரியம் ஜீவனம்சத்தினை தேடிக்கொள்ளுதல் அவசியம் என்பதாகுமெனக் கூறுகின்றனர்.

2. "நீங்கள் நல்வழியில் சம்பாதித்த பொருளில் நின்றும் ஆண்டவன் பாதையில் செலவு செய்யுங்கள்."

3. "பாதகமான வழியில் பொருள் தேடாதீர்கள்; ஆனால் வர்த்தகத்தினால் தேடிக் கொள்ளுங்கள்.

தொழில் முறையும் ஹதீது ஷரீபும்

சர்வரே அன்பியா (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளி யிருப்பதாவது:—

1. தன் கையால் தேடிப் புசிக்கும் போசனமே ஆண்பிள்ளைக்குரிய ருசிகரமான போஜனமாகும்.

2. தன் கையால் தேடிச் சேமித்து வைக்கும் செல்வமே சிறந்த சொத்தாகும்.

3. அமானிதக் காரராயும் சத்திய நெறி தவறாதவராயுமிருக்கும் முஸ்லிம் வர்த்தகர் இறுதி தீர்ப்பு நாளில் தியாகிகள் குழாத்திலிருப்பர்.

4. ஒருவன் பிறரிடம் கைநீட்டிக் கேட்காமல் ஹலாலான முதலைத் தேடியடையவும், அதனால் குடும்பத்தினருக்கு அன்னாகாரம் கிடைக்கவும், அண்டை அயலார் அவனால் சுகமனுபவிக்கவும் நேரிடுமானால், கியாமத்து நாளில் அவனது முகம் பதினான்காவது இரவில் தோன்றும் பூரண சந்திரன் போன்று பிரகாசிக்கும்.

5. கயிற்றை எடுத்துக்கொண்டு கானகஞ் சென்று சுள்ளி பொறுக்கிக்கட்டி, அதனை கடைவீதி கொணர்ந்து ஒரு சில பேரீத்தம் பழங்களை கிரயமாகப்பெற்று விற்றுவிடுவது பிச்சை எடுப்பதைவிட நற்செயலாகும்.

6. விறகுக் கட்டை முதுகில் சுமந்துவருவது இரப்பதைவிட மேலாகும்.

7. தன் கையால் சம்பாதித்த பொருளைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட ஆகாரமே சிறந்ததாகும்.

8. குடும்ப சகிதமாக வாழும் தொழிலாளியை அல்லாஹ் தஆலா மிகமிக உகக்கின்றான்.

9. தன் புஜபலத்தால் பொருள் தேடி உண்ணும் வாழ்வே மிகச் சிறந்ததாகும்.

10. மனிதன் தன் கையால் உணவு சம்பாதிப்பது எல்லாவற்றைப் பார்க்கினும் மேலானதாகும்.

11. சில பாவங்கள் தொழுகை, நோன்பு, ஹஜ்ஜு ஆகியவைகளால் கூட விமோசனம் பெற முடியாத அத்துணை கொடியதாக இருக்கின்றன. ஆனால் ஜீவனம்சத்தை எவ்வாறு தேடிக்கொள்ளலாமென்று ஆலோசனை செய்யப் புகுதல் அப்பாவங்களைப் போக்கி விடுவதாகயிருக்கின்றது.

12. சுவனலோகத்திலிருக்கும் ஒரு பதவியை ஜீவனம் செய்யும் வழியை யோசித்துக்கொண்டிருப்பவனைத்தவிர யாரும் பெற முடியாது. நியாயமான முறையில் சம்பாத்தியஞ்செய்து அதனாலுள்ள ஒருபிடி சாதம் வாயில் வைத்த மாத்திரமே அவனது பிழைகளெல்லாம் மன்னிக்கப்பட்டுப் போகின்றன.

14. ஹலாலான—நேரானவழியில் ஒஜீபனத்தைத்தேடுவது பரலான காரியாதிகளை செய்வதற்குப் பின்னுள்ள முக்கியக் கடமையாகும்.

15. ஹலாலான—ஒழுங்கான முறையில் சம்பாத்தியஞ் செய்வது, மானிடன்மீது ஏற்படுத்தப்பட்ட கடமைக்குப்பின் முதன்மையானதாகும்.

16. கலப்பில்லாத நல்லவழியில் சம்பாத்தியஞ்செய்வது தர்மத்தைச் சேர்ந்ததாயிருக்கும்.

17. சத்தியவானும் உண்மைவாதியாகவுமுள்ள வர்த்தகன் ஆண்டவனை பயந்து நடந்தோர், அவனது பாதையில் உயிரை தியாகஞ் செய்தோர்களுடனே யிருப்பான்.

18. இறைவன் தொழில் புரியும் எந்த முஸ்லிமையும் நேசிக்கக் கூடியவனாக இருக்கின்றான்.

19. நேரான பாதையில் வஜீபனத்தைத் தேடுவதில் களைத்துப் போயிருக்கும்படியான அடியானை ஆண்டவன் மிக மிக உகக்கின்றான்.

20. உண்மையான வியாபாரி கியாம நாளில் அர்ஷின் நிழலிலிருப்பான்.

21. சத்திய நெறிதவறாத வர்த்தகர் சுவர்க்கத்தில் நாடிய வாசற்படியின் வாயிலாய் நுழைவார்.

22. ஹலாலான—ஒழுங்கான வஜீபனத்தைத் தேடுவதில் களைத்துப்படுத்திருக்கும்போதே அவனுடைய பாவங்கள் யாவற்றும் பொருக்கப்பட்டுப் போய்விடுகிறது.

23. ஹஸ்ரத் ஜகரிய்யா (அலை) அவர்கள் தச்சுவேலை செய்திருக்கின்றார்கள்.

24. நீங்கள் ஜவுளி வியாபாரஞ் செய்யுங்கள். உங்கள் முப்பாட்டனாராகிய இப்ருஹீம் (அலை) அவர்களும் இத்தகைய தொழில் புரிந்திருக்கின்றார்கள்.

25. ஹஸ்ரத் தாவூத் (அலை) அவர்கள் தங்கள் சொந்தக் கரத்தால் வருந்திப்பாடுபட்டு ஜீவனம் நடத்திவந்திருக்கின்றார்கள்.

முன்னோர் வாக்கியங்கள்.

ஹஸ்ரத் தாவூத் (அலை.) அவர்கள் ஜனங்களிடம் "தாவூதைப் பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கின்றீர்கள்" என வினவுவது வழக்கமாகயிருந்தது. ஒரு சமயம் ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை.) அவர்களை சந்தித்த போதும் அவ்விதமே வினவினார்கள். அதற்கு ஜிப்ரயீல் (அலை.) அவர்கள் "தாவூத் மிக்க நல்லவர் தான்; ஆயினும் அவரிடம் ஒரு வழக்க மிருக்கிறது; மற்றும் நற்காரியங்களுடன் அதனை ஒப்பிட்டுப் பார்த்தால் அது சிலாக்கியமான தல்லவெனத் தெரிகிறது. எனக்கூறினார்கள். அதற்கு தாவூத் (அலை.) அவர்கள், அது என்ன வழக்கம் எனக்கேட்டதற்கு, "தாங்கள் பைத்துல்மால் (பொது பண்டு) பணத்தி நின்றும் காலக்ஷேபஞ் செய்கின்றீர்கள்; ஆனால் ஆண்டவனுக்கு, தானே வருந்தித்தேடி உண்பவனை விட வேறுயாரும் மிக்க அருமையானவனாக யில்லை" என ஜிப்ரயீல் (அலை.) விடை பகர்ந்தார்கள். இதனைச் செவியுற்று தாவூத் (அலை.) அவர்கள் கண்ணீர் வடித்தவர்களாகி இறைவனிடம் ஜீவனத்திற்குரிய வழியைக் காண்பிக்கும்படி வேண்டினார்கள். அங்ஙனமே இறைவனும் அவர்களுக்கு ஜரிகை வேலையைக் கற்றுக் கொடுத்தான். அதன் பின் அவர்கள் அரசியல் காரியங்களில் ஈடுபட்டிராத நேரங்களில் ஜரிகைவேலை செய்து விற்று தங்கள் வாழ்நாளைக்கழித்து வந்தார்கள்.

ஒரு நாள் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் தங்கள் சஹாபாக்களுடன் வீற்றிருக்கும் சமயம் மிக்க தைரியம் பொருந்திய வாலிபரொருவர் காலக்ஷேபத்திற்கு வேண்டிய வற்றைத் தேடினவராக ஆங்கு விஜயஞ் செய்தார். அக்கூட்டத்திலிருந்த அபூபக்ர் (ரலி.) அவர்களும், உமர் (ரலி.) அவர்களும் அவ்வாலிபர் தமது இளமைப் பருவத்தையும் பலத்தையும் ஆண்டவன் பாதையில் செலவு செய்வது மிக்க நலமாகயிருக்கும் எனக் கூறினார்கள். அதற்கு மறுமொழியாக நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியதாவது:—அவ் வாலிபர் விருத்தாப்பிய தசையிலிருக்கும் தம்முடைய பெற்றோர்களை பரிபாலிக்கவோ

அல்லது தம்முடைய மனைவிமக்களை போஷிக்கவோ அல்லது தம்முடைய வயிற்றுக் கொடுமையை தணிப்பான் வேண்டியோ ஏதேனும் தொழில் தேடி அலைதலும் ஆண்டவனது பாதையிலுள்ளதாகயிருக்கும் என்பதே.

உழுதுண்டு வாழ்பவன் ஆண்டவனின் நண்பனுகவும், அமரர்களின் தோழனுகவும், நபிமார்களின் நேசனுகவுமிருக்கின்ருன்; அவன் செய்த பாவங்கள் மணல்களின் எண்ணிக்கையை போன்று எவ்வளவு அளவு கடந்திருந்த போதிலும்,பட்சிகளின் துஆவின் காரணமாக ஆண்டவன் அவைகளைப் பொறுத்து விடுகின்ருன். அதாவது, பட்சிகள் அவனது நிலத்திலுள்ள தானியங்களைப் பொறுக்கித்தின்று அவனுக்காக துஆச் செய்கின்றன. ஆண்டவன் அந்த துஆவை ஒப்புக்கொண்டுவிடுகின்ருன்.

ஏ! தேள்வை யுள்ளவர்காள்! ஏதேனும் வர்த்தகம் செய்து முன்னேறுங்கள். உங்களுக்காக எவ்வளவோ இலேசான மார்க்கங்கள் இருக்கின்றன; ஆகவே நீங்கள் மற்ற மனிதர்கள் மீது தேவை உள்ளவராகாதீர்கள்.

(தொடரும்)

ஏகத்துவ வாதிகளின் பெருநாள்.

நீர்வளமும் நிலவளமும் நிறைந்துள்ள இவ்வையகத்தின் கண் தோன்றியுள்ள சகல மதங்களும், சர்வ சமயங்களும் மத, சமூக வைபவங்களையும் ஆகோஷங்களையும் கொண்டாடுவதற்காக வருடத்தில் பல்வேறு நாட்களைத் தெரிந்தெடுத்திருக்கின்றன. ஒவ்வொரு மதத்தினுடையவும் சமயத்தினுடையவும் நோக்கங்களும் அபிப்பிராயங்களும் எவ்வாறு ஒத்திருப்பதில்லையோ அவ்வாறே அவைகள் தெரிந்தெடுத்திருக்கும் தினங்களும் ஒத்திருப்பதில்லை. யூதர்களின் நாள் வேறு, கிறிஸ்தவர்களின் பண்டிகையும் வேறு, ஹிந்துக்களின் விசேஷ நாட்களும் தனிப்பட்டவைகளே. பார்ஸிகளின்கொண்டாட்ட நாளும் பிரத்தியேகமாக இருக்கின்றன.

இத்தகைய விசேஷ தினங்களின் நோக்கமென்ன வென ஆராய்வோமாயின் ஒரு சமயத்தினுள் காணப்படும் வெவ்வேறு வகுப்பாருக்கும் ஜாதியாருக்கும் ஒரு வருடத்தில் பல நாட்கள் கொண்டாட்டத்திற் குரியவைகளாவதற்குள்ள காரணங்கள் ஏற்பட்டிருப்பதேயாகும். ஆனுலும் பொதுவாக ஒருவன் சந்தோஷமாக இருந்தால் மற்றவன் அதற்கு மாற்றமாக இருக்கக்கூடிய நிலைமையே ஏற்பட்டு விடுவது சகஜமாகயிருந்து வருகிறது. ஒருவனது வீடு சந்தோஷ சாகரத்தில் மூழ்கி இருந்தால், மற்றவனது வீடு துக்க சாகரத்தில் மூழ்கிக் கிடக்கிறது. ஒரு வீட்டிலிருந்து சங்கித சாகித்திய ஓசை வெளிப்படுவதைக் கேட்கின் மற்ருேர் வீட்டிலிருந்து அழுகை ஒப்பாரி இடும் சப்தம் ஏற்படுவதைக் கேட்கின்ருேம். எனவே ஒருவன் அனுபவிக்கும் சந்தோஷம் அவனது வகுப்பார் யாவரையும் சந்தோஷிக்கச்செய்யாதென்பதும்,வேறொருவனுக்கு ஏற்படும் கொண்டாட்டம் அவனது ஜாதியார் அனைவோருடைய கொண்டாட்டத்திற்குக் காரணமாயிருக்க முடியாதென்பதும் மனித சமூகத்தின் இயற்கை எனத்தெரிந்துக் கொள்ளலாம். இதனுல் சமூகத்தினிடை ஒற்றுமையை உண்டு பண்ணவேண்டியது ஆவசியமாகின்றது. ஆதலின் தனித்தனி வகுப்பாரும் அவரவரின் சமயசந்தர்ப்பமான விவகாரங்களை கவனியாது பொதுவாக ஒரு நாளைக் குறிப்பிட்டு அன்று தங்கள் சந்தோஷங்களை வெளியிடவேண்டும். இவ்வாறே சமூகமார்க்க ஒற்றுமையும் ஏற்பட்டு நம் கண்முன் தென்படல் ஆவசியமாகும்.

இத்தகைய பெருநாள் வைபவங்களின் இரண்டாவது நோக்கமென்ன வென்று ஆராய்வோமாயின், சில சம்பவங்கள் அவை பெரிதாயினுஞ் சரி அல்லது சிறிதானுலுஞ் சரி ஏதேனுமொரு தினத்தில் நிகழ்கின்றன. எத்தினத்திலாவது ஒரு சமூகத்தினிடை அல்லது சமயத்தினிடை சரித்திர பூர்வமான சம்பவம் நேரிட்டு, அதனை ஞாபகார்த்தமாக வைத்துக்கொள்ள வேண்டியது அச்சமூக வாழ்கைக்கு அத்தியாவசியமாக இருக்

கும் பட்சத்தில் அத்தினத்தை பெருநாள் என்றும் திருநாள் என்றும் பண்டிகை என்றும் கொண்டாடப் படுகிறது. அவ்வாறு கொண்டாடுவது கொண்டு வருடந்தோறும் அச் சம்பவம் ஞாபகஞ்செய்யப் படுவதாக யிருக்கின்றது.

மேற்கூறிய இரண்டு அம்சங்களும் முஸ்லிம்கள் கொண்டாடும் பெருநாள்களில் அமைந்திருக்கின்றன. ஆனல் பொதுவாக ஏற்பாடு செய்வதற்கு எந்நாளைத் தெரிந்தெடுக்க வேண்டும்? என்பது தான் முக்கியம் பிரச்னையாகும். ஹிந்துக்கள் அற்புத நிகழ்ச்சிகள்,வானம் பூமி இவற்றின் இயற்கையான மாறுதல் முதலியவைகளை ஆதாரமாகக் கொண்டு ஆகோஷங்களுக்குரிய நாளை நேமித்துக் கொண்டாடுகின்றனர். பூலோகத்தில் காணப்படும் காலவேறுபாடுகள், வான மண்டலத்திலுள்ள சூரிய சந்திரனின் இராசி, கிரகப்பலன் இவைகளையெல்லாம் சந்தோஷங் கொண்டாடுவதற்குள்ள நேரங்களாக ஆக்கி வைத்திருக்கின்றனர். பனிக்காலம் ஆரம்பித்தால், ஒருவித விசேஷம்; வேனற்காலம் தொடங்கின் வேறுவிதக் கொண்டாட்டம்; மாரிகாலம் உற்பத்தியாகுமானல், பிறிதொரு உற்சவம்; இப்படியாக காலமாறுபாட்டைக்கொண்டு உற்சவதினம் ஏற்பட்டு விடுவதுடன் சூரிய கிரஹணம் சந்திர கிரஹணம் முதலியவை ஏற்படும் நாட்களும் ஹிந்துக்களால் கொண்டாடப்படுவதற்குரிய நாள்களாகவே யிருக்கின்றது.

மஜூஸிகள், வானம், பூமி, காலம் இவைகளின் வேறுபாடுகளை அறவே ஒதுக்கித் தள்ளிவிட்டு அக்கினிக் கோளமாகிய சூரியனின் அபரிமிதமான சக்தியை அனுசரித்து வருஷ ஆரம்பத்திலும் வசந்த காலம் ஏற்படும்போதும் நன்னளைக் கொண்டாடிக் களிக்கின்றனர். யூனனியர், ரோமர், எகிப்தியர் முதலாய உருவ வணக்கத்தினர் விக்கிரக சம்பந்தமான பழைய புராணக் கதைகளுக் கிணங்க, விசேஷ நாட்கள் ஏற்படுத்தி இருந்தனர். ஆனல் ரோமக் கிறிஸ்தவர்கள் அன்னேரின் பரம்பரை நந்நாளை மாற்றி கிறிஸ்துவின் ஞாபகார்த்தமாக "கிறிஸ்துமஸ்,' நியூ யியர், ஈஸ்டர் முதலிய நாட்களை ஏற்பாடு செய்து விட்டனர். எனினும் ஏசுநாதரின் காலத்திற்கும் அவ்விசேஷ தினங்கள் ஏற்பட்டதற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. யூதர்களின் பெருநாள்களிலனேகம் சந்தோஷத்திற்குப் பகரம் துக்க நாள்களாகவே இருக்கின்றன. அந்நாட்களில் அன்னேர் பிராயச் சித்தம் செய்துக் கொள்ளும் வழக்கத்தைத் தான் அனுசரிக்கின்றனர். அவர்கள் மாதத்தின் ஒவ்வொரு ஏழாவது நாளையும் ஞாபகார்த்தமாகக் கொண்டிருப்பது போன்று வருடத்தின் ஏழாவது மாதத்தையும் ஞாபகார்த்தமாகவும் பிராயச் சித்தம் செய்துக் கொள்கிற நாளாகவும் உபயோகிக்கின்றனர். அம்மாதத்தின் பற்பல தினங்களிலும் நோன்பு வைப்பர்; துன்பங்களி லகப்பட்டதாகப் பாவிப்பர்; குர்பான் செய்வர்; பிறகு ஏழு நாட்கள் வரை சந்தோஷங் கொண்டாடுவர்.

இஸ்லாம் மதமானது, கால வேறுபாடு, வான மண்டலத்தின் விபரீதத் தோற்றங்கள், கிரகங்களின் உதயம், அஸ்தமனம், சந்திர சூரியன் வெவ்வேறு திசைகளில் இருப்பதின் குண தோஷங்கள் இப்படிப்பட்டவைகளை ஆராய்ச்சி செய்வதின் மூலம் பெரு நாளைக் குறிப்பிடுவதில்லை. சோதிட சாஸ்திரத்தை நன்கு புரட்டிப்பார்த்து குண தோஷங்களைப் பரிசிலனை செய்து நன்னளைக்குறிப்படுவதெல்லாம் உருவ வணக்கஸ்தர்களுடையவும் கிரக வணக்கஸ்தர்களுடையவும் செயல்களேயாம். அச்செயல்கள் யாவும் மனிதனல் சிருஷ்டிக்கப்பட்டவைகளை தெய்வமாகக்கொண்டாடும் சுபாவத்தின் அடையாளங்களாய் இருக்கின்றன. ஆனல் இஸ்லாமோவென்ருல் காரணகாரியங்களைவிட்டும் விலகிய சுத்தமான மதமாக இருக்கின்றது. அது இவ்வுலகில் 'கடவுள் ஒன்றே' என்னும் சித்தாந்தத்தை பிரஸ்தாபிக்கவே தோன்றியுள்ளது; அது ஏகதெய்வ வணக்க முடையதாகவே இருக்கிறது; அது ஒரே கடவுளைத் தவிர்த்து, வானத்தையோ, பூமியையோ, எந்த சூரியனையோ, சந்திரனையோ, எந்த பருவ காலத்தையோ, எந்த மரம், கல், உலோகம் முதலியவற்றையோ தனது தெய்வமென ஒருபொழுதும் வணங்குவதில்லை. அம்மதமானது, வணக்கம் புரிவதற்காக சரித்திர சம்பந்தமாக வெற்றிக் கொடிநாட்டிய நந்நாளையோ அல்லது சமூகப் புனருத்தாரணம் பெற்ற புண்ணிய நாளையோ தெரிந்தெடுக்கவில்லை; திருமக்காவி லிருந்து திருமதீனவுக்கு ஹிஜ்ரத் சென்ற நாளும் அதன் பெரு நாளன்று. மார்க்கத்திற்காக

அநேக உயிர்களைத் தியாகம் புரிந்த பத்ர் யுத்த தினமட்டுமன்றி திருமக்கமா நகரை ஜெயித்து வெற்றிமாலை சூடிய மாண்புமிக்க திருநாளும் அதன் பெருநாளன்று. ஆனால் அது பொதுவாக தனது சமயகோடிகள் அனைவரும் கொண்டாடு வதற்கென்று மகாகீர்த்தியும் மேன்மையும் வாய்ந்த தேவ வெளிப்பாடு வெளிவர ஆரம்பித்ததாகிய பரிசுத்த ரமலான் மாத இறுதிக்குப் பின்வரும் நாளையே பொறுக்கி எடுத்துள்ளது. ஆதலின் இஸ்லாத்திலுள்ள பெருநாள் சந்தோஷ சாகரத்தினை வெளியாக்கும் நாளும், மனோ திருப்தியை வெளிப்படுத்த வல்ல மகா மகிமை பொருந்திய நன்னாளுமாகும். அஃது இறைவன் மிகப் பெரியவன் என்ற கோஷத்தால் வானமளாவத் துதித்துக் கொண்டாடிக் களிக்கப்படும் நன்னாள்; ஆண்டவனுக்கு முன்னால் சிரம் சாய்த்து அடிபணியப்படுகிற அருமை பொருந்திய நாள். ஆனால் எந்த சந்தோஷ சம்பவத்தின் அறிகுறியாக அப்பெருநாள் கொண்டாடப் படுகிறது? எந்த நற்செய்தியை உணர்த்துவதற்காக அப்பெருநாள் உற்சவம் நடத்தப்படுகிறது? இறைவன் தனது அடியார்களை ஞானச்சுடரினால் இலங்கச்செய்த அந்த நன்னாளின் ஞாபகார்த்தமாகவும், இவ்விருளடைந்த வையகத்தின்கண் சூரியசந்திர வணக்கம் புரிவது, மானிடர்களால் படைக்கப் பட்டவைகளுக்குத்தலை சாய்ப்பது முதலிய வழிகேட்டை விட்டுக் காப்பாற்றி, ஆண்டவன் ஒருவன்; அவன் தான் வணக்கத்திற்குறியவனென உறுதிகொள்வதற்குள்ள நேர் வழியை சன்மான மளித்ததற்காக நன்றி செலுத்துவான் வேண்டியும் கொண்டாடப் படும் நாளாகயிருக்கிறது.

பரிசுத்த குர்ஆன் மஜீதில் கூறப்பட்டிருப்பதாவது:—

ரமலான் மாதமாகிறது (எத்தகைய சிறப்புடையதென்பதை நீங்கள் அறிவீர்களா?) இம்மாதத்தில் தான் மானிட கோடிகளின் நேர் வழிகாட்டியாகவும் அந்நேர் வழிக்கு அத்தாக்ஷியாகவும் (நன்மை, தீமை இன்னதென்று) பிரித்தறிவிக்கும் படியானதுமாகிய குர்ஆன் ஷரீப் (இறக்கி) அருளப்பெற்றது. ஆதலின் உங்களிலெவன் அம் மாதத்தை அடைகின்றானோ, அதில் அவன் நோம்பு நோற்கவேண்டும். எவனொருவன் வியாதியஸ்தனாகவோ, அன்றி யாத்திரீகனாகவோ இருப்பானாகில் இதர நாட்களில் நோன்பின் எண்ணிக்கையை பூர்த்திசெய்து விடவும். இறைவன் உங்களுக்கு இலேசானதையன்றி கஷ்டத்தைக் கொடுக்நாடவில்லை. ஆகையால் நீங்கள் எண்ணிக்கையை சரியாக நிறைவேற்றுங்கள். நீங்கள் நேர் வழி பெற்றதற்காக ஆண்டவனின் பெருமையைக் குறித்து மிக்கவாறும் வெளியிடுவீர்களாக. அதற்காக உங்களுடைய நன்றியறிதலைப் பாராட்டுவீர்களாக. எனது அடிமைகள் என்னைக் குறித்து வினவும்போது நான் அவர்களது சமீபமே இருப்பேன். என்னைக் கூப்பிடுகின்றவர்களின் கூப்பாட்டிற்கு விடை அளிப்பேன்............

இதன் பின்னர் குர்ஆன் மஜீதில் நோன்புநோற்கவேண்டியதின் சட்டதிட்டங்களைக் குறித்து விவரிக்கப் பட்டிருக்கின்றது. மேலே தெரிவிக்கப் பட்டிருக்கும் ஆயத்துக்களில் ரமலான், குர்ஆன், நேர்வழி ஏற்படுவது, ஒழுங்கான பாதையைக் காண்பித்ததை ஞாபகப் படுத்தி நன்றி செலுத்துவது, நோன்பின் எண்ணிக்கையைபூரணமாக நிறைவேறிய பின் ஆண்டவனின் பெருமையையும் நம்முடைய திருப்தியையும் வெளிப்படுத்த வேண்டு மென்பது, அவன் நமக்கு அதிக சமீபமாக இருப்பதால் அவனையே அழைத்து உதவி தேட வேண்டும் என்பதும் நன்கு தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இது தான் ஏகத்துவ வாதிகளின் பெரு நாளும், அவர்கள் சந்தோஷங் கொண்டாடுவதற்குறிய நன்னாளுமாகும்.

இக்காரணங்களினாலேயே பெரு நாளன்று ஆண்டவனை வணங்கச் செல்லும்போதும், தொழும்போதுங் கூட அவனது பெருமையைக் குறித்து மிக்கவாறும் புகழப்படுகிறது. "ஆண்டவன் உங்களுக்கு நேர்வழி காண்பித்ததற்காக அவனைப் போற்றிப் புகழ்ந்து அவனது பெயர் கீர்த்தி இவைகளை வெளியாக்குவதற்காக தக்பீர் சொல்லுங்களென கூறப்பட்டிருக்கிறது. அதனால் முஸ்லிம்கள் பெருநாள் தொழுகைக்குச் செல்லுங்கால் பாதையில் ஆண்டவன் எல்லோரிலும் மிகப் பெரியவன்; ஆண்டவன் எல்லோரிலும் மிகப் பெரியவன்; அல்லாஹ்வைத்

தவிர வேறுயாரும் வணங்குவதற் குரியவன் அன்று ; அல்லாஹ் மிகப் பெரியவன் ; அல்லாஹ் மிகப் பெரியவன் ; ‘ சர்வ புகழும் அவனுக்கு உரியனவாகும் என உரத்த தொனியில் போற்றிப் புகழ்ந்து செல்லுகின்றனர். மற்ற சாதாரண தொழுகையில் ஒரு விடுத்தந்தான் தக்பீர் கூறப்படுகிறது. ஆனுல் பெருநாள் தொழுகையில் ஒவ்வொரு ரக்கஅத்திலும் 6 முறை தக்பீர் சொல்லப் படுகின்றது.

ஆதலின் இஸ்லாம், மற்ற மதங்களைப் போன்று சூரிய சந்திரனின் சலனத்திற்கிணங்க பெருநாளைக் குறிப்பிட வில்லை ; சூரியன் சந்திரன் வானம் பூமி காலம் முதலியவைகளை வணங்குபவர்கள் குறிப்பிடுவது போன்று ஏகத்துவ வாதிகளது பெருநாளானது சூரிய சந்திர சலனத்தைப் பொருத்திருக்கவில்லை. ஏனைய மதங்களைப் போன்று பெருநாளை, ஆடல், பாடல், வேடிக்கை, கூத்து முதலியவைகளில் செலவு செய்யவும்படி கட்டளை யிடவுமில்லை. ஆனுல் ஆண்டவனை பெருமை படுத்துவதிலும் தக்பீர் கூறுவதிலுமே செலவிட்டு, பெருநாளைக் கொண்டாடவேண்டு மென்பதே இஸ்லாமிய கோட்பாடாகும். இது தான் முஸ்லிம்களின் பெருநாளாகும். இஃது யாவரும் கொண்டாடுவதற்கு மிக மிகத் தகுதியுடையதாக யிருக்கிற தென்பது திண்ணம்.

எங்கனம் ஒற்றுமை ஏற்படப் போகிறது ?

அதானின் இரகசியங்கள்

சில காலமாக இந்தியர்களிடையே சுயேச்சை பெறுவதற்குள்ள அதிதீவிர உணர்ச்சியும் கிளர்ச்சியும் ஏற்பட்டிருக்கின்றன. அவர்கள் அன்னிய அரசாட்சியாகிய பெரிய சுமையிலிருந்து விடுதலை அடைவதற்காகப் பெரிதும் உழைத்து வருகின்றனர். இம்முயற்சியில் வெற்றி அடையும் பொருட்டு பல்வேறு வழியிலும் சத்தியாக்கிரகஞ் செய்தும் உயிரைத் தியாகம்பண்ணியும் வருகின்றனர். ஆனுல் இதுரை அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியில் முழுதும் வெற்றி பெற்றதாக நம் கண்ணிற்கு ஒன்றும் புலப்படவில்லை. அதற்குக் காரண மென்னவெனின், இந்தியாவில் பல்வேறு பட்ட மதஸ்தர்களும் சமூகவாதிகளும் காணப்படுகின்றனர் ; அவர்களின் பாஷைகளும் வெவ்வேறு விதமாக இருக்கின்றன ; ஒவ்வோர் சமூகத்தின் நாகரீகம், பழக்க வழக்கம் ஒழுக்க ஆசாரம் முதலிய யாவும் வேற்றுமை உடையதாக இருக்கின்றன ; சிற்சில சமயத்தவர்களின் எண்ணிக்கையானது லக்ஷத்திற்கு மேல் கோடியாகவும் காணப்படுகிறது; இருந்தாலும் கல்வி என்பது அன்னேர் பால் மிக மிகச் சொற்பமாகவேயிருக்கின்றது. பொதுவாக நாம் ஆராயுமிடத்து இந்திய தேசம் பெரும்பாலும் மடமைக்கும் அறியாமைக்கும் உறைவிடமாக இருக்கின்ற தென்னும் உண்மைக்கே வந்து சேர்வோம். இந்திய ஜனங்களில் நூற்றுக்குப் பத்து விகிதம் நன்கு படித்தவர்களாக இருப்பது அபூர்வம். இதனுல் அன்னேர், பகுத்தறிவு, முன்யோசனை, செல்வாக்கு இவைகளில் மிகமிக பிற்போக்காளர்களாக இருக்கின்றனர். அற்ப விஷயங்களுக் கெல்லாம் ஆத்திரமுறும் சுபாவமுடையோராகக் காணப்படுகின்றனர். இதனுல் முடிவில் பலவித சூழ்ச்சிகளும் அக்கிரமங்களும் தொல்லைகளும், தீங்கும் விளைந்து விடுகின்றன.

இந்திய தேசம் ஆஸியாக் கண்டத்தின் ஒரு பாகமாகவும், அஃது உலகத்தில் காணப்படும் சகல மதங்களின் உற்பத்தி ஸ்தானமாகவும் இருப்பதால், இந்தியர்களிடம் மதவுணர்ச்சி இயற்கையாகவே அமைந்திருக்கின்றது. ஆகவே அவர்கள் எக் காரியத்தையும் தீரயோசியாமல் மதத்தின் பேரில் பிறருக்குக் கெடுதி செய்யத் துணிந்து விடுகின்றனர். ஒரு குறிப்பிட்ட இடத்தில் மதத்தின் பெயரால் நிகழும் சண்டையும் கலவரமும், தேசத்தின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலெல்லாம் கொடிய விஷம்போல் பரவி அங்குள்ளோர்களையும் மிக ஆத்திரமுறச் செய்கின்றன. அதன்

பயனுக ஒருவருக்கொருவர் தலையை இழக்க நேரிடுகிறது; நெடுநாட்களாக சகோதர முறையில்அன்னியோன்யமாக இருந்து வந்தவர்களின் தொடர்பும் முறிந்து விடுகின்றது. அநேகர் இரத்தஞ் சிந்தி உயிரை மாய்த்துக் கொள்கின்றனர்; பிறகு கோர்ட்டு கச்சேரி தேடிச் செல்லவேண்டியிருக்கின்றது. வழக்கை நடத்துவதற்காக இரு கட்சிக்காரர்களும் தங்கள் பணத்தை அநாவசியமாகச் செலவு செய்து முடிவில் ஒட்டாண்டியாகப் போவதுமல்லாமல் ஜெயில் வாசஞ் செய்யும்படியும் ஏற்படுகின்றது. சிலர் தூக்கு மரத்திற்கு இரையாகவும் போகின்றனர். சில சுயநலவாதிகள் மத விஷயமாக ஏற்படும் சிற்சில சிறிய சம்பவங்களைப் பிரமாதமாக ஜனங்களுக்கிடையே பரத்தி அதற்கு மென்மேலும் ஊக்கமளித்து ஏழைகளிடமிருந்து சந்தா மூலம் பணத்தைக் கொள்ளை கொள்கின்றனர். இவ்வாறு தேசமக்களுக்கிடையில் அடிக்கடி விபரீதங்கள் விளைந்துக் கொண்டிருக்கும்போது, பூரண சுயராஜ்யம் எவ்வாறு பெறுவதற்கு முடியும்? இந் நிலைமையில் இந்தியர்கள் அன்னிய அரசாங்கத்தின் கையிலிருந்து எவ்வாறு விடுதலை அடையப்போகின்றனர்? தேசத்தில் ஒற்றுமை இல்லாது ஒருவருக்கொருவர் வீண் சண்டையும் விஷமத்தனமும் ஏற்பட்டுக் கொண்டிருப்பதால், அன்னிய அரசாங்கத்தின் கால்கள் மிகப் பலமாக ஊன்றிக் கொள்ளஹேது உண்டாகின்றது. தேசத்தலைவர்களாகிய காந்திஜீ, பண்டிதர் ஜவ்ஹர்லால் நேரு, மௌலானு அபுல் கலாம் ஆஜாத், மௌலானு ஷௌகத் அலீ முதலியோர் நம்மவர்களுக்குள் நடைபெற்று வரும் இவ்வித விபரீதப் போக்குகள் மிகவும் கெட்டவை என்று அடிக்கடி கண்டித்து வருகின்றனர். இவ்வாறு தேசமக்களுக்குள் விரோதப் பான்மை அதிகரிப்பதற்கு சூழ்ச்சி செய்துவருவோர் தேசத்துரோகிகளெனவும் கருதுகின்றனர். ஏனெனில் தேசமக்களுக்குள் பகைமையையும் சண்டை சச்சரவுகளையும் மூட்டி விடுகின்ற கோடரிக்காம்பு போன்றவர்களின் காரணமாகவே சுயராஜ்யப் போர் வெற்றிகரமாக நடை பெறுவதற்கு முடியாமல் தடைபட்டிருக்கின்றது. இச்சந்தர்ப்பத்தை ஆதாரமாகக் கொண்டு "உங்களுக்குள் ஒற்றுமை இல்லாத்ததால் சுயராஜ்யம் அளிப்பதற்கு இது சமயமன்று; சுயராஜ்யமளிப்பது உங்களுக்குள் போர் மூட்டி விடுவது போலாகும்" என அரசாங்கத்தினர் சுயேச்சையைக் கோரி நிற்பவர்களிடம் சொல்லி வாய்ப் பூட்டுப் போட்டு விடுகின்றனர்.

இஸ்லாமும் நேசப் பான்மையும்

ஏ! இந்திய சகோதரர்காள்! உங்கள் மடைமையினுலும் அறியாமையினுலும் தேசம் எத்துணை நஷ்டங்களுக்குள்ளாகி இருக்கிறதென்பதைசற்றே சிந்தனைசெய்துபாருங்கள். நீங்கள் இவ்வாறு செய்வதால் தேசத் துரோகியாய் விடுகின்றீர்கள். தேசத்திற்கு நல்ல வழியில் தொண்டாற்றிவர வேண்டிய புண்ணிய கைங்கரியங்களை மறந்து தேசத்திற்கு பாதகம் செய்வதையும் பாவமான காரியங்கள் செய்வதையுமே உங்கள் தலைமேல் சுமந்து திரிகின்றீர்கள். இது காலை நம் இந்திய தேசத்தில் இவ்விதமான அக்கிரமங்கள் அடிக்கடி நடந்து வருகின்றனவென்பதை கவனியுங்கள். உதாரணமாக, ஆண்டவனருளினுல் முஸ்லிம்களால் இக்காலை தொழுகை மிகவும் விமரிசையாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது; சிறு சிறு குக்கிராமங்கள் முதல் பெரிய பெரிய நகரங்கள் ஈறாக ஒவ்வொரு இடங்களிலுமுள்ள முஸ்லிம்களுள் தொழுகையை நிறைவேற்ற வேண்டிய கடமை மிக சுறுசுறுப்பாக நடந்தேறி வருகிறது. மதக் கடமைகளில் இவ்வாறு ஊக்கங் காட்டிவரும் முஸ்லிம்களின் பேராற்றலின் மீது நம் இந்து சகோதரர்கள் மிக்கவாறும் மகிழ்ச்சி யடைய வேண்டியதே நியாயமான முறையாகும். ஏனெனில் முஸ்லிம்கள் தங்கள் மார்க்கக் கடமைகளை நிறைவேற்றி வருவார்களேல், வீண் சண்டைகளில் கலந்துக் கொள்ளவோ, அன்றி அது விஷயமாக சதியாலோசனை புரியவோ அவர்களது மனம் இடந்தராது. தவிர இஸ்லாம் மதமானது, சூழ்ச்சி செய்தல் அக்கிரமங்கள் கலகங்கள் முதலிய தீய கருமங்களை ஒழித்தல் முதலிய சற்குணங்களை உலகத்தாருக்கு நன்கு போதனை செய்கின்ற ஓர் மதமாக இருக்கும் போது, பின்னை எவ்வாறு முஸ்லிம்கள் அநாவசியமான குழப்பங்களை எழுப்புவதற்குத் துணிவு கொள்ளும்படி தைரிய மூட்டும். முஸ்லிம்களின் வேத நூலாகிய திருக் குர்ஆனும் அது விஷயமாக அவர்க

ளுக்கு நன்குஅறிவுறுத்துகின்றது. அதாவது "அகாரணமாய் மார்க்கத்தின் பெயரால் கலகம் விளைவித்தலானது ஒருவனைக் கொலை செய்வதை விடக் கொடியதாகும்" மேலும் இஸ்லாமோ, அண்டை அயலார் எச் சமயத்தவராயும், எச்சமூகத்தவராயும் இருந்த போதிலும் அவர்களுடன் நேசப் பான்மையாக நடந்துக் கொள்ளவே போதிக்கின்றது. ஆகவே இவ்வித சிரிய உபதேசங்களால் சீர்திருத்தம் பெற்ற முஸ்லிம்கள் தங்கள் மதத்தின் மீது ஆழ்ந்த பக்தியுடையவர்களாய்க் காணப்படின் உலகத்திலுள்ள எனைய ஜனங்கள் அதனுல் திருப்தியுற வேண்டியது அவசியமாகும். எனெனில் முஸ்லிம்கள் தங்கள் மார்க்க விஷயமல்லாத வேறு எந்த விதமான விஷயங்களுக்காகவும் சண்டை சச்சரவு முதலியவைகட்கு முற்பட மாட்டார்களென்பது திண்ணம்.

பாங்குக்கு இடையூறு

ஆனல் சில இடங்களிலுள்ள ஹிந்து நண்பர்கள் முஸ்லிம்களின் மார்க்கக் கடமைகளில் ஒன்ருகிய அதானைக் குறித்து நன்கு தெரிந்துக் கொள்ளாமலிருக்கின்றனர் என்பதைக் காண மிக்கவாறும் வருத்தமடைய வேண்டியதாயிருக்கின்றது. பஞ்சாப் மாகாணத்திலுள்ள சில நாட்டுப் புறங்களில் வதியும், முஸ்லிம்கள் தங்கள் மதக் கடமைகளாகிய அதானையும் தொழுகையையும் நிறைவேற்றிக் கொள்ள முடியாதபடி சென்ற சில மாதங்களுக்கு முன் ஹிந்துக்களால் மிகக் கொடுமையாக ஹிம்சிக்கப் பட்டனர். இந்த நாட்டுப்புறங்களில் முஸ்லிம்கள் மிகக் குறைந்த தொகையினராயும், ஏழைகளாயு மிருக்கின்றனர்: அன்றியும் அவர்கள் ஹிந்து ஜமீன்தார்களின் அதிகாரத்திற்குட் பட்டிருக்கின்றனர். ஹிந்துக்களினது தடையை முஸ்லிம்கள் பொருட்படுத்தாது அதானையும் ஜமாஅத்துத் தொழுகையினையும் நிறைவேற்றிக் கொள்வதற்கு முயற்சித்தகால் ஹிந்துக்களால் சற்றும் இரக்கமின்றி அடித்துத் துன்புறுத்தப்பட்டனர். அங்ஙனம் நிகழ்ந்த தடியடிகளில் ஆண் பெண் என்றும், முதியோர் சிறுவர் என்றும் வேற்றுமை பாராட்டப்படாதிருந்தது. அம்முஸ்லிம்கள் மீது மண்கட்டி, செங்கல், கருங்கல், விறகுக் கட்டை முதலியுவைகள் இடைவிடாமல் மிக்கத் தாராளமாக ஹிந்துக்களால் சரமாரியாகப் பொழியப்பட்டது. தேசத்தின் நன்மையைக் கருதும் ஒவ்வொரு உண்மை ஹிந்துவின் ஹிருதயமும் விஷமத்தனமுள்ள சிற்சில ஹிந்துக்களால் செய்யப்பட்ட அவ்வித அனியாய அட்டூழியங்கள் மீது வருத்தமடையவே செய்யும் என்று நாம் திடமாக நம்புகின்ருேம். தங்கள் உள்ளத்தில் பக்ஷபாதத்திற்கு சற்றும் இடங்கொடாத உண்மை ஹிந்துக்கள் இந்தியா சுயராஜ்ய மடைவதற்கு சரியானவழி ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் பரஸ்பர ஐக்ய முடையவராய் இருக்க வேண்டுமென்று நிச்சயமாகத் தெரிந்திருக்கின்றனர். நம் நாட்டில் கல்வி போதிய அளவு பரத்தப்படாததின் காரணமாக நம் ஹிந்து சகோதரர்கள், முஸ்லிம்கள் அதான் கூறி,ஜமாஅத்துடன்தொழுதுக்கொள்வதின் நன்மையினை நன்கு உணராதிருக்கின்றனர் என நாமும் நிச்சயமாகச் சொல்வோம். இல்லையேல் இவ்வாறு வீண் கலகமும் புரளியும் உற்பத்தியாக முடியாது. ஆகவே முஸ்லிம்கள் அதான் சொல்வதின் நன்மையைக் குறித்தும், ஒரே இடத்தில் கூட்டமாகக் கூடித் தொழுதுகொள்வதின் உண்மையைப் பற்றியும் நம் இந்து சகோதரர்களின் பார்வைக்காக அடியில் வரைந்து காண்பிக்கின்ருேம். ஹிந்து சகோதரர்கள் மனதிலுள்ள பட்சபாதமான எண்ணங்களாகிய மாசு மறுசளைக் களைந்து இந்திய தேசத்தின் நற்கதிக்காகுமான நல்லெண்ணங்களோடு கூடிய பரிசுத்த மனதுடன் இவ்விஷயத்தை நன்கு கவனித்துப் பார்ப்பார்கள் என்று நம்புகின்ருேம்.

பாங்கின் அவசியம்

ஹிந்து சகோதரர்காள்! இஸ்லாம் மதமானது உலகத்தின் கண்ணுள்ள சகல மானிடவர்கத்தாரும் உண்மை சமத்துவத்தையும் சகோதர முறைகளையும் நிலை நிறுத்தவும், எந்தக் காரியத்தையும் சீரிய சட்ட திட்டங்களால் நன்கு ஆராய்ந்து நிறைவேற்றுவதற்குரிய போதனைகளை அளிப்பதற்குமே தோன்றியுள்ளது. இதனுலேயே அது ஆண்டவனை வணக்கம் புரியவேண்டிய காரியங்களிலுங் கூட கூட்டமாகச் சேர்ந்து நடத்துவதற்கே கட்டளை பிறப்பித்திருக்கின்றது.

இவ்வாருகிய மதக் கடமைகளில் ஒன்ருகிய தொழுகைக்குரிய பல்வேறு விதிகளில் தொழ வேண்டிய நேரம் வந்தவுடன் பாங்கு சொல்லப்படுமாயின் சிறியோர் பெரியோர், ஏழை, தனவந்தர் முதலிய யாவரும் ஒன்று சேர்ந்து இறைவனைத் தொழுவதற்காக சந்திக்க வேண்டுமென்பதுமொன்ருகும். ஆனல் யாத்திரை முதலியவை காரணமாக சிலர் சில போழ்தில் காடு, வெளி இடங்களில் இருக்க நேரிடுமாதலானும், சிலர் தனிமையாகவே சில சமயங்களில் வழியாத்திரை போய்க் கொண்டிருப்பார் களாதலானும், சிலர் நோயின் காரணமாக பள்ளிக்கு வரமுடியாத நிலைமையில் இருப்பார்களாதலானும், இன்னோர்கள் தனிமையாக தொழுகையை நிறைவேற்றிக் கொள்ளலாம் என இஸ்லாம் அனுமதித்திருக்கின்றது. அத்தியாவசியம் ஏற்பட்டாலொழிய ஜமாஅத்துத் தொழுகையை விடுவது பெரிய பாவமாகுமென்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. எனவே முஸ்லிம்கள் தங்கள் மதக்கோட்பாட்டின் பிரகாரம் எல்லோரும் ஒன்று சேர்ந்து தொழவேண்டிய அவசியம் உண்டாகி இருப்பது போல் தொழ வேண்டிய நேரம் வந்துவிட்டதென்று அவர்கள் அவ்வப்போது தெரிந்துகொண்டு ஒன்று சேர்வதற்கு தக்க மார்க்க மிருக்க வேண்டியது அவசிய மாகின்றது. அவ்வாறு எல்லோரும் ஒன்று சேர்ந்து தொழ வேண்டிய நேரம் வந்து விட்டதென்று அவர்கள் தெரிந்துக் கொள்வதற்காக அதானைத் தவிர்த்து, வேறு வழிகளாகிய தொழுகைக்கு முன் மணியடித்தல், கொம்பு ஊதல், உயர்ந்த ஓரிடத்தில் நெருப்பு வளர்த்தல், ஆகிய முறைகளை எல்லாம் இஸ்லாம் மதம் கையாண்டிருக்கலாம். ஆனல் அவைகள்யாவற்றையும் இஸ்லாம் சிலாக்கிய மாய்க்கருதவில்லை. தொழுகை நேரத்தை வெளிப்படுத்துவான் வேண்டி அது அதான் கூறுதல் ஒன்றையே தெரிந்தெடுத்திருக்கிறது. காரணமென்னவெனில் இஸ்லாமானது படைத்தவனுக்கும் படைப்புக்களுக்குமிடையில் ஒருநாளும் அகன்று போக முடியாத ஒரு சம்பந்தத்தை நிலை நிறுத்தப்பாடு படுகின்ற மதமாக இருக்கின்றது. அது ஆண்டவனது வன்மையையும் மேன்மையையும் எடுத்துக் காண்பிக்கக் கூடிய போதனைகளாலேயே நிறைந்திருக்கின்றது. நாம் மேலே கூறிய அதானைத் தவிர மற்ற முறைகளெல்லாம் தொழுகை நேரம் வந்து விட்டதென்ற அறிக்கையை மட்டும் ஜனங்களுக்கு தெரிவிக்குமேயல்லாது ஆண்டவனின் வன்மையைப்பற்றிய உணர்ச்சியைக் கொடுக்கவல்லனவாகா. இறைவன் ஒருவனே ; அவனே வணக்கத்திற்குப் பாத்திரமானவன் என்ற ஞானேபதேசங்களும் அவைகளால் வெளிப்படுத்த முடியாது. ஆனல் இஸ்லாம் தெரிந்தெடுத்துள்ள "அதான்" என்னும் முறையிலோ வென்ருல், தொழுகை நேரத்தைக் குறிப்பாக காண்பிப்பதுடனே, ஆண்டவனது பெருமையை வெளிப்படுத்துவதற்குரிய காரியமும் அதில் அமைந்திருக்கின்றது. இதனலேயே ஜமாஅத்துத் தொழுகைக்காக அதான் சொல்வதற்கு இஸ்லாம் மதம் கட்டளை பிறப்பித்திருக்கின்றது.

அதான் என்பதின் அர்த்தம்

முஸ்லிம்களின் தொழுகைக்காக வேண்டி அதான் கூறவேண்டியதின் அவசியத்தைத் தெரிந்துக் கொண்டீர்கள். இனி அதான் என்பதின் பொருளை விளக்கிக் காட்டுகின்ருேம் கவனியுங்கள். அதான் கூறுபவர் முதலில் தம்முடைய கைவிரல்களை இரு காதுகளின் துவாரங்களிலும் வைத்துக்கொள்கிருர். அவ்வாறு செய்வதால் சப்தம் மிக்க ஓசையுடன் தூரத்திலிருக்கும் முஸ்லிம்களின் காதில் விழுகின்றது; உடனே அவர்கள் ஒரு இடத்தில் கூடி ஏக நாயகனை வணங்குவதற்குள்ள வேளை வந்து விட்டதென அறிந்து தொழுகையை நிறைவேற்ற விரைந்து செல்கின்றனர். மூஅத்தின் முதலாவது வாக்கியத்தை "அல்லாஹ் அக்பர்" என்று ஆரம்பஞ் செய்து இருமுறை கூறுகின்ருர். அதன் பொருளாவது "ஆண்டவன் மிகப் பெரியவன்" என்பதாம். பிறகு "அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ்" என்று சப்தமிடுகின்ருர். அதன் அர்த்தமென்னவெனில் "அல்லாஹ் வைத்தவிர வேறு யாவரும் வணங்குவதற்குரியவனன்று என யான் சாட்சியம் கொடுக்கின்றேன்" என்பதே. இதன் பின்னர் "அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்" என்று உரத்த தொனியோடு உரைக்கின்ருர்." ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அல்லாஹ்வின் உண்மைத் தூதராவர்

என்று யான் சாட்சி கொடுக்கின்றேன்'' என்பதே அவ்வாக்கியத்தின் பொருளாகும். பிறகு "ஹய்ய அலஸ்ஸலாத்" என்று கூறுகின்றார். "தொழுகைக்காக தீவிரமாக வாருங்கள்'' என்பதே அதன் பொருள். பின் அதனைத் தொடர்ந்து 'ஹய்ய அலல் பலாஹ்' என்று கூறப்படுகிறது. அதன் கருத்தாவது "வெற்றியைத் தேடி விரைந்து வாருங்கள்'' என்பதே. அப்பால் முதலில் கூறிய வாக்கியத்தை இருமுறை பேரோசையுடன் கூறுகின்றார். கடைசியாக "லாயிலாஹ இல்லல்லாஹ்'' என்னும் வாக்கியத்தால் அதான் முடிவாகின்றது. அதன் பொருளாவது, "வணங்குவதற்கு அவனையன்றி வேறு யாரும் தகுதியானவனாக இல்லை'' என்பதாம். ஆனால் "பஜ்ர்" நேரத்தில் அதான் கூறுபவர் "ஹய்ய அலல் பலாஹ்'' என்று கூறிய பிறகு, அஸ்ஸலாத்து கைரும்மினன் நவ்ம்'' என்ற வாக்கியத்தையும் சேர்த்துக் கூறுகின்றார். இவ்வாக்கியத்தின் அர்த்தமாவது:—(ஏ, தூங்குபவர்களே! தூக்கத்தை விட்டு எழுந்திருங்கள்.) தூக்கத்தை விட தொழுகை மேலானதாகும் என்பதே.

இந்து நண்பர்காள்! முஸ்லிம்களால் கூறப்பட்டுவரும் அதானில், எவரைப்பற்றிய நிந்தனையோ இகழ்ச்சியோ அல்லது யாதொரு கெடுதலோ ஒன்றுமில்லை என்பதை சற்றே கவனித்துப் பாருங்கள். எந்த மதத்தையுங் குறித்து தாக்கிப் பேசுதலும் அதில் கிடையாது. எந்த மனிதனுடைய மனமும் நோகுமாறு அவ்வாக்கியத்தில் ஒரு பதமாவது உபயோகிக்கப்படுவதில்லை. ஆண்டவனுடைய தத்துவம், மகிமை, பெருமை, முதலியவைகளைப்பற்றியும், அவனே வணக்கத்திற்குரியவன் என்பதைப்பற்றியும் அதன் மூலம் வெளியிடப்படுகிறதே யொழிய வெறும் விஷமத்தனமான வாக்கியங்கள் அதில் இல்லை என்பதை வெட்ட வெளிச்சமாகத் தெரிந்துக்கொள்ளலாம். தெய்வத்தைப்பற்றிய இவ்வித சித்தாந்தம் உலகத்தில் காணப்படும் மதங்களெல்லாவற்றாலும் ஒப்புக் கொள்ளப்பட்டதேயாம். தெய்வ வணக்கஸ்தர்களாகிய ஆஸ்திகர்கட்டு பாங்கு சொல்வதில் அமைந்திருக்கும் வாக்கியங்களில் எவ்வித ஆட்சேபமும் இராதென திண்ணமாய்க் கூறலாம். பரமாத்மாவே பூஜிப்பதற்குரியது என்று ஒவ்வொரு ஹிந்துவும் நம்பிக்கைகொள்வது ஆவசியமாக இருக்கின்றது. ஆனால் இவ்வித நம்பிக்கை கொள்ளக் கூடிய நம் ஹிந்து நண்பர்கள் பின்னை எதற்காக முஸ்லிம்கள் தங்கள் தெய்வத்தின் வன்மையைக் குறித்து புகழ்ந்துரைப்பதற்கு இடமில்லாது தடுக்க முன்வருகின்றனரோ தெரியவில்லை. அஃது மிக பேராச்சரியமாக இருக்கின்றது. ஆண்டவனை வணங்காமலிருப்பது பாவமென்றறிந்திருந்தும் அவ்விதம் வணங்கும் முஸ்லிம்களை வணங்கவொட்டாதபடி என்ன காரணத்தால் தடுக்கவும் கல்லெறியவும் தடியாலடிக்கவும் முயற்சி செய்கின்றனரோ? இவ்வித செய்கையால் இந்தியர்களின் அறியாமை நன்கு விளக்கமாகுமே தவிர, இந்திய நாடு சுயராஜ்யம் பெறுவதற்கு வழி ஏற்படப்போவதில்லை.

சகோதரர்காள்! நீங்கள் சுயராஜ்யத்தை விரும்புகின்றீர்கள்; ஆனால் நீங்கள் அந்த சுயராஜ்யம் என்ன வென்பதைத் தெரிந்து கொள்ளாமலிருக்கலாம். சுயராஜ்யம் என்பது தங்கள் ராஜ்யம் எனப் பொருள்படும். சுயராஜ்யம் பெறுவதின் கருத்தாவது:— ஒவ்வொரு இந்தியனும் தன் காரியத்தில் சுயேச்சை பெற்றிருக்க வேண்டும்; எக்காரியத்திலாவது ஒருவருக்கொருவர் மனம் நோவுமாறு நடந்துக் கொள்ளாமல் இருக்க வேண்டும் என்பதே. அதான் சொல்வதையும் அதன் பொருளையுங்குறித்து உங்களுக்கு நன்கு விளக்கியுள்ளோம் அதில் உங்களைப் பற்றியோ அல்லது உங்கள் மதத்தைப் பற்றியோ ஏதாவது விஷமத்தனமாகக் கூறப்பட்டிருக்கிறதா என்பதை நோக்குவீர்களாகின் முஸ்லிம்கள் அதான் சொல்லவும் தொழுகையை நிறைவேற்றவும் முடியாதபடி தடஸ்தம் செய்வதும், கல்லாலடிப்பதும் எங்குள்ள நீதி முறையாகும்? அன்பர்காள்! இவ்வாறான நீசத்தனமான காரியங்கள் ஏற்படாது செய்து கொள் வீர்களாக. அறிவாளிகள், தேசத்துரோகிகள் என்று இகழும்படியான அத்துணை அதர்ம காரியங்களும் அக்கிரமங்களும் தெரியாத்தனத்தினால் செய்து விட்டு வீணாகக்கெடுதியை விளைவிக்காதீர்கள். இத்தகைய தவறுகளைப் புரிந்து ஹிந்து முஸ்லிம்கள் வீணாக மண்டையை உடைத்துக் கொள்ளாம லிருப்பதற்கு யாவர்க்கும் ஆண்டவன் நல்லறிவுபாலிப்பானாக. சுயநலப் பிரியர்களான தலைவர்களுடன்

சேராதீர்கள். ஒரு விஷயத்தை மட்டும் ஒரு பொழுதும் மறவாதிருக்கவேண்டும். அதாவது நம் நாட்டில் விளையும் இத்தகைய கலகங்கள் யாவற்றும் ஒவ்வொரு ஹிந்து முஸ்லிமும் செய்கிற காரியாதியினல் ஏற்பட்டுப் போய் விடுவதில்லை. ஆனால் சில குறிப்பிட்ட நபர்களாலேயே உண்டாகும் கலகங்களேயாகும். ஒன்றில் அடிபிடி சண்டைகளால் தங்கள் பெயர் பத்திரிகைகள் மூலம் பிரஸ்தாபமாக வேண்டும் என்ற விருப்ப முடையவர்களால் செய்யப் படவேண்டும். அல்லது ஜனங்களுக்குள் வேற்றுமையை உண்டு பண்ணி தங்கள் கொள்கைகளை பரத்தி தலைமை வகிக்கவேண்டுமென்ற விருப்ப முடையவர்களால் செய்யப் படவேண்டும்; அல்லது கலகம் விளைந்ததின் காரணமாக ஏற்படும் வழக்கு விசாரணைகளை நடத்துவதற்குப் பொது ஜனங்களிடம் பணம் வசூலித்துத் தங்கள் காலக்ஷேபத்தை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கமுடையோர்களால் செய்யப்படவேண்டும். இன்னோர் தங்கள் சுய எண்ணங்களை மறைத்துக் கொண்டு இரு சமூகங்களிடை குழப்பத்தினை உண்டு பண்ணி தங்கள் காரியத்தை நிறைவேற்றிக் கொள்கின்றனர். சாமான்ய ஜனங்களிடை ஒருவருக் கொருவர் விஷமஞ் செய்து கொள்ளத்தக்க விதமாக உண்மைக்கு மாற்றமாகிய செய்திகளைப் பரத்தி விடுகின்றனர். உதாரணமாக இவ்வாருன விஷமப் பிரியர்கள் பாங்கு சொல்வது சம்பந்தமாக நம் ஹிந்து நண்பர்களிடஞ் சென்று "அதான் கூறு மிடத்தில் வதியும் ஹிந்துக்கள் நாசமாகப் போகின்றனர்" என்ற தீய பிரசாரத்தைப் பரத்துகின்றனர். சில இடங்களில் "அதான் சப்தத்தைக் கேட்டு ஹிந்து தேவதைகள் ஓடிப் போகின்றன" என்ற நம்பிக்கையினையும் பரத்துகின்றனர்.

சகோதரர்காள்! மேற் கூறிய இரண்டு வாக்கியங்களும் சுத்தப் பொய்யும் கற்பனையுமே அல்லாது அவைகளில் அறவே உண்மைக்கு ஆதாரமேயில்லை. ஹிந்துமுஸ்லிம்களிடை சண்டையை உண்டுபண்ணவேஇப்படிப்பட்ட மூட நம்பிக்கையினை பரத்தி ஆவேச மடையச் செய்கின்றனர். சற்றே யோசித்துப் பாருங்கள். பெரும் நகரங்களில் பள்ளி வாசல்கள் இருக்கும் இடங்களை சூழ்ந்து எவ்வளவோ ஹிந்துக்கள் வாசஞ் செய்கின்றனர்; அவர்கள் எல்லோரும் ஒரு நாளைக்கு ஐந்து நேரமும் அதான் சொல்வதின் ஓசையினைக் கேட்கவே செய்கின்றனர்; இருந்தாலும் அவர்கள் அனைவரும் செல்வம், புத்திர பாக்கியம் முதலியவைகளால் சிறந்தே விளங்குகின்றனர். அதான் சொல்லுமிடங்களிலிருக்கும் ஹிந்துக்கள் அழிந்து போவார்கள் என்பதில் உண்மை இருக்குமாயின், நகரங்களில் பெரும் பான்மையான ஹிந்துக்கள் அளவற்ற செல்வங்களால் நிறையப் பெற்று மஹா ஜனங்களாகக் காணப்படுவதற்குக் காரணமென்ன? முஸ்லிம்களின் அதான் சப்தத்தைக் கேட்ட மாத்திரத்தில் ஹிந்துதேவதைகள் ஓடிப்போகிறதாயிருந்தால் அதனல் ஹிந்து தர்மத்தின் யோக்யதை இவ்வளவு தான் என்பது வெளிப்பட்டுப்போக வில்லையா? இவ்வித கெட்ட எண்ணங்களை பரத்துகின்றவர் சுய நலவாதியாக இருப்பதோடு நில்லாமல், இந்து மதத்தையே அவமானப் படுத்துகின்றவராயும் அதன் விரோதியாயும் இருக்கின்றார். எனவே வெளிப் பார்வைக்கு சிநேகிதர் போன்று நடிக்கும் கபட சிந்தனை உடையோரின் பொய் வார்த்தைகளை நம்பாமல் அறிவாளிகள் தேசத்தில் பரஸ்பர நம்பிக்கை ஏற்படுவதற்கு உழைக்க முன் வருவார்களாக.

நன்றி பாராட்டுதல்:

நம் அரும் மாசிகை ஆரம்பமானது முதல் அதன் அபிவிருத்தியை நாடி அல்லும் பகலும் சதா அதன்மீது அன்புபூண்டு அதன் அபிவிருத்தியை நாடி அநேக நூற்றுக்கணக்கான சந்தாக்களைச் சேர்த்து அனுப்பி மென்மேலும் ஊக்கத்தை அளித்துவரும் கிள்ளான் பிரபல வர்த்தகரும், பொதுநலமே பொருளெனக் கொண்டவருமாகிய ஆலி ஜனுப் K. A. பகீர்முஹம்மத் சாஹிப் அவர்களுக்கு மிக மிக நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

சீன முஸ்லிம்களின் நிலைமை.

இதுகாலை இஸ்லாமிய கல்வியறிவைக் கற்றடையும் பொருட்டு சீன தேசத்திலிருந்து நான்கு மாணவர்கள் எகிப்து நாட்டிற்கு வந்திருக்கின்றனர். அவர்கள் அறபிக் கல்வியில் சிறிது ஞானமுடையவர்களாகயிருந்ததால் அறபி வர்த்தமானப் பத்திரிகைகளை அடிக்கடி பார்த்துக்கொண்டு வந்தனர். அதன்பயனாய் சீன தேசத்தைவிட்டு எகிப்துசென்று இஸ்லாமிய கல்வி கற்க வேண்டுமென்ற விருப்பம் கொள்ளலாயினர். எகிப்திலுள்ள பிரபல இஸ்லாமிய கல்லூரியாகிய "ஜாமிஉல் அஜ்ஹரின்" நிர்வாகிகள் அன்னோரை வரவேற்று கல்லூரியில் மாணவராகச் சேர்த்திருக்கின்றனர். சென்ற மாதம் எகிப்திலுள்ள பத்திரிகை நிருபர்களில் ஒருவர் அம்மாணவர்களை சந்தித்து சீன முஸ்லிம்களின் நிலைமையினைக் குறித்து கேட்டவற்றிற் கெல்லாம் அம்மாணவர்கள் சரியான விடை அளித்துள்ளார்கள்.

நிருபர்:—உங்கள் தேசத்திலுள்ள முஸ்லிம்களின் எண்ணிக்கை எவ்வளவிருக்கும்? அன்னோரின் வைதீக, லௌகீக நிலைமை எவ்வாறிருக்கின்றது?

விடை:— எங்களுக்குத் தெரிந்தமட்டில் ஆங்கு முஸ்லிம்கள் போதுமான அளவில் தான் இருக்கின்றனர் எனக் கூறமுடியும். ஜனத்தொகைக் கேற்ப ஒவ்வொரிடத்திலும் பள்ளிவாசல்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. ஆனால் முஸ்லிம்களின் எண்ணிக்கை சம்பந்தமான சரியான கணக்குத் தொகை தெரியவேண்டுமானால் சர்க்கார் ரிப்போர்ட்களிலிருந்தே நீங்கள் அறிந்துக் கொள்ள முடியும். இன்றைக்கு 6 மாதங்களுக்கு முன் ஒரு முஸ்லிம் அறிஞர், "ஹங்காய்" என்ற இடத்தில் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது சீனத்திலும் அதைச் சூழ்ந்துள்ள பகுதிகளிலும் ஆறு கோடி முஸ்லிம்கள் வாழ்கின்றனர் என்பதாகக் கூறினர். ஆனால் இத்தொகை பொதுவாக உத்தேசத்தில் கூறப்பட்டிருப்பதால் அது மிகக் குறைவென்றே கருதுகின்றோம். நீங்கள் இத்தொகையை ஆதாரமாக வைத்துக் கொண்டு அங்கு வதியும் முஸ்லிம்களின் எண்ணிக்கை எம்மாத்திரம் என அனுமானித்துக் கொள்ளலாம்.

மத உணர்ச்சியும், சமூக நிலைமையும்.

சீன முஸ்லிம்களின் மார்க்க நிலைமையானது மற்ற இஸ்லாமிய நாடுகளிலுள்ள முஸ்லிம்களின் நிலைமையை விட மிக க்ஷீண திசையிலேயே இருக்கின்றது. அங்குள்ள முஸ்லிம்கள் மார்க்கத்தை நன்கு அறியாதவர்களாகவே காணப்படுகின்றனர். இருந்தாலும் மதப்பக்தி அன்னோரிடம் அளவு கடந்து காணப்படுகின்றது. இஸ்லாம் என்ற பெயரைக் கேட்ட மாத்திரமே மித மிஞ்சிய ஆனந்தமும் பரவசமும் அடைகின்றனர். ஆனால் இஸ்லாமிய ஞானத்தில் மிக்கபிற்போக்காளர்களாகவே இருக்கின்றனர். சீன நாடு ஏனைய இஸ்லாமிய நாடுகளுக்கு வெகு தொலை தூரத்திலிருப்பதாலும், இஸ்லாமிய பிரசாரகர்கள் அங்கு விஜயஞ் செய்வது அரிதாக இருப்பதாலும் அங்குள்ள முஸ்லிம்கள் தொன்று தொட்டு பாமர நிலைமையிலேயே இருந்து வருகின்றனர்; அதனால் கல்வி யறிவும், ஞானச் சுடரும் அங்கு பரவுதற்கு இடமில்லாதிருக்கின்றது. சீனத்தில் பல உலமாக்கள் காணப்பட்டபோதிலும், அவர்களின் கல்வியறிவு ஓர் அளவுக்குட்பட்டதாகவே இருக்கின்றது. எனினும் அன்னோர் நல்ல குண விசேஷங்களோடு விளங்குகின்றனர். அநேக ஜனங்கள் அவர்களிடம் வந்து இஸ்லாத்தைத் தழுவவும் செய்கின்றனர். இதுகாலை அங்குள்ள முஸ்லிம்களுக்கு அறபி சமாசாரப் பத்திரிகைகள் மீது அத்தியந்த அபிமானம் ஏற்பட்டு வருகிறது; அநேக சங்கங்கள் மிகப் பலமான அஸ்திவாரங்கள்மீது ஸ்தாபிக்கப்பட்டு வருகிறது. அவைகள் கூடிய சீக்கிரத்தில் முஸ்லிம்களை அறியாமையென்னும் தூக்கத்திலிருந்து எழுப்பி விடும் என நம்புவதற்கு இடமுண்டு. அப்பொழுது தான் இஸ்லாத்தின் உண்மைச் சோதியால் அவர்கள் பிரகாசிப்பர். சீன முஸ்லிம்களின்

வாழ்க்கை நிலையும் சமூக ஒற்றுமையும், ஏனைய சீன வகுப்பினரை விட மிக்க நல்ல ஸ்திதியில்தான் இருக்கின்றது.

முஸ்லிம் சங்கங்களும் பள்ளிகளும்

நிருபர் :—உங்கள் நாட்டில் இஸ்லாமிய சங்கங்கள் நிறுவப்பட்டிருக்கின்றனவா? பள்ளிக் கூடங்களும் பள்ளி வாசல்களும் எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றன ?

விடை :—அவைகள் அநேகமாக ஸ்தாபிக்கப்பட்டுப் போயிருக்கின்றன. இதுபொழுதும் ஸ்தாபிக்கப் பட்டுவருகின்றன. "ஷான்ஷி" "ஷான்ஷேவியோ" முதலிய ஜில்லாக்களில் இஸ்லாமியப் பிரசார வேலைக்காக சில சங்கங்கள் இதுபோது ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. பிற இஸ்லாமிய தேசங்களைப் போன்று சீனத்தில் இஸ்லாத்தைப் பரத்துவதே அவற்றின் முக்கிய நோக்கமாகும். தவிர ஹிந்துஸ்தான், அப்கனிஸ்தான், அரேபியா, எகிப்து, துர்க்கி முதலிய இஸ்லாமிய தேசங்களிலுள்ள முஸ்லிம்களோடு ஒற்றுமையையும் நேசப்பான்மையையும் உண்டு பண்ணுவதற்கு அச்சங்கங்கள் பெரும் முயற்சி செய்து வருகின்றன. சில சங்கங்களின் மூலமாக அருமையான பத்திரிகைகளும் வெளியிடப் படுகின்றன. அவை சீனர்களால் மிக்க கவனத்தோடு வாசிக்கப்படுகின்றன. பள்ளிகள் அங்கு அளவில்லாமலிருக்கின்றன. சில பள்ளிகள் மிகப் பெரியவைகளாகக் காணப்படுகின்றன. கலாசாலைகள் வெகு உன்னத முறையில் நிர்வகிக்கப்படுகின்றன. முஸ்லிம் சிறுவர்கள் ஏனைய சீனர்களைப் பார்க்கினும் அளவற்ற ஊக்கத்துடன் கல்வி பயின்று வருகின்றனர்.

கிறிஸ்தவ மிஷனரிகளின் பிற்போக்கு

நிருபர் :—சீனத்திலுள்ள கிரிஸ்தவ மிஷனரிகளின் நிலைமை என்ன ? அவை தங்கள் நோக்கத்தில் எவ்வளவு தூரம் வெற்றியடைந்திருக்கின்றன ?

விடை :—சுமார் நாற்பது வருடங்களுக்கு முன், சீனதேசம் முழுவதும் கிறிஸ்தவ மிஷனரிகள் கணக்கில்லாது ஏற்பட்டு தக்க ஆதிக்கத்துடன் பலவந்தமாக முயற்சி செய்து வந்தன ; ஆனால் வரவர அவற்றின் பலம் குன்றிவிட்டது; பிரசார வேலைக்காக கிறிஸ்தவர்கள் 4 கோடி பவுன்கள் செலவு செய்தும், போதிய வெற்றியடையக் கூடவில்லை. கிறிஸ்துவ மதத்தைத் தழுவிய சீனர்களில் பெரும் பான்மையினர் விக்கிரக வணக்கஸ்தர்களாகவே இருக்கின்றனர். இதுபோது கிரிஸ்தவர்களுக்கு விரோதமாக தேசத்தில் பெரும் கிளர்ச்சிகள் ஏற்பட்டு நாளுக்கு நாள் அவை மேலோங்கியே வருகின்றன. கிறிஸ்தவ மிஷனரிகளில் அமைந்துள்ள ஊழல்களை பாமர மக்கள் செவ்வனே தெரிந்துக் கொண்டிருக்கின்றனர். விசேஷமாக சீனத்திலுள்ள இளவாலிபர்கள் மிஷனரிகளுக்குப் பெரும் எதிரிகளாக ஏற்பட்டது தான் பாதிரிகளுக்கு பரம சங்கடமாக ஆய்விட்டது. இப்போது மிஷனரிகள் தள்ளாடிக்கொண்டும் பெருமூச்சு விட்டுக்கொண்டும் பிரசாரவேலையை அறை குறையாகவே செய்து வருகின்றன. சிறிது காலஞ்செல்வதற்குள் அவ்வியக்கம் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு வந்த வழியே திரும்பிப் போய்விடும் என்றே தோன்றுகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் "கியூஷான்" என்னுமிடத்தில் ஒரு பாதிரியார் பிரசார சம்பந்தமாக உபதேசஞ் செய்துக்கொண்டிருக்கும்போது, கூட்டத்திலிருந்த ஒரு மாணவர் எழுந்து என்ன நோக்கத்தைக் கொண்டு இப்பிரசார வேலையை நடத்துகின்றீர்? என அவரை வினவினர். முதலில் பாதிரியானவர் சிறிது தடுமாறினர். பிறகு சமாளித்துக்கொண்டு "யாங்கள் உங்களுக்கு மோட்சத்தை அடைவதற்குரிய வழியைக் காண்பிப்பதற்காகவும், பாவங்களை விட்டு உங்களை ஈடேற்றுவதற்காகவுமே வந்திருக்கின்றோம்" என்று பதிலிறுத்தார். அதைச் செவியுற்ற மாணவர், "ஏன் !, ஐரோப்பாவில் பாவங்கள் செய்தவர் எவருமில்லையா ? அவர்கள் யாவருக்கும் மீட்சியும் மோட்சமும் கொடுத்தாகிவிட்டதா ?" என்று கேட்டார். பாதிரியாரோ உடனே "அங்கும் பாவிகள் இருக்கத்தான் செய்கின்றனர்." என்றார். "அப்படியாயின் நீர் முதலில் அவர்களிடஞ் சென்று பிரசாரஞ் செய்யும் ; பிறகு எங்களுக்கும் அதன் உண்மையினை கற்பியும்" என்று கூறினர். கூட்டத்திலிருந்து வேறொருவர் எழுந்திருந்து என்ன பாதிரி சாஹிபே ! மதம் என்னும் பெயரை வைத்துக்கொண்டு போலிவேடம் தரித்துத்

தானே திரிகின்றீர்; இவற்றை எல்லாம் நீக்கிவிட்டு உமது சொந்த நோக்கமாகிய தேசிய விஷயங்களைப்பற்றி ஏதேனும் சொல்ல வேண்டியிருந்தால் ஒளிக்காமல் நேரில் சொல்லி விடும் என்று வாயாப்பு கொடுத்தார். அப்பால் பாதிரியார் மிக்க வெட்கமடைந்து பேசாதிருந்து விட்டார். இதிலிருந்து சீன நாட்டில் கிரிஸ்தவ மிஷனரிகள் எவ்வளவு தூரம் மதிக்கப்படுகின்றன வென்பது எளிதில் அறியக் கிடக்கின்றது.

இஸ்லாத்தின் மேன்மை

இவ்வுலகத்திலுள்ள சகல மதங்களின் கொள்கைகளையும் தத்துவங்களையும் நன்கு ஆராய்ந்துபார்க்கின், அவை இஸ்லாம் மதத்திலுள்ள கொள்கைகளைப் போன்று அத்துணை உறுதியும் கட்டுப்பாடும் உடையதாக இருக்கவில்லை என்பதை நன்கு அறிந்து கொள்ளலாம். ஒரு சமூகம் முன்னேற்ற மடைதல், உயர்பதவிகளைப் பெறுதல், கல்வி, நாகரீகம், முன்னேற்றம் இவைகளுக்குரிய விஞ்ஞான அறிவின் வாசலைத் திறத்தல் ஆகியவை எல்லாம் சில விஷயங்களைப் பொறுத்திருக்கின்றது. அவற்றில் மிக முக்கியமானதும் முதன்மையானதுமாகிய விஷயம், ஒரு சமூகத்தின் புத்திப்போக் கென்னும் கண்ணுடியானது மாயா வினோதங்களை நம்புவதாகிய மாசுமறுக்களை விட்டு சுத்தமாக இருக்க வேண்டிய தவசியமாகும் என்பதாகும். ஆதலின் இயற்கைப்பொருள்கள் மீதும் செயற்கைப் பொருள்கள் மீதும் அபிமானத்தை உண்டுபண்ணுவதற்குக் காரணமாய் இருப்பது மூடபக்தியே யாகும். அது புத்தியை மழுங்கச்செய்து விடுகிறது. ஏனெனில் அம் மூட பக்தியானது ஒரு அசுத்தத் திரையைப் போலிருக்கின்றது. அது சமூகத்தை உண்மையைத் துருவிப்பார்க்கும் எல்லைக்கு அணுக விடாது தடுத்து விடுகிறது. அதனால் ஒவ்வொன்றின் இயல்பினையும் நிலைமையினையும் பற்றியவைகளை விளக்கமாகத் தெரிந்துக்கொள்ள முடிவதில்லை. சாதாரணமாக மனிதசுபாவமானது தீயவைகளையும் வெறுக்கத் தக்கனவற்றையுமே அடிக்கடி விரும்பிச் செல்லும் இயல்பினை உடையதாயிருக்கின்றது. ஆகவே ஒரு சமூகமானது மூடபக்தியின் காரணமாக மாய்கைகளை உண்மை—எதார்த்த மென ஒப்புக் கொண்டு விடுமானல் அதன் புத்தியானது மழுங்கிப் போய் விடுகிறது. பிறகு ஒரு விஷயத்தை நன்கு யோசிக்கவும் ஆராய்ச்சி செய்யவும் சக்தி ஏற்படுவது அரிதாய் விடுகிறது. அதனுல் உலகத்தில் காணப்படும் எவ்விதமான மாயாவினோதங்களையும் வெகு விரைவில் மிக லேசாகத் தழுவிச் சென்றுக் கொண்டே இருக்கும்.

ஒரு சமூகத்தை இந்த மூட நம்பிக்கையானது ஒரு விடுத்தம் பற்றிப் பிடித்து விடின் அச்சமூகம் உண்மை அளவில் ஒரு பொழுதும் சேர்வதில்லை. அதன் வாழ் நாளெல்லாம் பொய்யான தோற்றங்களைத் தெய்வமெனப் பூஜிக்கும் வழக்கத்திலேயே கழியும். பயமும், வெருட்சியும் அச்சமூகத்தை வென்றடக்கிவிடும். மிருகம், பறவை முதலியவைகளைக் கண்டால் மிக்க நடுக்கங் கொள்ளும்; காற்றடித்தாலுங்கூட அதன் தேகத்தில் நடுக்க முண்டாகும். மழையின் வேகமும் மின்னலின் இடியும் அதைத் தட்டழியச் செய்யும். சுருங்கக்கூறின் உலகத்திலுள்ள பாக்கியங்கள் அனைத்தும் அச்சமூகத்தை விட்டு அநேக காத தூரம் விலகிப் போகும். அச்சமுகம் வஞ்சனை, சூனியம் முதலியவைகளில் பேர்பெற்ற மாந்ரீகர்களின் மாயாஜாலங்களுக்கு முன்னல் தலை வணங்கி ஏமாந்து நிற்கும்.

ஆனல் மனிதனின் புத்தியை தௌஹீத் (ஆண்டவனை ஒர்மை படுத்திவைப்பது) தென்னும் மூலக் கொள்கையாகிய உரைகல் கொண்டு தேய்த்து மாசுமறுக்களை அகற்றி சுத்தப்படுத்துவதே இஸ்லாத்தின் முதற் கடமையாகயிருக்கின்றது. அதனுல் இஸ்லாம் மதம் மனிதனையோ, அன்றி மற்றைய பொருட்களையோ தெய்வ மென்று வணங்கவோ, அன்றி தன்னையொத்த மனிதப் பிறவிகளைப் கடவுள் அவதாரம் என்று கருதவோ, அவனுல் ஆக்க அளிக்க முடியுமென கருதவோ

கூடாதென மிகக் கண்டிப்பாகப் போதிக்கின்றது. மனித சமூகத்தாருக்கு ஏதேனும் அருள் செய்யவோ சாபமிடவோ, உயிரைக் கைப்பற்றவோ, மோட்சமளிக்கவோ, வாழ்வைக் கொடுக்கவோ, அல்லது தாழ்வைக் கொடுக்கவோ எந்தவிதமான சக்தியும் எந்த மனிதனுக்கோ அன்றி தெய்வமாகப் பாவிக்கப்படும் செயற்கைப் பொருள்களுக்கோ கிடையாதென்பது திண்ணம். இவ்வுலகமும் அதிலுள்ள வஸ்துக்களும் அழிந்துபோன பின் மாறி மாறிக்கொண்டே இதேவிதமாக வருகிறது; பிறகும் அவ்வாறே நிகழ்வுறும். என்று கூறும் மூட நம்பிக்கையினை இஸ்லாமிய தௌஹீதானது அறவே அனுமதிக்கிறதில்லை.

இது தவிர இன்னும் எத்தனையோ மாய்கைகளிருக்கின்றன. அவற்றில் ஒவ்வொன்றும் நம் புத்தியை பிரயோசனமற்றதாகவும், மிகக் கொடியதாகவும் செய்து விடுவதற்குள்ள போதிய சக்தியுடையதாகவே இருக்கின்றது. உலகின்கண் இஸ்லாம் மதம் ஒன்றைத் தவிர மற்றைய எந்த மதங்களின் முந்தாணியும் மேற்படி மாய்கைகளாகிய அழுக்கை விட்டும் சுத்தம் பெற்றதாகக் காணமுடிவதில்லை. இஸ்லாம் மதம் ஒன்றேதான் மனிதப் பிறவியின் சிரேஷ்டத்தைக் குறித்து மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. தவிர, ஒவ்வொரு மனிதனும் மார்க்கத்திலுள்ள மேம்பதவிகளை அடையமுடியுமாதலால் மனிதன் ஆண்டவன் மீது முழு நம்பிக்கையையும் வைக்கும்படி இஸ்லாம் போதிக்கின்றது. அவன் தன்னை ஒரு கேவலப் படைப்பு என்றும், குற்றங் குறைகளால் நிறைந்தவனென்றும் தனக்கு எவ்வித சக்தியும் வன்மையும் மேன்மையும் யோக்கிதையும் கிடையாதென்றும் எண்ணுவது கூடாதென்பது இஸ்லாத்தின் இணையற்ற சித்தாந்தமாகும். ஆகவே மனிதன் மேன்மை சிறப்பு முதலியவைகளை அடையக்கூடிய மார்க்கத்தைக் காண்பித்திருக்கின்றது. அத்துடனே ஒவ்வொரு மனிதனுக்கும் உயர் நிலை மேன்பதவி முதலியவைகளைத் தேடி அடைவதற்கும் பாத்தியதை இருக்கின்றது என்பதையும் உணர்த்துகின்றது. ஜாதிகுல வேற்றுமைகளை அகற்றி யாவரும் சமம் என்னும் சித்தாந்தத்தை நன்கெடுத்துக் காட்டுகின்றது. தவிர, மானிடனது சிரப்பும் மகிமையும் அவனது புத்தியின் நுட்பத்தைக் கொண்டுதான் ஏற்படுகின்றனவென்பதாயும், ஒவ்வொரு சமுகமும் தன் புத்தியைக்கொண்டு ஆராய்ந்து பார்த்துத் திட்டப்படுத்த வேண்டுமென்பதாகவும் கூறுகின்றது. தவிர சந்தேகம், மூட நம்பிக்கை, வெறும் எண்ணம், முதலியவற்றால் உலக இன்பங்களை வெறுத்து வனவாசஞ் செய்தல், பாட்டன், பூட்டன், முதலிய முன்னோர்களின் நடத்தைகளை எல்லாம் ஆதாரமாக வைத்துக் கொண்டிருத்தல் ஆகியவற்றை விலக்கி விடவேண்டுமெனவும் கூறுகின்றது. இவ்வாறு வெறும் எண்ணம், சந்தேகம் இவைகளுக்குப் பகரம் யுக்தியையும் அனுபவஞானத்தையும் கடைப்பிடித்து ஒழுகுதலையே இஸ்லாம் மூலசாசனமாக ஆக்கிக் கொண்டிருக்கின்றது. அவ்விதத் தன்மை இஸ்லாத்திலேயே சிறந்து விளங்குகின்றது. அது இஸ்லாத்தின் சீரிய சிறப்புக்களிலொன்றாகும். முன்னோர்களின் வழியைப் பின்பற்றிக் கொண்டிருக்கமட்டும் இஸ்லாம் போதித்துக் கொண்டிருக்கவில்லை. ஆனால் சகலவித சிரேஷ்டங்களையும் பெற்று மகிழ்ச்சியுறுவதற்கு புத்தியையும் அறிவையும் உபயோகிக்கும்படியே தூண்டுகின்றது. அஞ்ஞானமும் வழிகேடும் புத்தியீனத்தினுடையவும் யோசனைக் குறைவினுடையவும் அடையாளங்களெனக் கூறப்படுகின்றது. இஸ்லாம் தனது சட்டதிட்டங்களின் ஒவ்வோர் அம்சத்தினையும் உண்மைபடுத்துவான் வேண்டி பாமர மக்களின் புத்திக்கும் விளங்கும்படியான சகலவித அனுபவ உதாஹரணங்களை எடுத்துக் காட்டி இருக்கின்றது. திருமறையைத் திறந்து பார்த்தால் சட்டங்கள் மூலம் கட்டளையிடப்பட்டிருக்கு மிடங்களிலெல்லாம் அதன் பிரயோசனங்களைப் பற்றியும் குறிப்பிட்டு விவரிக்கப்பட்டிருப்பது காணலாம். இத்தகைய மேன்மையை வேறெந்த சமயங்களிடமும் காண முடியாது.

ஒரு பிரிவினர் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான சகல துறைகளிலும் உழைக்க வேண்டியதும், மானிடர் விடுதலை அடைவதற்குள்ள நல்வழிகளைக் காண்பிக்கவேண்டியதும், மற்றோர் பிரிவினர் யாவரையும் சரிசமானமாகப் பாவிப்பதில் முயற்சிப்பதற்கு பாடுபடவேண்டியதும் அவசியமாகும். இந்த வகுப்பினர் நற்குணங்களின் நன்மையினையும் தீயகுணங்களின் கெடுதிகளையும் எடுத்து

போதிக்கவேண்டும். மேலும் இஸ்லாத்தின் இரு முக்கியக் கடமைகளாகிய 'ஏவல்' 'விலக்கல்', இவ்விரண்டையும் அச்சமூகம் மறந்துவிடாமல் நன்கு அனுசரிக்கவும் வேண்டும். இதர மதங்கள் இவ்விஷயமாக அவ்வளவு கவனஞ் செலுத்துவதில்லை. இஸ்லாத்தில் சிறப்பும் மேன்மையும் பொருந்திய பல சட்ட திட்டங்கள் நிறைந்திருந்தும் நம் முஸ்லிம்கள் அவற்றை அனுசரிக்க அவ்வளவாக அக்கரை கொள்கின்றார்களில்லை. அவர்கள் தக்கப்படி உழைக்கின் உலகிலேயே மிக மேன்மையாக விளங்குவார்கள் என்பது திண்ணம்.

முஸ்லிம்களது வீழ்ச்சிக்குக் காரணம்

நாயகம் (ஸல்) அவர்களது அருள்மொழியின் விரித்துரை.

இஸ்லாத்தின் ஜோதி பிரகாசிப்பதற்கு முன்னர், இவ்வுலகமானது அநாச்சாரம், குபிர் முதலிய தீமை என்னும் படுகுழியில் ஆழ்ந்துக் கிடந்தது. இயற்கை யாலேற்படும் அழகும், ஆத்மாவினது உண்மை ஒளிவும் மூடபக்தி என்னும் காரிருளினுள் மறைந்திருந்தது. மனிதர்கள் பாவங்களை அளவில்லாமற் செய்து ஆண்டவனின் வார்த்தைப் பாடுகளை நிலைகுலையச் செய்தார்கள். இவ்வித நிலைமையால் மனிதசமூகம் சீர்கெட்டு உயிரற்றது போல் ஆகி, மறுபடியும் உயிர்த்தெழுந்தது. மலைக்குகைளின் உச்சியிலிருந்து ஒரு ஒளிவு பிரகாசித்து, நெடுங்காலமாக கன்னெஞ்சு, அநீதம், உருவ வணக்கம் முதலிய துர்க்குணமான தீமைகளால் நிறைந்திருந்த உலகத்தை ஒரே யடியாக மாற்றிவிட்டது. பிறகு உலகத்தோர் அளவுகடந்த தயாளம், ஈகை, பேணுதல், சகோதரத்வம், ஏகதெய்வ வணக்கம் முதலிய குணாதிசயங்களால் சிறந்து விளங்கலானார்கள். இவ்வாறு பெரும் மாற்றங்கள் ஏற்பட்டபோது உலகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் நேர்வழி என்னும் ஜோதி பிரகாசிக்கத் தொடங்கியது; வாடிக்கிடந்த பயிர் பச்சைகள்யாவும் பசுமையுற்று செழித்தோங்கின ; இஸ்லாமிய மக்களின் பேரும் சிறப்புமாகிய பேரிகை வையக முழுதும் முழங்கலாயிற்று.

நாம் எவ்வாறிருந்தோம் ?

தூய்மை வாய்ந்த பூமியிலுள்ள "ஹிரா" என்னும் மலைக்குகையிலிருந்து ஒரு மகாப்பெரிய மதபோதகர் தோன்றி நன்னம்பிக்கை, நற்குண நல்லொழுக்கங்களைக் குறித்து ஞானோபதேசம் செய்த பொழுது நேர்வழியினைநாடிய ஒவ்வொரு மனிதனும் அறிவு, நற்கருமம் புரிதல் முதலிய ஆபரணாதிகளால் பொலிவுற விளங்கினர். இது வெறுங் கட்டுக்கதை யன்றி உண்மை சம்பவமேயாகும். இத்தரணியில் காணப்படும் ஒவ்வோர் பரமாணுவுங்கூட இதற்குத் தக்க சாட்சி பகரும்.

இன்று அதிக பிற்போக்காளர் என்று கருதப்படுகிற அதிர்ஷ்டக் குறைவுக்கு ஆளாகிய முஸ்லிம்களாகிய நாம், முன்னம் உண்மை அறிவுக்கும் சத்திய நெறியினுக்கும் உறைவிடமாக இருந்தோம்; நமது சீரிய நடை என்னும் சூரியனின் கிரணங்கள் உலக முழுவதிலும் ஒளி வீசிக்கொண்டிருந்தது ; நம்முடைய சத்தியத்தன்மையும் சன்மார்க்க நெறியும் உலகோர் வியக்கத்தக்கனவாயும் உதாஹரணமாக எடுத்துக் காட்டுவதற்குரியனவாயுமிருந்தன. நாம் மன்னிப்புச் செய்வதற்கும், கொடை அளிப்பதற்கும் சக்ரவர்த்தியாக யிருக்குங்காலையில், ஆண்டவனது கட்டளையை நிறைவேற்றுவதில் ஞாபகம் வைப்பது என்னும் முந்தாணியைக் கைவிடாதிருந்தோம்; அளவற்ற தயாள முள்ளவர்களாகவும், கோழை மனதுடையவர்களாகவுமிருந்தோம்; கீர்த்தி பிரஸ்தாபம் வகித்திருந்தோம்; ஆனல் பாவம், அனியாயம் செய்வதைப் பார்த்து சகியாதவர்களாய்விட்டோம். பெரும் கொடை வள்ளல்களாகயிருந்தோம்; ஆனல் வீண்செலவு செய்கிறவர்களாக இருக்கவில்லை. நம்முடைய எண்ணிக்கையானது அதிக மில்லாது போயினும் உலகத்தின் பகுதி பாகத்தினை ஜெயித்தவர்களாகயிருந்தோம் ; விலையுயர்ந்த ஆயு

தங்களும் தள்வாட சாமான்களும் இல்லா திருந்தும் நாம் கைஸர், கிஸ்ரா முதலிய மன்னாதிமன்னர்களின் முடியரசை வீழ்த்தினோம். நாம் ஜெப மாலையை கையிலேந்தி ஜெப தபங்களில் ஈடுபட்டிருக்க விரும்பிய போதிலும் அவசியமான விடத்து போர்க்கவசம் பூண்டு வாளைக் கையில் பிடிப்பதை தஸ்பீஹ் என எண்ணினோம். தயாளமும் அன்பும் கொண்டொழுவதே நம் தொழிலாக இருந்ததெனினும் இறைவனது கட்டளையை அசட்டை செய்பவர்களையும், அவனுக்கு மாறு செய்யும் திருடர்களையும் மன்னித்து விடுவது நம் வேலையாக இருக்கவில்லை. நம் கைவசமிருந்த வாளாயுதங்களோ கறைபிடித்திருந்தன; நாமோ வென்றால் கெதியற்றவர்களாகவும் பரிதாபகரமான நிலைமை யுடையோராகவும் இருந்தோம்; ஆனாலும் பெரிய பெரிய அரசர்கள் எல்லோரும் நம் பெயரைக் கேட்டமாத்திரத்தில் நடுங்கிக்கொண்டிருந்தனர். அக்கிரமக்காரர்களும் பாவிகளும் நம்மைக் கண்டு அஞ்சிக்கொண்டிருந்தனர். ஆனால் ஏழைகள் நம்மால் அன்பாக நடத்தப்பட்டனர்; நாம் ஆண்டவனால் உதவியளிக்கப்பட்டவர்களுடன் சேர்ந்து ஒவ்வொரு இடங்களிலும் ஜெயக்கொடி நாட்டினோம்; ஆனால் ஏழைகளை ஒருபொழுதும் ஹிம்சிக்க மில்லை. அநியாயஞ் செய்யப்பட்டர்களை துன்புறுத்தவுமில்லை. நாம் பெரும் சேனைகளின் அதிபர்களாக விளங்காமற் போயினும், உலகமானது நம்மை நிமிர்ந்து கண்ணெடுத்துப் பார்ப்பதற்குங் கூட சக்தி பெறாமலிருந்தது. நாம் சமத்துவம், ஒற்றுமை இவற்றை பரிபாலிக்கின்றவர்களாகவும், பொறாமை, கட்சிப்பிரிவினை இவற்றிற்குப் பெரும் பகைவர்களாகவுமிருந்ததே இதற்குக் காரணமாகும். எவ்வளவு தாழ்ந்த நிலைமையிலிருந்தாலும் ஒருவருக்கொருவர் உதவி ஒத்தாசை புரிவதே நம் கடமையாக இருந்தது; ஆனால் இன்று இவ்வித விசேஷங்களெல்லாம் நம்மிடத்தில் காணப்படுகின்றனவா என்று கவனிப்போமாயின் இல்லவே இல்லை என்னும் முடிவுக்குத்தான் வருவோம்.

நாம் எவ்வாறாய் விட்டோம்.

நாம் முன் எவ்வாறிருந்தோம் எனத் தெரிந்துக் கொண்டோம். இனி இன்று எவ்வாறிருக்கின்றோம் என்பதைத் தெரிந்துக் கொள்ளவேண்டும். இதுகாலை பழிப்பிற்கும் நிந்தனைக்கும் ஆளாகியவர்கள் நம் சமூகத்தைப்போன்று வேறு எச் சமூகத்திலுமில்லை. ஜனத்தொகைக்கோ குறைவில்லை. எனினும் பெருமையிலும் சிறப்பிலும் நாம் பேறு கெட்டவர்களாக இருக்கின்றோம். இன்று நம்மிடம் தயாளமும் அன்பும் காணப்படுவதில்லை. பத்தினித் தனமும், தூய்மையும் கிடையா. ஸ்திர புத்தியும் உறுதியும் அரிதாக இருக்கின்றது; முயற்சியும் ஊக்கமும் நம்மை விட்டகன்று விட்டது. இவை எல்லாவற்றையும் விட்டு விடுவோம், உணர்ச்சியும் அறிவுமாவது இருக்கிறதாவெனின் அதுவும் அரிதாகக் காணப்படுகிறது. சன்மார்க்கத்தையும் ஜீவகாருண்யத்தையும் நாம் அனுசரிக்கின்றோமா வெனில் அதுவும் கிடையா. அச்சமும் ஆண்மையும் நம்மிடம் நிறைந்திருக்கின்றவா? அதுவுமில்லை. நீதமுடையவர்களாக இருக்கின்றோமா? அதுவுமில்லை. போகட்டும், ஒற்றுமையும் உள்ளன்பும் நம்பால் காணப்படுகிறதா? என்று பார்ப்போமாயின் இல்லை என்னும் முடிவுக்கே வருவோம். நம்முடைய பெருமைக்கும் சிறப்புக்கும் காரணமாக இருந்த ஒவ்வொரு விசேஷங்களும் நம்மைவிட்டுப்படிப்படியாக நழுவிவிட்டன. ஆதலின் இன்று நாம் முற்காலத்திலிருந்தவர்களை போன்று ஆய்விட்டோம்.

பின்னும் அதே தவறு.

வெகுகாலத்திற்கு முன்னிருந்த அதே இருள் உலகத்தில் மறுபடியும் இன்று தலை காட்டிக் கொண்டிருக்கின்றது. அதனால் நாம் திரும்பவும் அறியாதவர்களாகி விட்டோம். இஸ்லாத்திற்கு முன்னிருந்த பெரும் அநாச்சாரமான நிலைமையே இன்று நம்மிடம் இருக்கின்றது. ஆனால் காரணங்கள் வெவ்வேறாக இருக்கின்றது. அதாவது:—முற்காலத்திலோ வென்றால் அறியாமையாலும் மடமையாலுமே துராச்சாரமும், வழிகேடும் பரவிக்கொண்டிருந்தன. இக்காலத்திலோ சர்வ அக்கிரமங்களும் மதிகெட்ட நடத்தைகளும், நாகரீகம் மார்க்க சீர்திருத்தம் என்னும் பெயராலேயே நிகழ்ந்துக் கொண்டிருக்கின்றன. இவை தவிர வேறொரு எவ்வித வித்தியாசமும் அவ்விரண்டு காலங்களுக்குமிடையிலில்லை என்பது திண்ணம். முற்காலத்தில் எங்குபார்த்தாலும் விக்கிரகவணக்கம்

நடைபெற்றுக் கொண்டிருந்தது. இக்காலத்தில் ஒவ்வோரிடத்திலும் சுயநலம் என்னும் மனப்பான்மையால் எண்ணி முடியாத தீமைகள் விளைந்துக் கொண்டிருக்கின்றன. அக்காலத்தில் மனிதர்கள் கற்களை உருவாக சமைத்து பூஜித்தனர். இக் காலத்தில் தங்களையே வெகுவாக மதித்து பூஜிக்கின்றனர். முற்காலத்தில் பொருள் சுவை சொற்சுவை பொருந்திய கவிகள் பாடுவதிலும் வித்வதனத்தை வெளியிட்டு பரிசுகள் பெறுவதிலுமே ஒருவருக் கொருவர் சண்டையும் சச்சரவும் செய்துக் கொண்டிருந்தனர். ஆனால் இன்று சிறு சிறு விஷயங்களின் மீதும் தங்கள் சக்தியையும் பலத்தையும் காண்பிக்க முற்படுகின்றனர். முற்காலத்தில் வம்ச பரம்பரையினை நிலை நாட்டுவதற்காக வாட்கள் வீசப்பட்டன; இது சமயம், அதிகாரம், கௌரவம், செல்வம், முதலியவைகளுக்காக, பெரும் பெரும் சண்டைகளும் குழப்பங்களும் நடைபெருகின்றன. முற்காலத்தில் மனிதர்கள் தங்கள் மனதிலுள்ள ஆசையினை பகிரங்கமாக வெளியிட்டு இன்பமனுபவித்தனர்; இக்காலத்தில் எல்லாம் அறிந்த ஞானியைப் போல் வேடம் பூண்டு அழகிய பூங்கா வனங்களிலுள்ள வாசனை மலர்களைத் திருடிச் செல்கின்றனர். முன்னர் துஷ்டர்கள் கொள்ளையடிக்கும் தொழிலில் வெளிப்படையாக இருந்து வந்தனர்; ஆனால் இன்று தலைவன், குரு, லீடர் என்னும் வேடத்தால் கழுத்துக்கள் அறுக்கப்படுகின்றன. சுருங்கக் கூறுமிடத்து அறிவுச் சுடர் பிரகாசிப்பதற்கு முன் பழங்காலத்தில் ஏதெல்லாம் நிறைந்திருந்ததோ அவை முழுதும் இக்காலத்திலும் காணப்படுகின்றன. உண்மையாக ஆண்டவனை வணங்குவோர் அக்காலத்திலில்லாத்தப் போல் இக்காலத்திலும் கிடைப்பது மிகமிக அரிதாகயிருக்கின்றது.

நாங்கள் சுவர்க்க வாதிகள்.

இவ்வாறு எண்ணரிய அசம்பா விதங்கள் நம் முஸ்லிம்களிடத்து நிறைந்திருந்தும் அவர்கள் கூறும் சமாதானத்தை கவனிக்கின் மிக்க ஆச்சரியம் உண்டாகாமலிராது. அவர்கள் கூறுவதாவது:—“நாங்கள் மோட்சத்திற் கதிபதியாக இருக்கும் போது, அறிவு, அமல், நற்கூலி, தண்டனை இவற்றைக்குறித்து எங்களுக்கு என்ன கவலை. யாங்கள் நேராக பிர்தௌஸ் என்னும் சுவர்க்கத்திற்கே சென்று விடுவோம்; எங்களுக்காக அழகே உருவாகக்கொண்ட தெய்வ ரம்பைகள் பணிவிடை செய்வார்கள்; நாங்கள் ஏதேனும் நன்மை செய்தலும் ஒன்று தான்; செய்யாதிருப்பதும் ஒன்று தான்; எங்களுக்கு புண்ணியம் கிட்டவே செய்யும்; நாங்கள் தான் எப்போதும் நேரான பாதையிலே இருக்கின்றோம்” என்பதே.

மேற்கூறியவாறு பலவாறான வீண் வாதங்களையும் பொய்க் கூற்றுக்களையும் வெளியிடுவதுடனில்லாது பலவித விநோத வார்த்தைகளையும் கூற முற்படுகின்றனர்:—அதாவது முஸ்லிம்கள் தங்கள் சோம்பேறித்தனத்தாலும், மறுமையைப் பற்றிய அச்சமின்மையாலும், வீண் விரயஞ் செய்வதாலும், வறுமை நோயில் அகப்பட்டுக் கொண்டு, அவமானத்திற்காளாகுங் காலை, அதி ஆவேசங்கொண்டவர்களாகி கொஞ்சமும் பயபக்தி இல்லாது கீழ்வருமாறு சொல்ல ஆரம்பிக்கின்றனர். “இறைவன் எங்களுக்குத் தீங்கு செய்துவிட்டான்; அவனுக்கு எங்கள் மீது அறவே கருணை இல்லாமல் போய் விட்டது; அவன் அநீதமே எங்களுக்குச் செய்கின்றான்” என்று கூசாமல் கூறுகின்றனர். இங்ஙனம் கூறுகின்ற அறிவீனர்களிடத்தில். “நீங்கள் உல்லாசமாக சுற்றிவரவும், ஒவ்வொரு நிமிஷத்திலும் உங்களது கட்டளையை ஆண்டவன் நிறை வேற்றிக் கொண்டிருக்கவும் என்ன அவன் உங்கள் ஏஜெண்டா அல்லது பிறைவேட் சிக்ரெட்டறியா? எனக்கேளுங்கள்.

அமல், முயற்சி இவைகளன்றி எந்த சமூகமும் வெற்றியும் முன்னேற்றமும் அடைய முடியாதென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். ஒரு சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் ஜீவன் போலிருப்பது அதன் சிறந்த அனுஷ்டான முறைகளோடு கூடிய வாழ்க்கையே யாம். இதன் நிமித்தமே சர்வரே ஆலம் அவர்கள் “அமல் (செய்கை) இல்லாத (ஈமான்) உறுதியானது உயிரற்ற சடலத்திற் கொப்பாகும். நற்குண நல்லொழுக்கங்களையே “இஸ்லாம்,” என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது.” என்று கூறி இருக்கின்றார்கள் இவ்வாக்கியத்தில் உங்களுக்கு வேண்டிய புத்திமதிகள் இல்லாது போய் விட்டதா?

இருபதாம் ஆண்டு பூர்த்திவிழா.

ரேங்கூன் சோலிய முஸ்லிம் அஸோஸியேஷன் இருபதாமாண்டு பூர்த்திவிழா வைபவம்.

சென்ற 1932-ம் ஹு மார்ச்சுமாதம் 6-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 8 மணிக்கு சோலிய முஸ்லிம் சங்க சபா மண்டபத்தில் மேற்படி அஸோஸியேஷனுடைய இருப தாமாண்டு பூர்த்திவிழா வைபவம் வெகு விமரிசையுடன் நடைபெற்றது. நேர்த்தி யாக அலங்கரிக்கப்பட்டிருந்த சபா மண்ட பம் அங்கத்தினர்களால் நிறைவுற்றிருந்தது.

ஜனாப் வி. எம். பீர்முஹம்மது அம்பலம் அவர்கள் அக்கிராசனம் வகித்தபின் ஜனாப் காரீ ஹாபிஜ் முஹம்மது ஜியாவுல்ஹக் அவர் களால் குர்ஆன் ஷரீபிலிருந்து சில வாக்கி யங்கள் ஓதப்பட்டது. பின்னர் சபா நாயகர் அவர்கள் அடியில் வருமாறு பிரசங்கம் செய்தார்கள்.

அக்கிராசனர் முன்னுரை.

அஸ்ஸலாமு அலைக்கும்,

அன்பார்ந்த சகோதரர்களே!

அறிவிலும் ஆண்டிலும் என்னைப் பார்க் கிக்கினும் மிகச்சிறந்த கனவான்கள் கூடி யுள்ள இம்மகாசபைக்கு என்னை அக்கிராசன திபதியாகத் தெரிந்தெடுத்ததற்காக தங்கள் அனைவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி யறிதலைச் சமர்ப்பித்துக் கொள்கின்றேன். இப்பதவிக்கு நான் அருகதையற்றவனுய் இருந்தபோதிலும், இச்சங்கத்தின் மீதுள்ள அபிமானமும் இச்சங்கத்தை மென்மேலும் சிறப்புடன் நடத்திவர வேண்டு மென்னும் ஆவலுமே என்னை இப்பதவியை ஏற்றுக் கொள்ளத் தூண்டியிருக்கின்றது. இச்சபை யை ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடத்திவைப் பதற்குத் தாங்களெல்லாரும் எனக்கு உதவி யாக இருந்து கூட்டம் இனிது முடியுறுமாறு செய்வீர்களென பூரணமாய் நம்புகின்றேன்.

இச்சங்கம் தோன்றியகாலத்திலிருந்து இ தற்காகத் தமது பொருளேயும் அரிய காலங் களையும் தியாகஞ் செய்துவந்த நமது தலைவ ராகிய ஸ்ரீமான் வி. மீ. அப்துற்ரஹ்மான் அம்பலம் (மர்ஹூம்) அவர்களை நாம் இழந்து விட்டோம். பிறருடைய புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் பொருட் படுத்தாமல் இச் சங்கத்தை முன்னுக்குக் கொண்டுவரவேண்டு மென்னும் உயரியநோக்கத்துடன் அரும்பெ ரும்முயற்சி எடுத்துவந்த காலஞ்சென்ற நமது தலைவர் அவர்களிடத்தில் நமக்கு உண்மை யான அன்பு இருக்கும் பக்ஷத்தில் அவர் களால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வேலையை நாம் சிறப்பாக நடத்திவருவோமாக. அவ்வாறே நடத்திவருவதற்குத் தாங்களும் ஊக்கமுடன் முன் வந்திருப்பது பற்றி நான் மிகவும் சந் தோஷப்படுகின்றேன். ஆண்டவனும் அவ் வாறே அருள்புரிவானாக.

ஆதலால், என்னைச் சபா நாயகராகத் தெரிந்தெடுத்ததற்காக மற்றுமோர் முறை தங்களுக்கு எனது நன்றியறிதலைச் செலுத்து கின்றேன் எனக்கூறியதுடன் அக்கிராசனதி பதி முன்னுரை முடிந்து சபையின் இதர நட வடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

காரியதரிசி ஜனாப் எம். கே. எ முஹம்மது இப்ராஹீம் அவர்கள் சென்ற வருடத்து அறிக்கையையும், வரவு செலவு கணக்கையும் சபையோர்கள் முன் சமர்ப்பிக்க, அவை கள் ஏகோபித்து அங்கீகரிக்கப்பட்டன.

புது உத்தியோகஸ்தர்கள்.

அதன் பின் புதுவருஷத்துக்கு உத்தியோ கத் தேர்தல் நடைபெற்றதில் ஏகோபித்து தெரிந்தெடுக்கப்பட்ட உத்தியோகஸ்தர்க ளும் நிருவாக சபை அங்கத்தினர்களும் பின் வருமாறு.

அக்கிராசனதிபதி :—ஜனாப் வி. எம். பீர் முஹம்மது அம்பலம்.

உப அக்கிராசனதிபதி:—ஹாஜீ கொ. செ முஹம்மது முகைபித்தீன்

காரியதரிசி :—எம். கே. எ. முஹம்மது இப்ராஹீம்.

உதவி காரியதரிசி:—ஜனாப் ஒ. எச். பீர் முஹம்மது.

பொக்கிஷாதிபர்:—வி. எம். காஸிம் ராவுத்தர்.

புத்தகசாலை அதிபர்:—எ. எம். முஹம்மது ஷரீப்.

நிருவாக சபை அங்கத்தினர்கள்.

1. ஜனுப் வி. அ. சையது முஹம்மது அம்பலம்
2. ,, வி. பீ. மீரா அலீ அம்பலம்
3. ,, ஹாஜீ எம். பி. அப்துல் அஜீஜ் மரைக்காயர்.
4. ,, எம். இப்ராஹீம் கனி
5. ,, ம. கா. முகையித்தீன் ராவுத்தர்
6. ,, வி. எஸ். அலியார் அம்பலம்
7. ,, கு. சி. ஆ. முஹம்மது சுல்த்தான் அம்பலம்
8. ,, ஹாஜீ கூ. ஷாஹுல் ஹமீது
9. ,, ந. வா. முஹம்மது இப்ராஹீம்
10. ,, கே. எல். எம். அஹ்மது முகியித்தீன் ஆலிம் சாஹிபு
11. ,, உ. கா. மீ. ஹபீப் முஹம்மது
12. ,, எஸ். என். இஸ்மாயீல்
13. ,, என். எம். மீராபிள்ளை
14. ,, ஆர். எம். நைனு முஹம்மது ஆலீம்
15. ,, என். எ. அப்துல் லதீப்
16. ,, செ. மு. சையது முகியித்தீன்
17. ,, பீ. மு. ஹமீது
18. ,, என். எ. காதிர் முகியித்தீன்
19. ,, எம். வீ. முகஹம்மது கனி
20. ,, ஹாஜீ. எஸ். சையது அப்துல் காதர்
21. ,, ஆ. இ. நாகூர் மீரு
22. ,, எம். பீ. எ. அப்துல் முத்தலிப்
23. ,, அ. செ. முகியித்தீன் பிள்ளை
24. ,, T. M. ஹேக்முஹம்மது

பின்னர் அக்கிராசனுதிபதியவர்கள் முடிவுரையாக சங்கத்தை எல்லாரும் சேர்ந்து ஆதரித்து முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமென்று கூறியபின் காரியதரிசியால் விஜயம் செய்திருந்த கனவான்களுக்கும் விழாவிற்கு நன்கொடை யளித்தவர்களுக்கும் வந்தனம் கூறப்பட்டது.

முடிவில் அனைவரும் விருந்துண்டபின் கூட்டம் 10- 30 மணிக்கு சிறப்பாக முடிவுற்றது.

ஆராய்ச்சி மேடை.

சாரதாச் சட்டம் அவசியமாம்? பா. தா. வின் கூற்று

(M. V. அப்துல் ஜப்பார் சாஹிப்வரைவது)

பால்ய விவாகத்தடைச் சட்டம் இஸ்லாத்திற்கு முற்றமுற்ற விரோதமான தென்பதைபன்முறையும் பல அறிஞர்களால் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றது. அச்சட்டம் ரத்து செய்யப்படவேண்டியது மிகமிக ஆவசியமானதேயாகும். இதற்காக நம் முஸ்லிம்கள் கிளர்ச்சி செய்து வருகிறுர்கள் என்பது யாவரு மறிந்ததே. காலஞ்சென்ற நமது உத்தமத் தலைவர் மௌலானு முஹம்மத் அலீ அவர்கள் அச்சட்டத்தை அகற்ற வேண்டுமென அரும்பாடுபட்டு தாங்களே அவ்விவாகத்தை நடத்திக் காண்பித்துச் சென்றிருக்கிறுர்கள். விஷயம் இவ்வாறிருக்க 11-3-32-ல் வெளியான தா. இ. ல் சாரதாச் சட்டம் முஸ்லிம்களின் மார்க்கத்திற்கு முரணுனதல்ல, வென்பதாயும் அது மிக அவ்சியமான தாகுமென்பதாயும் வற்புறுத்தி எழுதப்பட்டிருப்பதாவது:—

"முஸ்லிம்களின் விவாக முறையும் பாலிய விவாகத்தை ஆதரிப்பதாயில்லை; ஆனுல் முஸ்லிம்கள் எம்பிரான் (ஸல்.) அவர்கள் ஆயிஷாப்பிராட்டியாரை சிறு வயதில் திருமணம் செய்து கொண்டில்லையா? என்று வினவி ஹிந்து வைதீகர்களுடன் சேர்ந்து அச்சட்டத்தை எதிர்கின்றனர். இம் முறை சரியாகாது. எம்பிரான் (ஸல்) அவர்கள் பல முக்கியக்காரணங்களை நாடி 12 மனைவியினரை மணந்து கொண்டனர். ஆனுல் இஸ்லாத்தில் நான்கு மனைவிகளுக்குமேல் மணக்க எந்த முஸ்லிமுக்கும் உரிமையில்லை. அதேபோன்று இஸ்லாத்தின் திருமண முறையானது அந்தரங்கத்திலோ பஹிரங்கத்திலோ பாலிய விவாகத்தையே ஆதரிப்பதாக யில்லை என்றே யாம் கூறுவோம்" என்பதே.

சோதரீர்! சன்மார்க்க விஷயங்களை நன்குணராமல் அதில் தலையிடுவது அறிவாளிகளின் செயலல்ல வென்பதை பா. தா. உணர்ந்துகொள்ளாமலிருப்பது தான் விந்தைக்குறியதாக இருக்கின்றது. இஸ்லாம் பாலிய விவாகத்தையே ஆதரிப்பதாகயில்லை என்பதை அறிந்த இவர், இஸ்லாம் பாலிய விவாகத்தை மறுக்கவில்லை என்பதை உணராது போனதுதான் பேராச்சரியமாகும்.

திருக்குர்ஆன் சகலவித நடப்புகளையும் அறைந்திருக்கின்றது; மாதவிடாய் அற்றுப்போன வயோதிகர்கள், மாதவிடாய் காலத்தை அடையாத சிறுமிகள், கெர்ப்பஸ்திரிகள் எவ்வாறு 'இத்தா' இருக்கவேண்டுமென்று நபிகள் திலகம் (ஸல்.) அவர்களிடம் வினவப்பட்டபொழுது அடியில் குறிப்பிடும் திருவஸனத்தை அல்லாஹ் தஆலா அருள் செய்தான். அதாவது:—

உங்களின் பெண்டீர்களில் மாதவிடாய்அற்றுப்போனவர்கள் (அவர்களின் இத்தாவின் கணக்கில்) குழப்பத்திலாவீர்களானல் அவர்களுடைய இத்தாவானது மூன்று மாதமாகயிருக்கும். இன்னும் மாதவிடாய் எற்ருதவர்கள் (அதுபோலவே மூன்றுமாதம் இத்தாயிருக்கவேண்டும்.) மேலும் கெர்ப்பஸ்திரிகள் அவர்களது (இத்தாவின்) தவணையாகிறது, அவர்களது ஹமலைவைக்கிறதாகயிருக்கும். (அதாவது பிரஸவமாகிறதாயிருக்கும்) (ஸூரத்துத்தலாக்)

இத்திருவஸனம் சிறுமிகளுக்குள்ள இத்தாவின் கணக்கைக் குறிப்பிட்டிருக்கிருக்கின்றது. இத்தாவானது விவாகம் ஏற்பட்ட பிறகு உண்டாகக்கூடிய விஷயமென்பது யாவருமறிந்ததே. ஆதலின் இத்திரு அத்தியாயம் சிறுமிகளின் விவாகத்தை அனுமதிதிருக்கிறதென்பதைத் தெள்ளனத்தெரிந்து கொள்கிறோம். இதை அனுசரித்தே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலமுதல் நாளிதுவரை பாலிய விவாகம் நடைபெற்றே வந்திருக்கின்றது. மேலும் குத்தூமத்பின் மஊஊன் (ரலி) என்பவர்கள் ஜுபைருடைய மகளை அது பிறந்த அன்றே விவாகஞ் செய்து கொடுத்திருக்கின்றார்கள். இதுவிஷயம் சஹாபாக்களுக்குத் தெரியும் (பத்ஹுல் கதிர் 2-ம் வால்யம் 405-ம் பக்கம்.)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆயிஷா நாயகியாரை அவர்களது ஆறுவது பிராயத்தில் திருமணஞ் செய்திருக்கின்றார்கள். இச்சம்பவமானது பால்ய விவாகத்தை அனுமதிக்கிறதென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இதற்கு பா. தா. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நான்கு மனைவிகட்குமேல் மணக்க பிரத்தியேக அனுமதி அளிக்கப்பட்டிருந்ததேபோல் பால்ய விவாக விஷயமாயும் அனுமதி அளிக்கப்பட்டிருந்ததெனக் கூறுகின்றார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கட்கு குஸூஸியத்தென்னும் பிரத்தியேக அனுமதி எந்தெந்த விஷயங்களில் அளிக்கப்பட்டிருக்கிறதென்பதை பா. தா. அறியார்போலும். மற்றவர்களுக்கு விலக்கப்பட்டு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கட்கு மட்டும் அனுமதி அளிக்கப் பெற்றிருந்தவைகளுக்குத் தான் குஸூஸியாத் எனச் சொல்லப்படும். பால்ய விவாக விஷயமாகவோ திரு குர்ஆன் யாவருக்கும் அனுமதி அளித்திருக்கின்றது. இதனை நன்குணராது இஃது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு மட்டும் சொந்தமாகுமெனவரைய முற்படுவது அறிவீனமேயன்றி வேறில்லை. அவர்கள் நான்கு மனைவிகட்குமேல் மணந்திருந்த விஷயம் வேருகும். திருக் குர்ஆன் ஏககாலத்தில் நான்கு மனைவியர்களுக்கு மேல் விவாகம் புரியக்கூடாதென வரையறுத்து விட்டது. பலமுக்கியக் காரணங்களினல் நபிகள் நாயகம் அவர்கட்கு நான்குக்கு மேல்மணக்க அனுமதிக்கப்பட்டிருந்தது. இதுபோலொற்றவைகளுக்குத் தான் அவர்களுக்குள்ள பிரத்தியேக அனுமதி எனச்சொல்லப்படும். இதிலிருந்து பால்ய விவாகம் வற்புறுத்தப்படுகிறதென நினைத்து விடலாகாது. சில சந்தர்ப்பங்களில் உசிதமாகத் தோன்றின், பால்யத்தில் விவாகஞ்செய்துகொள்ள இஸ்லாம் அனுமதிக்கிறதென்பதை ஸ்திரப்படுத்துவது தான் எமது நோக்கமாகும். சாரதாச்சட்டம் இதை மறுக்கக் கூடியதாகயிருக்கின்றது. ஆனது பற்றி முஸ்லிம்கள் மென்மேலும் கிளர்ச்சி செய்து இக்கொடிய சட்டத்தையே அகற்றிவிட முயற்சிக்கவேண்டியது அவசியமானதாகும். முஸ்லிம்கள் இச்சட்டம் நம் சமுகத்திற்கே மா பெரும் பாதகம் விளைவிக்கக் கூடியதாகயிருக்கின்றது எனக்கூறும் நிலைமையில், பா. தா. அவைகளை நன்குணராமல் பால்ய விவாகத் தடைச் சட்டம் முஸ்லிம்களுக்கு அவசியமெனவும், மார்க்கத்திற்கு முறணானதல்ல வெனவும்

வரையத் துணிந்து விட்டார். இஃதெல்லாம் மார்க்கத்தை நன்கறியாமல் பிதற்றும் கூற்றேயன்றி வேறில்லை. பா. தா. தான் திருக்குர்ஆனை நன்கறியாதவர்; அவருக்கு உதவியாக அமைந்துள்ள ஹாபிஸ்பாக்கவீ என்பாரோ குர்ஆனை மணனஞ் செய்தவர்; அவருக்கு பால்ய விவாகசம்பந்தமாக குர்ஆனில் கூறப்பட்டிருப்பவைகள் தெரியாமல் போன காரணந்தான்தெரியவில்லை.உண்மையிலேயே தெரியாது தான் போய்விட்டதா? அல்லது பா. தா. கொண்டுள்ள அபிப்பிராயத்திற்கு (அது முற்றமுற்ற சன்மார்க்கத்திற்கு விரோதமாகயிருக்கும் நிலைமையிலுங்கூட) மாறுகக் கூறலாகா தென்னும் விரதம் பூண்டிருக்கின்றாரு என்பதை அறிகிலேம்.

ஈதுல் அல்ஹா.

உலக முஸ்லிம்கள் கொண்டாடும் மார்க்க சம்பந்தமான திருநாட்களில், முஸ்லிம்கள் உடல், பொருள் ஆவி இம்மூன்றையும் அல்லாஹ்வுக்காக அற்பணஞ்செய்து அவனது கட்டளைப்படி நடக்கவேண்டுமென்பதை ஞாபக மூட்டுவதற்காக துல்ஹஜ்ஜு மீ 10ந் தேதியன்றுகொண்டாடப்படும், ஹஸ்ரத் இப்ராஹீம் அலை ஹிஸ்ஸலாமவர்கள் செய்ததியாகங்களின் அடையாளமாகவுள்ள ஈதுல் அல்ஹாப் பெருநாளு மொன்றாகும். இதுசமீபத்தில் நிகழவிருக்கின்றது. இப்பெருநாளின் பிரதான நோக்கம் யாவருமறிந்ததே. நம் சுத்தசத்திய சன்மார்க்கமானது சந்தோஷங் கொண்டாடும் இந்நாளைக்கு தூய்மையும், திருப்திகரமுமுள்ள சன்மார்க்க சம்மந்தமான சங்கையை அளித்திருக்கின்றது. அந்நாளில் மானிடன் வெளிரங்கமான சந்தோஷங் கொண்டாடுவதற்குமுன் தன் நாயனது நன்றியை நிறைவேற்றுவதற்காக இரண்டு ரக்அத்துத் தொழவேண்டுமென்பதை முக்கிய கருமமாய் ஏற்படுத்தி இருக்கின்றது. இதுவன்றி மானிடர் யாவருக்கிடையே சகோதர வாஞ்சை அன்பு முதலியவைகள் ஏற்படுவதற்காக தொழுகை நிறைவேற்றுமிடத்தில் யாவரும் ஒன்று கூடுவதற்குள்ள வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆதலின் அன்று செய்யவேண்டிய மதக்கிரியைகளை மட்டும் இங்கு விவரிப்பாம்.

பெருநாளன்று தொழுகைக்குச் செல்லுமுன் நந்நீராடி, நர்மணம்பூசி நேர்த்தியான உடை அணிந்துகொள்வதும், தொழுகை முடியும் வரை யாதொன்றையும் புசியாதிருப்பதும், தொழுகைக்குச் செல்லும் வழியில் இறைந்து தக்பீர் சொல்லிக்கொண்டு செல்வதும் முஸ்தஹப்பாகும். பெருநாள் தொழுகைக்குமுன் யாதொரு நபில் தொழுகையும் நிறைவேற்றலாகாது.

(ஹனபி மத்ஹபுப்பிரகாரம்)

பெருநாள் தொழுகை இமாம் அபூஹனீபா (ரஹ்.) அவர்களிடம் வாஜிபு. சூரியோதயத்திற்குப்பின், சூரியன் சற்று உயர்ந்ததிலிருந்து அடி சாய்வதற்குள் அத்தொழுகையை நிறைவேற்றவேண்டும். "இந்தப் பெருநாள் தொழுகையை அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுகின்றேன்" என நிர்ணயஞ்செய்து "அல்லாஹு அக்பர்" என தக்பீர் கட்டவேண்டும். இமாமைப் பின்பற்றித் தொழுவோர் "இந்தப் பெருநாள் தொழுகையை இந்த இமாமைப் பின்பற்றி தொடர்ந்து அல்லாஹ்வுக்காகத் தொழுகின்றேன்" என நிய்யத்துச் செய்யவேண்டும். பிறகு தனு (சுப்ஹானகல்லாஹு—ம்ம) ஓதி முடித்து கையை உயர்த்தி தக்பீர் சொல்லி கையைத் தொங்கவிட வேண்டும். இவ்வாறு இருமுறை தக்பீர் சொல்லிக் கையைத் தொங்கவிட்டு மூன்றும் முறையில் முன்போல் தக்பீர் சொல்லிக் கை கட்டிக்கொள்ளவேண்டும். இவ்வாறு மூன்று முறை தக்பீர் சொல்வதில் ஒவ்வொருமுறைக்கிடையில் மூன்று தஸ்பீஹ் ஓதுவதற்குள்ள நேரம் மௌனமாகயிருத்தல்வேண்டும். இவ்விதம் தக்பீர் கட்டுவதில் தக்பீர் தஹ்ரீமாவையுஞ்சேர்த்து நான்கு முறை தக்பீர் சொல்ல வேண்டிய திருக்கும். பிறகு வழக்கப்படி எல்லாத் தொழுகையிலும் ஓதப்படுவதே போன்று அவூது பிஸ்மி, ஸூரயேபாத்

திஹா, கிராஅத் ஆகியவைகளை ஓதி ருகூஉ, ஸுஜூது செய்து இரண்டாவது ரக்கஅத்தை வழக்கம்போல் ஆரம்பித்துத் தொழவேண்டும். ஆனால் கிராஅத் ஓதி முடிந்தபின் முன் கூறிய பிரகாரம் மூன்றுமுறை தக்பீர்சொல்லி கையைத் தொங்கவிடவேண்டும். பின்பு நான்காம்முறை தக்பீர் சொல்லி ருகூஉ செய்ய வேண்டும் அதற்குபின் தொழுகையை முடித்து சலாம்கொடுத்தபின் குத்பா ஓதவேண்டும். இத் தொழுகையைத்தவற விட்டவர் தனித்துக் கலாச்செய்யலாகாது. ஆனால் ஒரு கூட்டத்தினருக்குத் தவறிவிடுமாகில் வேறு பள்ளிக்குச் சென்று ஆங்கு ஜமாஅத்தாக அத்தொழுகையை நிறைவேற்றலாம்.

துல்ஹஜ்ஜு மாதம் ஒன்பதாம் தேதி முதல் 13-ம் தேதி வரையிலுள்ள ஐந்து நாட்கட்கும் "அய்யாமுத்தஷ்ரீக்" எனப்படும் இத்தினங்களின் முதல் நாள் "பஜ்ர்" தொழுகையிலிருந்து கடைசி நாளாகிய 13-ம் நாள் "அஸர்" தொழுகை முடியவுள்ள 23 நேரத்து பர்லு தொழுகைக்குப் பின் தக்பீர் ஓதுவது இமாம், முக்ததீ ஆகிய இருவர் பேரிலும் வாஜிபாகும். தொழுகை முடிந்த பின் இமாம், முக்ததீ யாவரும் சேர்ந்து தக்பீர் ஓதவேண்டும். தனியே தொழுபவர்களுக்கு வாஜிபில்லை. இமாம் மறதியாக தக்பீர் சொல்வதை விட்டுவிட்டால் அவரைப் பின்பற்றித் தொழுவோர் தக்பீர் சொல்லவேண்டும்.

(ஷாபிஈ மத்ஹப்பிரகாரம்.)

ஈதுப் பெருநாள் தொகை சுன்னத்த முஅக்கதாவாகும். சூரியன் உதித்தது முதல் நடுப்பகல் வரையிலுள்ள நேரங்களில் தொழ வேண்டும். அன்று நீராடி நல் உடை தரித்து நர்மணம் பூசி கதிபல்லாதார் காலையிலேயே தொழுகுமிடத்திற்கு வந்து சேர்வதும், இயன்றவர்கள் நடந்து செல்வதும், தொழுகை முடிந்து வரும்போது வேறு பாதையில் வருவதும் தொழுகைக்குப் பின் உல்ஹிய்யாக் கொடுக்கவேண்டிய திருப்பதால் அத்தொழுகையை முன்னதாகவே தொழுது கொள்வதும், தொழுகைக்கு முன் உணவருந்தாமலிருந்து தொழுதபின் உலுஹிய்யாவின் ஈரலைப் புசிப்பதும், அல்லது ஒற்றைப்பட ஈத்தம்பழம் உண்ணுவதும், தொழுகைக்குப் பின் இரண்டு குத்பா ஓதுவதும், முந்திய குத்பாவை ஒன்பது தக்பீர் சொண்டும் இரண்டாவது குத்பாவை ஏழு தக்பீர் கொண்டும் ஆரம்பஞ் செய்வதும், குத்பாவில் அறிவிக்கப்படும் ஒவ்வொரு விஷயங்களுக் கிடையிலும் தக்பீரை மிகுதமாக்குவதும், அரபாவாகிய 9ம் நாள்முதல் அய்யாமுத்தஷ்ரீக் நாட்களின் கடாசி நாளாகிய 13-ம் நாள் வரைக்கும் நிறைவேற்றப்படும் பர்லு, சுன்னத்து, அதா, கலா, ஜனஸா, நேர்ச்சை முதலிய தொழுகை கட்குப் பின்னல் தக்பீர் சொல்வதும், பெருநாளிரவு மஃரிபு முதல் பெரு நாள் தொழுகையின் தக்பீருக்கிடையிலுள்ள நேரத்தில் ஆண் பெண் அனைவரும் மல ஜலபாதை செய்யுமிடம் போன்ற அருவருப்பான இடங்கள் தவிர்த்துள்ள எல்லா இடங்களிலும், சகல சந்தர்ப்பங்களிலும் தக்பீர் சொல்வதும், தொழுகையை ஜமாஅத்தாகத் தொழுவதும் சுன்னத்தாகும். பெருநாள் தொழுகையின் முதலாவது ரக்கஅத்தில் தக்பீர் தஹ்ரீமாவிற்குப்பின் வஜ்ஜஹத்து ஓதியபின் தக்பீர் தஹ்ரீமாவைப் போன்று 7 முறை கையை உயர்த்தி தக்பீர்கட்ட வேண்டும். பின்பு அவூது, பிஸ்மில்லா, கிராஅத் ஓதி ருகூஉ ஸுஜூது முதலியவைகளை வழக்கம் போல் செய்ய வேண்டும். இரண்டாவது ரக்கஅத்தில் தக்பீர் சொல்லி எழும்பியவுடன் அவூது ஓதுவதற்கு முன் ஐந்து முறை கையை உயர்த்தி தக்பீர் கட்டி அவூது, பிஸ்மில்லா, கிராஅத் ஓதி ருகூஉ ஸுஜூது முதலியன வழக்கம்போல் செய்ய வேண்டும். இந்த தக்பீர்களுக் கிடையில் ஸுப்ஹானல்லாஹி வல் ஹம்துலில்லாஹி வலாயிலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் என்பதை நெஞ்சின் கீழ் கை வைத்து ஓத வேண்டும். இந்த தக்பீர்களை இமாம் குறைத்துக்கொண்டால் அவரைப்பின் பற்றித் தொழுவோரும்குறைத்துக்கொள்ளல் ஸுன்னத்தாகும். இமாம் அதிகப் படுத்தினல் பின் தொடர்ந்துதொழுவோர் அதிகப் படுத்தக் கூடாது. ஹனபீ மத்ஹபுடைய இமாமை ஷாபிஈ மத்ஹபுக்காரர்கள் பின் பற்றித் தொழின் அவ்விமாமைப் போன்று மூன்று தக்பீர் சொல்லவேண்டும் அதைப் பார்க்கினும் அதிக மாக்கவேண்டியதில்லை. ஹனபீ மத்ஹபுடையோர் ஷாபிஈ இமாமைப் பின் பற்றித் தொழின், இமாமைத் துயர்ந்து மூன்று தக்பீர் மட்டுஞ் சொல்ல வேண்டியது அவர் அதிகமான தக்பீர் சொல்லும் போது சும்மா யிருந்து விடவேண்டும்.

உல்ஹிய்யா

(ஹனபீ, மத்ஹப்பிரகாரம்)

ஜகாத் விதியான முஸ்லிம் ஆண்பெண் அனைவரும் "ஈதுல்அல்ஹா" தினமாகிய துல்ஹஜ்ஜு மீ 10,11,12, ஆகிய மூன்று தினங்களுக்குள் குர்பானீ செய்வது வாஜிபு. இக்கடமையை நிறைவேற்றுதவர்கள் குற்றவாளியாவார்கள். குர்பானிகொடுக்கக்கடமையில்லாதவர்கள் கொடுத்தால், அதற்குரிய நன்மையைப் பெறுவார்கள். குர்பானி செய்யப்படும் பிராணியின் உரோமங்களின் கணக்குப்படியும், உதிரச் சொட்டுகளின் கணக்குப்படியும் குர்பானீ கொடுத்தவர்கட்கு மறுமையில் நற்கூலி அளிக்கப்படும். இது நமது மார்க்க கிரந்தத்தின் தீர்ப்பு. புஷ்டியுள்ளதும், கொம்புள்ளதும், குற்றமில்லாததுமான பிராணியை குர்பானீ செய்ய வேண்டும். இது நாயகம் (ஸல்.) அவர்களின் கட்டளையாகும். மெலிந்து போனதும், கண் பார்வையில்லாததும், காதில் பாதி அல்லது அதற்கு மேல் அறுக்கப்பட்டதும், கொம்பு பாதி அல்லது அதற்கு மேல் உடைந்து போனது மானவைகளை குர்பானீ செய்வது கூடாது. ஆனால் உடை அடித்த கிடா, மோழைக்கிடா ஆகியவைகள் ஜாயிஸாகும். ஆடு, மாடு, ஒட்டகம். ஆகியவைகளை குர்பானீ செய்யலாம். ஒட்டகம் 5 வயதிற்குக்குறையாத தாகவும்; மாடு, பசு எருமை, எருமைக் கிடா ஆகியவைகள் இரண்டு வயதிற்குக்குறையாத தாகவும், வெள்ளாடு ஒரு வயதிற்குக் குறையாத தாகவும், செம்மறி, தும்பை ஆடு 6 மாதத்திற்குக் குறையாத தாகவுமிருக்க வேண்டும். இது வன்றி வேறு எந்தப் பிராணியையும் குர்பானீ கொடுக்கலாகாது. அப்படிக் கொடுத்தால் அது குர்பானியாக நிறைவேறாது. பசு, எருமை, எருது, எருமைக் கிடா, ஒட்டகம் இவை ஒவ்வொன்றும் ஏழு பேருக்குக் கொடுக்கலாம். ஆதலின் ஏழுபேர் சேர்ந்து ஒரு பசுவையோ அல்லது எருதையோ ஒட்டகத்தையோ குர்பானீ கொடுக்கலாம். ஆனால் அந்த ஏழுபேரும் குர்பானீ கொடுப்பவர்களாகவே இருக்கவேண்டும். அவர்களிற் சிலர் குர்பானீ கொடுப்பவராயும், மற்றவர் குர்பானியுடைய நிய்யத்தில்லாமல் மாமிசம் வாங்குகின்ற அல்லது விற்பனை செய்கின்ற எண்ணத்துடன் அதில் சேர்ந்திருந்தால் அந்த குர்பானீ ஆண்டவனிடத்தில் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது. ஆதலால் குர்பானீ கொடுக்க நிய்யத்தில்லாத எவரையும் குர்பானியில் சேர்த்துக் கொள்ளக் கூடாது. குர்பானிக்காக அன்று புதிதாக வாங்கிய பிராணியைப் பார்க்கினும் வீட்டில் வளர்த்ததை அறுப்பது நலமாகும். வீட்டிலேயே வைத்து வளத்ததின் மீது அதிகப்பற்று ஏற்பட்டிருக்கு மாதலின் அதைக் கொடுப்பதில் அதிக நன்மையுண்டு. தன் கையினுலேயே குர்பானீ செய்ய வேண்டும். வெறொருவரைச் செய்ய ஏவினுல் குர்பானீ செய்யு மிடத்தில் அவன் கூடயிருக்கவேண்டும். பலர் கூட்டாகச் சேர்ந்து செய்த குர்பானியாக யிருந்தால் அதன் மாமிசத்தை நிறுத்து பாகம் செய்து கொள்ளவேண்டும். உத்தேசமாகப் பங்கிட்டுக்கொள்ள லாகாது. குர்பானீ மாமிசத்தை மூன்று சமபாகமாகப் பிரித்து, ஒரு பாகத்தை ஏழைகட்கும், மிஸ்கீன்களுக்கும் கொடுக்கவேண்டும். பாக்கியுள்ள இரண்டு பாகத்தைத் தானும் தன் குடும்பத்தினரும் தன் பந்து மித்திரரும் உபயோகித்துக் கொள்ளலாம். இறந்து போனவர் இறந்துபோகும் சமயத்தில் வஸிய்யத்துச் செய்திருந்து அதற்காக அவர் சார்பில் குர்பானீ செய்தால் அதன் மாமிசமனைத்தையும் ஏழை எளியோருக்குக் கொடுத்து விடவேண்டும். வஸிய்யத்துச்செய்யாமல் இறந்து போய் தாமாக அவர் சார்பில் குர்பானீ செய்தால் அந்த மாமிசத்தைத் தானு மனுபவிக்கலாம்.

குர்பானீ செய்பவர் துல்ஹஜ்ஜு மாதம் பிறை பிறந்ததிலிருந்து குர்பானீ செய்யும் வரை தலைக்ஷவரம் செய்து கொள்ளாமலிருப்பது நலம். குர்பானீ கொடுக்கச்சக்தியற்றவர்கள் துல்ஹஜ்ஜு மாதம் ஆரம்பமானதிலிருந்து ஈதுல் அல்ஹாப் பெருநாள்

தொழுகை முடியும்வரை க்ஷவரம் செய்து கொள்ளாமலும் நகம் வெட்டிக் கொள்ளாமலுமிருந்தால் அவர்கட்கும் தவாபு கிடைக்கும்.

குர்பானீ அறுப்பவர்கட்கும், தோலுரிப்பவர்களுக்கும் கூலியை பிரத்தியேகமாகக்கொடுக்க வேண்டும். குர்பானித்தோல் ஏழைகட்கும் மிஸ்கீன்களுக்கும் உரியனவாதலால் அவைகளை மஸ்ஜிது செலவுக்கும் இவைபோன்ற பொதுக்காரியத்திற்கும், பொதுபண்டிற்கும் கொடுக்கக் கூடாது. அறுக்கப்பட்ட பிராணியின் எந்த வஸ்துவையும் காபிர்களுக்குக் கொடுக்கலாகாது. ஈதுல் அல்ஹா தொழுகைக்குப் பின், குர்பானீ செய்யவேண்டும். தொழுகைக்காக வேறிடங்களுக்குச் செல்லும் கிராமவாசிகள் அன்று காலையிலேயே குர்பானீ செய்துவிட்டுச் செல்ல அவர்களுக்கு ஷரீஅத்தில் அனுமதியுண்டு. ஏதேனும் தவிர்க்கமுடியாத அசந்தர்ப்பங்களினால் 10-முதல் 12-ம் நாளைக்குள் குர்பானீ கொடுக்க முடியவில்லையானால் அதன் கிரயத்தை ஸதக்காச் செய்ய வேண்டும். குர்பானிக்காக பிராணி வாங்கப்பட்டிருந்தால், அந்தப் பிராணியை விற்பனை செய்து அந்தத் தொகையை சதக்காக் கொடுத்து விடவேண்டும்.

குர்பானியின் கடைசி நேரமானது பன்னிரண்டாவது நாள் சூரியன் அஸ்தமிப்பதற்கு சற்று முன் வரையாகும். ஆதலின் எவனொருவன் குர்பானீ செய்வதின் முந்திய நாளில் அதற்கு விதியாக்கப் பெற்றுள்ள பொருளாதாரமுள்ளவனாக யிருந்து அதன் கடைசி நாளில் ஏழையாய் விடுவானாயின் அவன் மீது குர்பானீ கடமையாகாது. இராக் காலங்களில் அறுப்பது கொண்டு தவறுதல் ஏற்படுமென்னும் ஐயம் உண்டாவதால் அக்காலங்களில் குர்பானீ செய்தல் மக்ரூஹாகும்.

(ஷாபிஈ மத்ஹப்பிரகாரம்)

ஹஜ்ஜுப் பெருநாள் இரவு பகலில் தனக்கும், தன் பராமரிப்பி லிருப்பவர்களுக்குமுள்ள செலவுகளைவிட்டு, அதிகமான ஐவேஜியுள்ள முஸ்லிமானவர்கள் உலுஹிய்யாக் கொடுப்பது சுன்னத்த முஅக்கதாவாகும். ஆடுமாடு ஒட்டகம் ஆகியவைகளைத்தான் உலுஹிய்யாக் கொடுக்க வேண்டும். இவகைளல்லாத வேறு பிராணிகளைக் கொண்டு உலுஹிய்யாக் கொடுக்கலாகாது. ஆனால் ஒட்டகமும் மாடும் ஏழு பேருக்குப் போதுமானதாகும். அவைகளை அறுக்கும்போது அல்லது அறுப்பதற்குமுன் உல்ஹிய்யாஎன்றுநிய்யத்துச்செய்வதும் ஷர்த்தாகும். இப்படிச்செய்வதற்கு தனக்காக ஒருவரை வக்கீலாக நியமித்துக்கொள்ளலாம். பிராணிகள் சொறி பிடித்தனவாய், அதிகமாக நொண்டுபனவாய், மெலிவினால் மூளை வறண்டனவாய், பயித்தியம் பிடித்தனவாய், குருடாய் ஒற்றைக்கண் பொட்டையாய், மாமிசத்தைக் கெடுத்துவிடக்கூடிய வியாதி உள்ளனவாய் இருத்தல் கூடாது.

ஹஜ்ஜுப் பெருநாளில் சூரியோதயமாகி இரண்டு ரக்கஅத்துத் தொழுது இரண்டு குத்பா ஓதுவதற்கு எவ்வளவு நேரஞ்செல்லுமோ அவ்வளவு நேரம் சென்றதிலிருந்து அய்யா முத்தஷ்ரீக்களின் கடைசிநாள் சூரியாஸ்தமன மாகும்வரை உல்ஹிய்யாக் கொடுக்கலாம். இந்த உல்ஹிய்யாப் பிராணியின் மாமிசத்தில் கொஞ்சமாயினும் ஒருபக்கிருக்காவது கொடுப்பது வாஜிபு. இந்தப் பிராணிகளின் ஈரல்குலையைக் கொடுத்தால் அது மாமிசத்தைக் கொடுத்ததாகாது. அதன் மாமிசத்தைச் சமைத்துப் பக்குவப் படுத்திக் கொடுப்பது கூடாது. அதன் தோலை சதக்காச் செய்துவிடுவதே மேல் ஆனால் அதைத்தன் உபயோகத்தில் வைத்துக்கொள்ள விரும்பின், அதனால் செருப்பு முதலியவற்றைத் தைத்து உபயோகித்துக் கொள்ளலாம். அன்றி வேறு சாமான்களாகச்செய்து அவைகளை வாடகைக்கு விடலாகாது. உலுஹிய்யாக் கொடுப்போர் துல் ஹஜ்ஜுமாதம் முதல் தேதியிலிருந்து உலுஹிய்யாக் கொடுக்கும்வரை க்ஷவரம்செய்துக் கொள்ளாமலும், நகம் வெட்டிக்கொள்ளாமலிருத்தலும், தன்கையினால் உலுஹிய்யா அறுப்பதும், வேறொருவரை அறுக்கும் படி செய்தால்தான் கூடயிருப்பதும் சுன்னத்தாகும். உலுஹிய்யாக் கொடுக்கப்பட்ட பிராணியிலுள்ள எந்த வஸ்துவையும், தோலையும் விற்பனை செய்வதும், அதை அறுப்பவர் கட்கு கூலியாகக் கொடுப்பதும், காபிர்களுக்குக் கொடுப்பதும் ஜாயிஸல்ல.

சோதரீர்! குர்பானீசெய்வதின் மேன்மை அதன் பலாபலன், அதன் விபரம் முதலியவைகளை நன்கறிந்திருக்கின்றீர்கள் இங்கிலை

ண்மையிலும் நம்மிலனேகர் குர்பானீ செய்யாது பொடு போக்காக யிருந்துவிடுகின்றார்கள். ஒரு சிலர் வேறு எந்தெந்த அனு விஷயமான வைகளி லெல்லாம் தங்கள் ஐஸ்வரியங்களை வீணில் செலவிட்டு விடுகின்றனர்; குர்பானீ செய்வதற்கு மனம் வராததால் பணமுடை ஏற்பட்டிருக்கிறதென்னும் போலீ சாக்குப் போக்குகளைச்சொல்ல ஆரம்பஞ் செய்கின்றனர். இச்சாக்குப்போக்குகள் ஆண்டவனது சன்னிதானத்தில் எவ்வாறு ஒப்புக் கொள்ளப்படப்போகிறது? ஒருக்காலுமில்லை என்பது திண்ணம். ஆதலின் நம்மீது கடமையாக்கப்பட்டுள்ள குர்பானீயை நிறைவேற்றி, ஆண்டவனது கட்டளைக்கு அடிபணிந்து நடந்தவர்களது கூட்டத்தில் நம்மனைவோர்களையும் நன்கு திகழும்படி செய்வானாகவும்.

ஆசிரியர் குறிப்பு.

காதியானிக் கோள்கை:-நேயன்மீர்! குலாம் அஹ்மத் காதியானியையும் அவரது கொள்கைகளையும் நாம் பன்முறையும் நம் அரும் மாசிகை வாயிலாய் எடுத்தெழுதி முஸ்லிம் நேயர்கள் அதில் சிக்குண் டுழலாதிருக்கும்படி எச்சரிக்கையும் செய்து வருகின்றோம். அதனை மீண்டும் எழுதவேண்டிய அவசியமிராதென்றே நினைக்கின்றோம். அவர் தன்னை நபீ என்றும் ரஸூலென்றும், மஸீஹென்றும், முஜத்திதென்றும் பலவாறாய்க் கூறியும் எழுதியும் போந்தார். இவர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கட்குப் பின் தன்னை நபீ என்றும் ரசூலென்றும் தாவாச் செய்திருப்பதால் நிக்ஷயமாய் காபிராய் விட்டார் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. திருக் குர்ஆன் அறைவதாவது:— முஹம்மதாகிறவர் உங்களினின்று யாருக்கும் பிதாவல்ல; திட்டமாக அவர் அல்லாஹ்வின் ரசூலாயும் கடைசி நபியாகவு மிருக்கின்றார் என்பதே. இத்திருவஸனத்திற்கு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் உறை கூறுமிடத்து அருளியிருப்பதாவது: - திட்டமாக எனது உம்மத்தில் 30 வழி கேடர்களுண்டாவார்கள்; அதினின்று ஒவ்வொருவனும் நபிப் பட்டத்தை தாவாச் செய்வான்; நான் கடைசி நபியாகயிருக்கின்றேன்; எனக்குப் பின் நபீ கிடையாதென்பதே. (மிஷ்காத் ஷரீப்) இவ்வத்தாக்ஷிகளைக் கொண்டு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கட்குப் பின் நுபுவ்வத்தைக் கொண்டு தஅவாச் செய்பவன் காபிராய் விடுகின்றான் என்பதை தெள்ளெனத் தெரிந்துகொள்கின்றோம். இவருடைய தாவாக்களும், வஹீ இல்ஹாம்களும் பொய்ப் புராணங்களும் இவர் காலத்தே தக்க ஆதாரங்களோடு மறுக்கப்பட்டுப் போயிருக்கின்றது; இவருடைய சாபத்தினால் இவரது விரோதிகள் பிளேக் என்னும் வியாதியைக் கொண்டு சோதிக்கப்படுவார்களெனச் சாற்றினார்; ஆனால் இவரே லாகூரில் பிளேக் நோயால் பீடிக்கப்பட்டு அதனாலேயே மரணமடைந்தார். இவ்வழிக் கேடனை எவரும் பின்பற்றுவது மாபெரும் தவறேயாகும். அவ்வாறிருந்தும் ஒரு சிலர் இவரைப் பின்பற்றி வருகின்றார்கள். லாகூர் அஹ்மதிய்யாக் கூட்டத்தினரும், மிர்ஜா பஷீருத்தினுடைய காதியானிக் கூட்டத்தினரும் இக்குலாம் அஹ்மத்தைப் பின்பற்றியவர்களேயாவர். இக்கூட்டத்தினர் சில நாளைக்கு முன் வட இந்தியாவில் மட்டுமேயிருந்து வந்தனர். தென் இந்தியாவில் இக்கெட்ட கொள்கையின் வாடை சற்றேனுமில்லாதிருந்தது. பா. தா. இக்கெட்ட கோஷ்டியாரிடமிருந்து ஊதியம் பெற்றுக் கொண்டு இத்தவறான கொள்கைகளை தென்னாட்டினும் நம் தமிழ் மக்களிடையே வெகு தந்திரமாகவும் சாதுர்யத்துடனும் திறை மறைவிலிருந்து பறத்திவந்தார். சில சமயத்தில் தாம் அக்கோஷ்டியாருடன் சேரவில்லை என்றும், அவர்கள் கொள்கை சரியான தல்லவென்றும் பகர்வார்; மற்றொரு சமயத்தில் அக்கோஷ்டியார்களின் கொள்கைள் இஸ்லாத்தின் மூலக்கொள்கைகளுக்கு விரோதமான தல்லவென்றும் வரைவார்; இத்தோரணையிலேயே தமிழ் நாட்டில் தமது தீய பிரசாரத்தைச் செய்து வருகின்றார். வழி கெட்ட அஹ்மதிய்யாக்களின் நூல்களை மொழி பெயர்த்து விற்பனையும் செய்து வருகின்றார்.

பரிசுத்தமுடைய நந்தமிழ் நாட்டில் சிற்சில இடங்களில் காதியானிக் கொள்கை வேரூன்ற ஆரம்பித்திருக்கின்றது. தென்னாட்டிலுள்ள ஓரூரில் ஒரு சிலர் அஹ்ல சுன்னத் வல்ஜமா அத்தார்களின் கூட்டத்தை விட்டுப் பிரிந்து தங்களுக்குத் தனியே ஒரு தேவாலயத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் முயற்சிப்பதாகத் தெரிகிறது. குலாம் அஹ்மத்கான் தன்னை நபீ என்றும் ரசூலென்றும்-இல்லை?-அல்லாவென்றுங்கூட தாவாச்செய்துவிட்டதால் அகிலத்தாரடங்கலும் தன்னைஒப்புக்கொள்ள வேண்டும்; அப்படி ஒப்புக்கொள்ளாதவர்கள் காபிராய் விடுவார்களென்றும் கூறிப் போந்தார். அதனால் அவருடைய சிஷ்யர்கள் சுன்னத் வல்ஜமா அத்தார்கள் பின்நின்று தொழுவது கூடாதென மதிக்கின்றனர். காஜாகமாலுத்தீன், முஹம்மதலி முதலிய காதியானி கோஷ்டியினர்களும் நம் சுன்னிகளுடன்சேர்ந்து தொழுவதில்லை. இதனாலேயே வட இந்தியாவிலுள்ள சிற்சில ஊர்களில் குழப்பங்கள் ஏற்பட்டு கோர்ட்டு நடவடிக்கைகளும் ஏற்படலாயிற்று. இதற்கிணங்கவே நமது நாட்டுக் காதியானிகள் தனி ஜமாஅத்து நடத்த முயற்சிக்கின்றனர் போலும். மற்றோரூரில் ஒருவர் குலாம் அஹ்மத் காதியானியை நபீ என்று நிக்ஷயிக்கிறதாகவும், அவருடைய ஒவ்வொரு துளி இரத்தமும் இக்கூற்றுக்குச் சாக்ஷிபகருமெனக் கூறுவதாகவும் அறிகின்றோம். அவ்வாறு சொல்வதுகொண்டு அவன்நிக்ஷயமாய்க் காபிராய் விடுகின்றான். அவனுக்கும் அவனது மனைவிக்கு மிடையிலுள்ள விவாகப்பந்தம் நீங்கி விடுகின்றது. இதன்பின் அப்பெண்ணுடன் அவன் சம்பந்தப்படுவது (ஜினா) விபசாரம் செய்வது போலாய்விடுவதுடன் அதற்குள்ள குற்றமும் கிடைக்க நேரிடுகின்றது. அப்பெண்ணை அவனுடன் சேரவிடாது தடுக்க வேண்டியது அவளின் பெற்றோர் உறவினர்கள் மீது கடமையாய் விடுகின்றது. மேலும் மற்ற முஸ்லிம்கள் அவனுடன் இஸ்லாமிய எச்சம்பந்தமும் வைத்துக் கொள்வது கூடாது. அவன் பஹிரங்கமாய் முஸ்லிம் மகா ஜனங்கள் முன்னிலையில் (தவ்பா) பாவ மன்னிப்புத்தேடி புதிதாகக் கலிமாச் சொல்லி ஈமான் கொண்டு இஸ்லாத்தைத் தழுவிக்கொள்ளாதவரை அவனைக் காபிரென்றே மதிக்கவேண்டும். இந் நிலைமையிலேயே அன்னோன் மரணித்து விடுவானாகில் முஸ்லிம்களை (தபன்) அடக்கஞ் செய்யுமிடத்தில் அவனை அடக்கவுங்கூடாது. இவ்வாறான சட்டதிட்டங்களுக்கவன் ஆளாய் விடுகின்றான். இவைகளை நன்கு ஆலோசியாது புல்லரின் தீய பிரசாரத்தை நம்பி அன்னோன் அவ்வாறு கூறிக்கொண்டிருப்பதாகக் கருதுகின்றோம். உடனே அவன் இக்கெட்ட கொள்கையை விட்டு தவ்பாச்செய்து ஈமானைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டியது அவனுக்கு ஆவசியமானதாக யிருக்கின்றது.

நந்தமிழ் நாட்டில் இக்கெட்ட கொள்கைகள் அஹ்மதிய்யாப் பத்திரிகையின் பிரசாரத்தினாலன்றோ இவ்வாறு பரவி வருகின்றது. இதனாலேயே அப்பத்திரிகையை முஸ்லிம்கள் பார்க்கலாகாதென்று தொண்டு தொட்டே எழுதப்பட்டு வருகின்றது. அதன் நடைப்போக்கிற்காகவே அதனை வாங்கி வாசித்து வருகிறோமென கூறுவர் ஒரு சில வாலிபர். அவர்கள் சன்மார்க்கத்தை நன்கறியாமலிருக்கும் நிலைமையில் இத்தீயப் பிரசாரம் அவர்களைப் பற்றி துன்மார்க்கத்திலாக்கி வைத்து விடுகின்றது; அதனால் அன்னோர் அபரிமிதமான கெடுதிகளுக்காளாய் விடுகின்றனர். அந்தோ, பரிதாபம்? தென்னாட்டு முஸ்லிம்களிடத்தே உலக விவகாரத்தால் காணப்படும் பிரிவினை ஒருபுறமிருக்க, இது பொழுது மார்க்க விஷயத்தில் விதர்ப்பங்களும் குழப்பங்களும் ஏற்படலாயிற்று. இனி முஸ்லிம்கள் யாருக்கோ வந்த விருந்தென அசட்டையாக யிருக்கலாகாது. இக் கெட்ட கொள்கை எங்கிருந்து கிளம்புகின்ற தென்பதை தீர்க்காலோசித்துப் பார்க்கவேண்டும்; அது உற்பத்தியாகும் வழிகளை அடைக்கவேண்டும். அதனை வேருடன் கெல்லி எறிய முயற்சிக்கவேண்டும். சத்தியம் வாழ்க! அசத்தியம் வீழ்க!! தீயப் பிரசாரம் தென்னாட்டை விட்டு ஒழிக!!!

சந்தா நண்பர்களுக்கு

நம் அரும் மாசிகையின் இரண்டாம் ஆண்டு முடிவடைந்து விட்டபடியால் இதுவரை சந்தா செலுத்தாமலிருக்கும் நண்பர்கள் தங்கள் சந்தாவை தாமதியாது அனுப்பிவைப்பார்களென்று நம்புகிறோம். தவிர நடைபெறும் 1932-ம் வருஷத்திற்குள்ள சந்தாவையும் முன் பணமாக அனுப்பி மாசிகையை அபிவிர்த்திக்குக் கொண்டுவருமாறு கோருகிறோம். இதுபொழுது ரிஜிஸ்டர் சார்ஜ் 3 அணவாக உயர்த்தப்பட்டிருப்பதால் வி. பி. அனுப்புவதானல் நேயர்களுக்கு 5 அண வீண்செலவு ஏற்படுகிறது. ஆதலின் நமது பழைய சந்தா நேயர்களும் புதிதாக சேரும் கனவான்களும் தங்கள் சந்தாத் துகையை மணியாடர் மூலம் அனுப்பிக் கொடுக்கும்படி கோருகிறோம்.

நமது மாசிகைக்கு ஏற்படுத்தப் பெற்றுள்ள சந்தாத்தொகை மிகவும் சொற்பமாயிருப்பதால் அதனை மணியார்டர் அனுப்புவது வெளிதேச நண்பர்களுக்கு சிரமமாகயிருக்கும்; ஆதலின், நமது சந்தா நண்பர்களாய,

சிங்கப்பூர் வாசிகள் ஆங்கு "77, மார்க்கட் ஸ்ட்ரீட் மெஸ்ஸர்ஸ் A. M. அப்துல்லா சாஹிபு, 67, அரப் ஸ்டிரீட், M. M. ஷரீப் இவர்களிடமும்,

பினங் வாசிகள் 119, சோலியா ஸ்டிரீட்,
N. K. முஹம்மது கவ்து சாஹிப், அவர்களிடமும்,

பெட்ரேட் மலாய் எஸ்டேட் வாசிகள் "கிள்ளானிலுள்ள ஜனப் K. A. பகீர் முஹம்மத் ஸாஹிப்" அவர்களிடமும்,

ரங்கூன் வாசிகள் "385, மங்கமாரி ஸ்ட்ரீட் சுகரசம் & Co. தர்கா மஸ்ஜித்பேஷ் இமாம் மௌலவீ முஹம்மது யாகூப்சாஹிப்" அவர்களிடமும்,

கொளும்பு வாசிகள், 220-ஸகிண்ட் க்ராஸ் ஸ்ட்ரீட்டிலுள்ள மெஸர்ஸ் A. M. K. ஆலிம் ஸாஹிப் அவர்களிடமும் அவரவர்கள் சந்தாத் தொகையை செலுத்துமாறு கோருகின்றோம்.

அவ்வாறே புதிதாகச் சேரும் அன்பர்களும் செய்வார்களென எதிர்பார்க்கின்றோம்.

"மானேஜர்"

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

48, அங்கப்பன் தெரு, G. T. மதராஸ்.

நமது பத்திரிகை கிடைக்கு மிடங்கள்:—

சிங்கப்பூர்

மெஸர்ஸ் பிரிட்டிஷ் & அமெரிக்கன் நியூஸ் கம்பெனி,
18, பாட்டரி ரோடு.

கோலாலம்பூர்

மெஸர்ஸ் M. M. துல்பகிர் கம்பெனி, மார்கட் ஸ்டிரீட்.

கிள்ளான்

மெஸர்ஸ் K. A. பக்கீர் முஹம்மத் & Co.,
P. O. Box 52.

பினங்

ஜனுப் V. O. ஹஸன் முஹம்மது அவர்கள்,
34, கிட்டாரோடு.

ஜனுப் N. K. முஹம்மத் கவ்து அவர்கள்,
119 ,A. ஷோலியா ஸ்டிரீட்.

ரங்கூன்

ஜனுப் மவ்லவீ முஹம்மத் யாகூப் சாஹிப்
சுகரசம் & Co., 385, மங்மாரி வீதி.

கொழும்பு

ஜனுப் A. M. K. ஆலிம் சாஹிப்,
220, 2nd கிராஸ் ஸ்டிரீட், பெட்டா.

மதராஸ்

மெஸர்ஸ் A. M. K. ஹாஜீ முஹம்மது ஷரீப்,
மரைக்காயர் & பிரதர்,
225, அங்கப்ப நாய்க்கன் தெரு.

ஜனுப் மவ்லவீ M. ஸுல்தான் அஹ்மத் ஸாஹிபு
1/222, அங்கப்ப நாய்க்கன் தெரு.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.